Registered as a News Paper in Sri lanka

விலை : ரூபா 10 .00

தினப்பதிப்பு

# தினமுரசு

THINAMURASU




முரசு - 03 திருவள்ளுவர் ஆண்டு 2044 மாசி 26 ஞாயிற்றுக்கிழமை (10.03.2013) பக்கங்கள் 20 ஓசை - 161
















### போர்க்குற்ற விசாரணையை வலியுறுத்தி

## இலங்கைத் தமிழர் எவரும் தற்கொலை செய்யவில்லை



(கொழும்பு)

அரசுக்கு எதிராக அனைத்துலக போர்க்குற்ற விசாரணையை நடத்தக் கோரி, 2009 மே மாதம் போர் முடிவுக்கு வந்த பின்னர் இலங்கையிலோ அல்லது வெளிநாட்டிலோ எந்தவொரு இலங்கைத் தமிழரும் தற்கொலை செய்து கொள்ளவில்லை என்று ஐ.நா.வுக்கான இலங்கை பிரதித் தூதுவர் மேஜர்

19 ஆம் பக்கம் பார்க்க

## ஊடகவியலாளர் மீதான தாக்குதல் அமைதியை விரும்பாதோரின் செயல்

### ஈ.பி.டி.பி.யின் யாழ் மாவட்ட அமைப்பாளர் கமல் கண்டனம்

(யாழ்ப்பாணம்)

மாறிவரும் இயல்பான அமைதிச் சூழலை விரும்பாத, குடாநாட்டை எப்போதும் பதட்ட நிலையில் வைத்திருக்க விரும்பும் தீய சக்திகளின் நடவடிக்கையே வலம்புரி ஊடகவியலாளர் மீதான தாக்குதலாகும். ஜனநாயக விரோத சக்திகளின் வன்முறைத் தாக்குதலாகவும், கருத்துச் சுதந்திரத்திற்கு விடுக்கப்பட்ட அச்சுறுத்தலாகவும் இதனை நாம் கருதுகின்றோம்.

வலம்புரி பத்திரிகைச் செய்தியாளர் இனந்தெரியாதோரால் கண்மூடித்தனமாகவும், காட்டுமிராண்டித்தனமாகவும் தாக்கப்பட்டமையை ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சி

19 ஆம் பக்கம் பார்க்க



# பிரேரணையின் சொற்பதம்; மாற்றம் செய்ய வலியுறுத்து

(ஜெனிவா)

இலங்கைக்கு எதிராக அமெரிக்கா சமர்ப்பிக்கவுள்ள பிரேரணையில் இடம் பெற்றுள்ள சொற்பதங்களில் மாற்றம் செய்யப்படவேண்டுமென இலங்கைக்கு ஆதரவைத் தெரிவித்துள்ள ரஷ்யா, சீனா, பாகிஸ்தான் மற்றும் கியூபா ஆகிய நாடுகளின் பிரதிநிதிகள் தெரிவித்துள்ளனர்.

இலங்கைக்கு எதிரான அமெரிக்காவின் பிரேரணை ஐ.நா. மனித உரிமை பேரவையில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. இந்தப் பிரேரணையின் விபரம் ஐ.நா. மனித உரிமைப் பேரவையின் இணையத்தளத்தில் நேற்று முன்தினம் நள்ளிரவு வெளியிடப்பட்டது. இலங்கையில் நல்லிணக்கத்தையும் பொறுப்புக் கூறும் கடப்பாட்டையும் மேம்படுத்தல் எனும் தலைப்பில் சமர்ப்பிக்கப்பட்டுள்ள இந்தப் பிரேரணையில் இலங்கையில் இடம்பெற்ற மனித உரிமை மீறல்கள் தொடர்பில் விசாரணை நடத்த வேண்டியதன் அவசியம் குறித்து வலியுறுத்தப்பட்டுள்ளது.

இலங்கைக்கு எதிரான அமெரிக்காவின் பிரேரணை வரைபு நேற்று முன்தினம் ஐ.நா. மனித உரிமை பேரவையின் உறுப்பு நாடுகளின் பிரதிநிதிகளுக்கு கையளிக்கப்பட்டிருந்தது. இதனையடுத்து இந்த பிரேரணை தொடர்பில் விவாதிப்பதற்காக

19 ஆம் பக்கம் பார்க்க

### அரச ஊழியருக்கெதிராக 2 மாதத்தில் 181 முறைப்பாடு

(கொழும்பு)

அரச ஊழியர்களுக்கெதிராக கடந்த 2 மாதத்தில் மட்டும் 181 முறைப்பாடுகள் கிடைத்திருப்பதாக பொது நிர்வாக உள்நாட்டலுவல்கள் அமைச்சர் ஜோன் செனவிரத்ன தெரிவித்துள்ளார்.

கடந்த வாரம் அமைச்சில் நடைபெற்ற விசேட கூட்டத்திலேயே அமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அரச ஊழியர்களுக்கெதிரான முறைப்பாடுகள் அனைத்தும் பொதுமக்களாலேயே செய்யப்பட்டுள்ளது. பொதுமக்களின் முறைப்பாட்டின் படி தெரிவுசெய்யப்பட்ட ஒவ்வொரு மாவட்டத்திலுமுள்ள

19 ஆம் பக்கம் பார்க்க

## யாழ். ரயில் நிலைய சந்திக்கருகில் பலசரக்கு கடை உடைத்து திருட்டு

### அதிகாலைவேளை சம்பவம்

(யாழ்ப்பாணம்)

யாழ். ரயில் நிலையச் சந்திக்கருகாமையில் வைத்தியசாலை வீதியில் அமைந்திருக்கும் பலசரக்கு வியபார நிலையமும் இலத்திரனியல் பொருட்கள் பழுது பார்க்கும் நிலையமும் நேற்று அதிகாலை திருடர்களால் உடைக்கப்பட்டு அதில் பலசரக்குக் கடையிலிருந்து ஒரு இலட்சத்து 10 ஆயிரம் ரூபா ரொக்கப்பணம் உட்பட பொருட்கள் திருடர்களால் கொள்ளையிடப்பட்டுள்ளன.

வைத்தியசாலை வீதியில் அமைந்துள்ள அம்பிகை ஸ்ரோர்ஸ் என்ற பலசரக்குக் கடையே இவ்வாறு திருடர்களால் கொள்ளையிடப்பட்டுள்ளது.

நேற்று முன்தினம் இரவு 9.30 மணியளவில் கடையின் உரிமையாளர் கடையைப் பூட்டிவிட்டு வீடு சென்றிருக்கின்றார். இந்நிலையிலேயே அதிகாலை

19 ஆம் பக்கம் பார்க்க

## பிரேரணையை எதிர்கொள்வதற்கு பயணமானது அதிகாரிகள் குழு

(கொழும்பு)

ஜெனிவா மனித உரிமைகள் பேரவை கூட்டத்தொடரில் இலங்கைக்கு எதிராக சமர்ப்பிக்கப்படவுள்ள பிரேரணையை எதிர்கொள்வதற்காக சட்ட மா அதிபர் திணைக்களத்தின் சிரேஷ்ட அதிகாரிகள் குழுவொன்று ஜெனிவா நோக்கிப் புறப்பட்டுச் சென்றுள்ளதாக சட்ட மா அதிபர் பாலித பெர்னாண்டோ தெரிவித்துள்ளார்.

சட்ட மாஅதிபர் திணைக்கள அதிகாரிகள் நேற்று அதிகாலை ஜெனிவா நோக்கிப் பயணித்ததாக அவர் குறிப்பிட்டார்.

மேலதிக சொலிசிடர் ஜெனரல் சுகத கம்லத் உட்பட பிரதி சொலிசிடர் ஜெனரல்களான சவீந்திர பெர்னாண்டோ மற்றும் டீன்ஸ் நவாஸ் ஆகியோர் ஜெனிவா பயணித்த குழுவில் அடங்கியுள்ளனர்.

இலங்கைக்கு எதிராக சமர்ப்பிக்கப்படவுள்ள பிரேரணை தொர்டர்பில் ஜெனிவாவுக்கு இலங்கையின் நிரந்தர வதிவிடப் பிரதிநிதி ரவிநாத் ஆரியசிங்கவுக்கு இந்தக் குழுவினர் சட்ட உதவிகளை வழங்குவார்கள் என சட்ட மா அதிபர் கூறியுள்ளார்.

அதுதவிர கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழு அறிக்கையின் பரிந்துரைகளை நடைமுறைப் படுத்துவதற்கான ஏற்பாடுகள் அடங்கிய மற்றுமொரு அறிக்கையை ஜெனிவா மனித உரிமைகள் பேரவையில் சமர்ப்பிப்பதற்காக தயாரித்துள்ளதாகவும் அவர்

19 ஆம் பக்கம் பார்க்க

## பிறநாடுகளின் உள்விவகாரங்களில் தலையிடமாட்டாது இந்தியா

### வெளிவிவகார அமைச்சர் தெரிவிப்பு

(புதுடில்லி)

பிற நாடுகளின் உள்விவகாரங்களில் இந்தியா தலையிடமாட்டாது என இந்திய வெளிவிவகார அமைச்சர் சல்மான் குர்சித் தெரிவித்துள்ளார்.

புதுடில்லியில் நேற்று முன்தினம் ஆசிய பசுபிக் அனைத்துலக வர்த்தக சம்மேளன மாநாட்டில் உரையாற்றிய போதே அவர் இவ்வாறு கூறியுள்ளார். அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது,

அடுத்தவரின் பிரச்சினையில் நாம் எப்போதும் தலையிடுவதில்லை.

மற்றைய நாடுகளின் விவகாரங்களில் தலையிட்டு ஒரு தரகராக செயற்பட இந்தியா விரும்புவதில்லை.

பிற நாடுகளின் உள்விவகாரங்களில் இந்தியா எப்போதும் தலையிடாது.

ஆலோசனை கேட்காதவர்க்ளுக்கும், பாதுகாப்பான, நல்ல ஆலோசனையை சரியான நேரத்தில் இந்தியா வழங்கும். இந்தியா இயல்பாக செயற்படவே

19 ஆம் பக்கம் பார்க்க

## பேச்சின் தோல்வியே இராணுவ நடவடிக்கை

### பாதுகாப்புச் செயலர் தெரிவிப்பு

(கொழும்பு)

சமாதானப் பேச்சுவார்த்தை மூலம் யுத்தத்தை முடிவுக்கு கொண்டுவர முயற்சித்த போதும் அது பலனளிக்கவில்லை என பாதுகாப்புச் செயலாளர் கோத்தாபய ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

அதனால் வலுவாக நின்று இராணுவத்தினர் யுத்தத்தின் மூலம் பிரச்சினையை முடிவுக்கு கொண்டுவந்ததாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

19 ஆம் பக்கம் பார்க்க

## ராகுலின் மனதைப் பாதித்த பாலச்சந்திரனின் உயிரிழப்பு

விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரனின் மகன் பாலச்சந்திரனின் கொலை உலகத்தை உலுக்கியது போலவே காங்கிரஸ் கட்சியின் துணைத் தலைவர் ராகுல் காந்தியின் மனதையும் பாதித்துவிட்டது என்று இந்திய ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

கடந்த சில நாட்களுக்கு முன்பு தமிழக தலைவர்களை டில்லியில் சந்தித்த அக்கட்சியின் துணைத் தலைவர் ராகுல் காந்தி, பாலச்சந்திரன் படுகொலை உலகத்தை உலுக்கியது போலவே எனது மனதையும் பாதித்து விட்டது எனத் தெரிவித்துள்ளார்.

பாலச்சந்திரன் கொல்லப்பட்டது சரிதான் என்று ஜனதா கட்சி தலைவர் சுப்ரமணியம் சாமி கருத்து தெரிவித்தார். பாலச்சந்திரன் படுகொலை குறித்து ராகுல் காந்தியிடம் இருந்து விரைவில் இரங்கல் தகவல் வெளியாகலாம் என டில்லி அரசியல் வட்டாரம் தெரிவித்துள்ளதாக அவ் ஊடகங்கள் மேலும் தெரிவித்தன.

# அதி உயர் ஊடக விருது விண்ணப்பம் கோரல்

(யாழ்.நிருபர்)

இலங்கை பத்திரிகை ஆசிரியர் சங்கமும், இலங்கை பத்திரிகை ஸ்தாபனமும் இணைந்து சிறந்த ஊடகவியலாளர்களைக் கௌரவிக்கும் முகமாக அதியுயர் ஊடக விருதுகளை வழங்கவுள்ளன.

ஊடகத்துறையைச் சேர்ந்த சிறந்த அனுபவம் வாய்ந்த நடுவர் குழுவின் மூலம் விருதுகளுக்குத் தகுதியானவர்கள் தெரிவு செய்யப்படவுள்ளனர்.

இலங்கையில் அச்சு ஊடகத்துறையில் பணியாற்றும் ஊடகவியலாளர்களும் இவ்விருதினைப் பெறுவதற்காக விண்ணப்பிக்க முடியும். இதற்கான விண்ணப்பத்தையும் அறிவுறுத்தல் கையேட்டையும் இல.96 கிருய வீதி, கொழும்பு - 05 என்ற முகவரியில் அமைந்துள்ள இலங்கை பத்திரிகை ஸ்தாபனத்தில் இலவசமாகப் பெற்றுக்கொள்ள முடியும். விண்ணப்ப முடிவுத் திகதி மார்ச் 31 என அறிவிக்கப்பட்டுள்ளது. (10)

# சிவராத்திரி உற்சவம்

(சாவகச்சேரி)

சாவகச்சேரி நகர் புராதன தான் தோன்றீஸ்வரர் சிவன் கோயில் சிவராத்திரி உற்சவம் இன்று இடம்பெறுகிறது.

இன்று மாலை 6 மணி முதல் பூஜை வழிபாடுகள் இடம்பெறவுள்ளது. நான்கு சாமப்பூஜைகள் ஒழுங்கு முறையாக ஆகம விதிப்படி நடைபெறவுள்ளதுடன் சங்காபிசேகமும் இடம்பெறவுள்ளது.

கலாநிதி கு.ஜெகதீஸ்வரக் குருக்கள் தலைமையில் இப்பூஜை வழிபாடுகள் இடம்பெறவுள்ளன.

மாலை 6 மணிக்கு 1 ஆம் சாமப்பூஜையும், 9 மணிக்கு இரண்டாம் சாமப் பூஜையும், 12 மணிக்கு லிங்கோற்ப கால பூஜையும் இடம்பெறவுள்ளது. இந்த லிங்கோற்ப கால பூஜையில் இத்திமரத்தடியில் வீற்றிருக்கும் லிங்கோற்பவருக்கு விசேட பூஜை வழிபாடுகள் மிகச் சிறப்பாக இடம்பெற்று அதிகாலை 3 மணிக்கு நான்னம் சாமப் பூஜை வழிபாடுகள் இடம்பெறவுள்ன. (43)

* * * *

(வேலணை)

வேலணை - துறையூர் ஹரிஹர புத்திர ஐயனார் ஆலயத்தில் மஹா சிவராத்திரி உற்சவம் இன்று மாலை 5.00 மணி தொடக்கம் ஆரம்பமாகி நடைபெறவுள்ளது.

இரவு 8.00 மணிக்கு 1 ஆம் சாமப் பூஜையும், 11 மணிக்கு ஸ்நபன அபிஷேகமும், நள்ளிரவு 12 மணிக்கு 2 ஆம் சாமப் பூஜையும், அதிகாலை 3.00 மணிக்கு 3 ஆம் சாமப் பூஜையும், 5 மணிக்கு 4 ஆம் சாமப் பூஜையும் இடம்பெறவுள்ளது. (எஸ்.பி)

* * * *

(யாழ்ப்பாணம்)

வட்டுக்கோட்டை தெக்கணப்பாய் கண்ணகாம்பிகா சமேத கண்ணலிங்கேஸ்வரர் ஆலய மஹா சிவராத்திரி உற்சவம் இன்று மாலை 4.30 மணி தொடக்கம் ஆரம்பமாகி நடைபெறவுள்ளது.

இவ் உற்சவத்தில் நான்கு சாம பூசைகள், அபிஷேக ஆராதனைகள் நடைபெற்று மறுநாள் அதிகாலை திருவூஞ்சல் உற்சவத்தைத் தொடர்ந்து எம்பெருமான் வீதியுலாவரும் காட்சியும் இடம்பெறவுள்ளது. அத்துடன் கலைநிகழ்வுகளும் இடம்பெறவுள்ளன.

* * * *

(யாழ்ப்பாணம்)

வண்னை - சாந்தையார்மடம் ஸ்ரீ கற்பக விநாயகர் கோவில் சைவசமய அபிவிருத்திக் கழகம் ஏற்பாடு செய்துள்ள சிவராத்திரி உற்சவம் இன்று மேற்படி ஆலயத்தில் இடம்பெறவுள்ளது.

இவ் சிவராத்திரி உற்சவத்தில் நான்கு சாம பூசைகளும் இரவு 11 மணிக்கு ஸ்நபன அபிஷேகமும் நடைபெறவுள்ளது.

இரவு 8.00 மணிக்கு 1 ஆம் சாமப் பூஜையும், 11 மணிக்கு ஸ்நபன அபிஷேகமும், நள்ளிரவு 12 மணிக்கு 2 ஆம் சாமப் பூஜையும், அதிகாலை 3.00 மணிக்கு 3 ஆம் சாமப் பூஜையும், 5 மணிக்கு 4 ஆம் சாமப் பூஜையும் இடம்பெறவுள்ளது.

# வன்முறையால் பாதிப்படையும் பெண்களுக்கென விசேட சட்டங்கள் கொண்டுவரப்படவுள்ளன

## – சட்டத்தரணி கோசலை மதன்




(யாழ்ப்பாணம்)

வன்முறைகள், பிரச்சினைகளுக்கு ஆளாகுபவர்கள் பெண்ளோ ஆவார். உடல்உள ரீதியில் அதிகளவில் பெண்கள் பாதிப்படைவதால் பெண்கள், சிறுவர்களுக்கென விசேட சட்டங்கள் கொண்டுவரப்பட்டுள்ளதாக யாழ்.பல்கலைக்கழக சட்ட விரிவுரையாளரும், சட்டத்தரணியுமான திருமதி கோசலை மதன் தெரிவித்தார்.

சிறுவர்களுக்காக அபிவிருத்தி நிலையத்தின் பெண்களின் மாற்றத்திற்கான செயற்பாட்டு வலைப்பின்னலின் வட மாகாண மகளிர் பங்கு பற்றிய சர்வதேச மகளிர் தினம் நேற்று வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெற்றது. இதில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

இன்று பல பெண்கள் தமது பிரச்சினைகளை வெளிக்கொண்டு வருகின்றார்கள். இதன்மூலம் பல்வேறு வகையிலும் தற்போது பெண்கள் சுதந்திரமாகச் செயற்படத் தொடங்கியுள்ளர்கள் என உணரமுடிகிறது.

பெண்களின் பிரச்சினைகள் தொடர்பில் பெண்கள் மட்டுமல்லாது ஆண்களுமாக இருபாலாரும் இணைந்து செயற்பாட்டாலேயே பெண்களின் பிரச்சினைகளுக்கு தீர்வு கிடைக்கும் என்றார்.

வட மாகாண பெண்களின் ம்மாற்றத்திற்கான செயற்பாட்டு வலைப்பின்னலின் தலைவி திருமதி சுகந்தினி சிவகரன் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் யாழ்.மாவட்ட சேவ்த சில்ரன் இணைப்பாளர் திருமதி க.செல்வலக்ஷ்மி, யாழ். மாவட்ட செயலக தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபை இணைப்பாளர் செல்வி க. கோதை சாவற்கட்டு தாரகா மகளிர் மலர்வு மையத்தின் தலைவி திருமதி சைலா இதயராஜ் ஆகியோர் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்டிருந்தனர்.

இந்நிகழ்வில் வாழ்த்துரை பெண்கள் எழுச்சிப் பாடலுக்கான நாடகம், கவியரங்கம், வில்லுப்பாட்டு, பாட்டு நாடகம் என பல கலைநிகழ்வுகள் இடம்பெற்றதோடு பணியாளர் கௌரவிப்பும் இடம்பெற்றது. (இ)

# அங்குரார்ப்பணம்

வலி.கிழக்கு விவசாய அபிவிருத்திச் சபையின் அங்குரார்ப்பண நிகழ்வு இன்று பிற்பகல் 4 மணிக்கு சிறுப்பிட்டி இந்து தமிழ் கலவன் பாடசாலைக்கு அருகில் உள்ள ஜி.ரி.எம்.எஸ். பொது நோக்கு மண்டபத்தில் விவசாய அபிவிருத்திச் சபையின் தலைவர் அ.தம்பிநாதன் தலைமையில் நடைபெறவுள்ளது.

பிரதம விருந்தினராக ஈ.பி.டி.பி.யின் யாழ். மாவட்ட அமைப்பாளர் க.கமலேந்திரன், சிறப்பு விருந்தினராக கோப்பாய் பிரதேச செயலர் ம.பிரதீபன, கௌரவ விருந்தினராக வலி.கிழக்கு பிரதேச சபையின் எதிர்க்கட்சித் தலைவரும், ஈ.பி.டி.பி.யின் வலி. கிழக்கு பிரதேச இணைப்பாளருமான இராமநாதன் ஐங்கரன் கலந்து சிறப்பிக்கவுள்ளனர். (08)

# நினைவுக் கூட்டமும் நூல் வெளியீடும்

(யாழ்ப்பாணம்)

தோழர் நா.சண்முகநாதனின் 20 ஆவது ஆண்டு நினைவுக் கூட்டமும் 'ஒரு கம்யூனிஸ்கட்டின அரசியல் நினைவுகளும்' என்னும நினைவுக் கூட்டமும், நூல் வெளியீட்டு நிகழ்வும் இன்று பிற்பகல் 4.00 மணிக்கு ஸ்ரான்லி வீதியில் உள்ள டி.எம்.ஜ டானியல் ஞாபகார்த்த கல்வி நிலையத்தில் இ.தவராஜா தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் எஸ்.ஜி. கணேசவேல், க.தணிகாசலம், கே. ஞ. சீவரட்ணம் ஆகியோரின் கருத்துரைகளும் கா.செந்தில்வேலின் சிறப்புரையும் இடம் பெறவுள்ளன. (08)

## கற்பூர ஆராதனை

(யாழ்ப்பாணம்)

பொன்னாலைச் சந்தியில் அமைந்துள்ள கிருஷ்ணன் திருவுருவச் சிலைக்கு இன்று மாலை 6.00 மணி தொடக்கம் மறுநாள் காலை 6.00 மணி வரை அடியார்களால் கற்பூர ஒளியேற்றும் நிகழ்வு பக்தி பூர்வமாக நடைபெறும். (50)

## நூலக திறப்பு விழா; நேரம் மாற்றம்

(வேலணை)

வேலணை துறையூர் ஐயனார் சனசமூக நிலைய நூலகத் திறப்பு விழாவும், மகா சிவராத்திரி விழாவும் இன்று ஞாயிற்றுக் கிழமை காலை 10 மணிக்கு ஐயனார் சனசமூக நிலைய அரங்கில் நடைபெறவிருந்த நிகழ்வுகள் தவிர்க்க முடியாத காரணத்தினால் மாலை 3.00 மணிக்கு நேரமாற்றம் செய்யப்பட்டுள்ளதாக துறையூர் ஐயனார் சன சமூக நிலைய நிர்வாகத்தினர் அறிவித்துள்ளனர். (எஸ்.பி)

# ஏலத்திற்கு வரும் பழைய வாகனங்கள்


(யாழ்.நிருபர்)

வடபிராந்திய பார ஊர்தி உரிமையாளர் கூட்டுறவுச் சங்கத்திற்குச் சொந்தமான பழைய வாகனங்கள் திருமுருகண்டியில் அமைந்துள்ள எரிபொருள் நிரப்பு நிலையத்தில் எதிர்வரும் 13 ஆம் திகதி புதன் கிழமை காலை 9.30 மணிக்கு பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்படவுள்ளன.

மேற்படி வாகனங்களை வேலை நாட்களில் காலை 9.00 மணி தொடக்கம் பிற்பகல் 4.00 மணிவரை பார்வையிடலாம் என்றும் மேலதிக விபரங்களை கிளிநொச்சி சி - 155 ஆம் கட்டை உலக உணவுத் திட்டம் அருகாமையில் அமைந்துள்ள தலைமைச் செயலகத்தில் பெற்றுக் கொள்ள முடியுமென வடபிராந்திய பாரவூர்திகள் உரிமையாளர் கூட்டுறவுச் சங்கத்தலைவர் தெரிவித்துள்ளார். (10)







'நுடபம - இலஙகை' எனற அமைபபு நடாததிய நுடபம மாநாடு - 2013 நேறறு யாழ.பொது நூலக மணடபததல நடைபெறறது.இநநகழவல பொறியியலாளர சேரன உரையாறறுவதையும, வளவாளரகளாகக கலநது கொணடவரகள மேடையல அமரநதருபபதனையும, நகழவல கலநது கொணடவரகளையும காணலாம். படங்கள்: பார்த்தீபன்.

# சிவராத்திரி விழா

(யாழ்.நிருபர்)

மன்னார் திருக்கேதீச்சர ஆலயத்தில் இன்று ஞாயிற்றுக் கிழமை மகா சிவராத்திரி விழா சிறப்பாக நடைபெறவுள்ளது.

அன்றைய தினம் நான்கு ஜாமப் பூசைகளும், அபிஷேகம், அர்ச்சனை நிகழ்வுகளும் வசந்த மண்டபத்தில் சிறப்பு கலை நிகழ்வுகளும் இடம்பெறவுள்ளன.

பக்த அடியார்கள் இப்புண்ணிய தினத்தில் ஆசார சீலர்களாக ஆலயத்திற்கு வருகை தந்து, சிவராத்திரி தின நிகழ்வுகளில் பங்குபற்றுமாறும், ஆலயச் சுற்றாடலில் தூய்மையைப் பேணுவதுடன் பொலித்தீன் பாவனையை முற்றாகத் தவிர்க்குமாறும் ஆலய பரிபாலன சபையும், பிரதேச சபையும் வேண்டுகோள் விடுத்துள்ளது. (10)

# திருக்கோணேஸ்வரத்தில் சிவராத்திரி பெருவிழா

(திருகோணமலை)

திருகோணமலை திருக்கோணேஸ்வரத்தில் இன்று ஞாயிற்றுக்கிழமை மகா சிவராத்திரியினை முன்னிட்டு அபிஷேக ஆராதனைகள், பூசை வழிபாடுகள், கலைநிகழ்சிகள் என்பன வழமைபோன்று இடம பெறவுள்ளதாக ஆலய பரிபாலன சபையினர் அறிவித்துள்ளனர்.

முதலாம் சாம பூசை மாலை 5 மணிக்கும், 2 ஆம் சாம பூசை இரவு 9 மணிக்கும், 3 ஆம் சாம பூசை இரவு 11 மணிக்கும், 4 ஆம் சாம பூசை அதிகாலை 4 மணிக்கும் இடம் பெறவுள்ளது.

இரவு 7 மணிக்கு கலை நிகழ்வுகள் ஆரம்பமாகும். திருகோணமலை பட்டின பிரதேச செயலாளர் பிரிவுக்குட்டபட்ட பாடசாலை மாணவர்களுக்கிடையே நடத்தப்பட்ட திருகோணேஸ்வரர் என்னும் தலைப்பிலான பேச்சுப்போட்டியில் முதல் மூன்று இடங்களைப் பெற்ற மாணவர்களுக்கு பணப் பரிசில்களும் சான்றிதழ்களும் வழங்கப்படவுள்ளன.

இரவு 9 மணிமுதல் 11 மணிக்கு வரை சிவலிங்கத்திற்கு அடியார்கள் அபிஷேகம் செய்ய அனுமதிக்கப்படுவர்.

கலை நிகழ்வுகளில் கீர்த்தனைகள், கரகாட்டம், கும்மி, நடனங்கள் மற்றும் நாடகங்கள் என்பனவும் இடம்பெறவுள்ளன. (10)

# மாணவர்கள் சாதனை படைக்க குறிக்கோள் மிக அவசியமானது

– பேராசிரியர் சபா.இராஜேந்திரன் –

(வடமராட்சி)

மாணவர்கள் ஒரு குறிக்கோளை மனதில் வைத்து கட்டுப்பாட்டுடனும் கடும் முயற்சியுடனும் செயற்பட்டால் கல்வியில் மட்டுமல்லாது சகல விடயங்களிலும் சாதிக்க முடியும் என சிங்கப்பூர் தேசிய பல்கலைக்கழக பொருளியல் துறை ஓய்வுநிலை பேராசிரியர் டாக்டர் சபா.இராஜேந்திரன் தெரிவித்தார்.

வல்வெட்டித்துறை சிதம்பராக்கல்லூரி விளையாட்டு போட்டி அண்மையில் பாடசாலை அதிபர் எஸ்.இராஜதுரை தலைமையில் சிறப்புற நடைபெற்றது. இதில் பிரதம விருந்தினராக கலந்துரையாடிய போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

போட்டி என்று சொல்லும் போது யாருடன் என்பது மிக முக்கியமானது இது விளையாட்டுக்காக மத்திரம் அல்ல வாழ்க்கைக்கும் உரியது. போட்டி மற்றவர்களுடன் என நினைத்து செயற்பட்டால் அங்கே பொறாமை, வெறுப்பு சேர்ந்து வளரும். இதற்கு முன்னர் மாணவர்களாக நீங்கள் உங்களுடன் போட்டி போட்டு கொண்டு வரும்போது உங்களால் நிச்சயம் முன்னேற்றம் காண வாய்ப்புள்ளது.

எமக்குள்ளே சிந்திக்கும் அறிவை வளர்த்து கொள்ள வேணடும் என்றால் ஒரு திறந்த மனம் வேண்டும் எல்லாம் எனக்கு தெரியும் என்ற கர்வத்தால் எதையும் செய்ய முடியாது. இதனை மாணவர்கள் புரிந்து கொண்டு எந்த விடயமானாலும் அது குறித்துநன்மை தீமைகளை சிந்தித்து சிறந்து மனதுடன் மாணவர்கள் தமது ஆற்றலை மென்மேலும் வளர்க்க வேண்டும். மாணவர்கள் தமது அறிவுத்திறனை புத்தகங்கள் மூலமாக வளர்த்துக்கொள்ள வேண்டும்.

புத்தகங்களைப் படித்து அவற்றை விளங்கிக் கொள்ளும் தன்மையை மாணவர்கள் கல்விக்காலத்திலேயே கற்று விட வேண்டும். அதன்மூலம் அறிவுத் திறனை சரியாகப் பயன்படுத்தி எதிர்காலத்தை பயனுள்ளதாக்க வேண்டும் எனத் தெரிவித்தார். (116)

## மகாகும்பாபிஷேகம்

(திருநெல்வேலி)

ஏழாலை மாதிரை அருள்மிகு ஞானவைரவப் பெருமான் ஆலயமஹாகும்பாபிஷேகப் பெருவிழா எதிர்வரும் 18 ஆம் திகதி திங்கட்கிழமை காலை 8 மணிக்கு விநாயகர் வழிபாட்டுடன் ஆரம்பமாகி நடைபெறவுள்ளது.

பிரதிஸ்டா பிரதமகுரு கிரியாகலாபமணி சிவஸ்ரீ சி.கிருஸ்ணசாமிக் குருக்கள் தலைமையில் இவ் முகூர்த்த நிகழ்வு நடைபெறவுள்ளது.

கும்பாபிஷேகத்தையொட்டி பூர்வாங்க கிரியைகள் யாவும் 15 ஆம்திகதி வெள்ளிக்கிழமை காலை 6.30 மணிக்கு ஆரம்பமாகவுள்ளன. (60)

# வாழ்வெழுச்சித்திட்டம் வடமராட்சியில்ஆரம்பம்

(பருத்தித்துறை)

வடமராட்சிப் பகுதியில் வாழ்வெழுச்சித்திட்டத்தினை மேற்கொள்ளும் வகையில் முன்னாள் போரூட் இணைப்பாளர் எஸ்.ஆனந்தராஜா நியமிக்கப்பட்டுள்ளார்.

இவர் தனது அலுவலகத்தை தற்காலிகமாக நெல்லியடியிலுள்ள மகேஸ்வரி நிதியக்கிளையில் ஆரம்பித்துள்ளதாகவும் இவ் அலுவலகத்தினூடாக ஏனைய வறிய மக்களுக்கு வாழ்வாதார உதவிகளை மேற்காள்ள இருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

மேலும் இத்திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்கு கிராமங்கள் தோறும் சிக்கன கடனுதவி கூட்டுறவு சங்கங்களையும் வடமராட்சி நல்லொழுக்க நிறுவனத்தையும் இணைத்து முதற்கட்ட பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

வாழ்வெழுச்சித் திட்டத்தினூடாக கடன் பெற விரும்புவோர் நேரடியாக 3 பேர் கொண்ட குழுவினூடாக வடமராட்சி நல்லொழுக்க நிறுவனத்துடன் தொடர்பு கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (109)

# ஆசிரிய மாணவர்களுக்கு செயன்முறைப்பரீட்சை

கோப்பாய் ஆசிரியர் பயிற்சிக்கலாசாலையில் இறுதிப் பரீட்சை எழுதிய மாணவர்களுக்கான செயன்முறைப் பரீட்சை நாளை மறுதினம் திங்கட்கிழமை தொடக்கம் தொடர்ந்து மூன்று தினங்களுக்கு நடைபெறவுள்ளது. சித்திரம், நடனம், சங்கீதம் ஆகிய நெறிகளில் கற்கைகளை மேற்கொண்ட ஆசிரிய மாணவர்களுக்கான இச்செ யன்முறைப்பரீட்சை குறிப்பிட்ட தினங்களில் கலாசாலையில் இடம்பெறும் என கலாசாலை அதிபர் வே.கணபதிப்பிள்ளை தெரிவித்துள்ளார்.

செயன்முறைப் பரீட்சைக்குத் தோற்றவுள்ள ஆசரியர் மாணவர்களில் அநேகமானோர் வெளிமாவட்டத்தை சேர்ந்தவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது. (137)



# மகிமை மிக்க மகா சிவராத்திரி விரதம் இன்று

உலகெல்லாம் நிறைந்து விளங்குகின்ற எல்லாம் வல்ல பரம்பொருளான சிவபெருமானுக்குரிய விரதங்களில் இன்று அனுஷ்டிக்கப்பெறும் மகாசிவராத்திரி விரதம் மிகவும் மகிமை பொருந்திய விரதமாகும். எமது சைவ சமயிகள் இவ்விரதத்தை முறையாக அனுஷ்டித்தால் பெரும் பயன் பெறலாம்.

மாசி மாதத் தேய்பிறைச் சதுர்த்தசியில் வரும் இவ்விரதத்தை அனுஷ்டிக்க விரும்புவோர் காலை எழுந்து நீராடித தோய்த்துலர்ந்த வஸ்திரம் தரித்து சிவசிந்தனையோடு சந்தியாவந்தனம் முடிந்து முதலில் சிவாலய தரிசனஞ் செய்தல் வேண்டும்.

விரதம் எனறால் காபபது என்று பொருள். ஆகவே, இன்றைய சிவராத்திரி விரதமிருப்பவர்கள். மனம் பொறி வழி போகாமல் அடக்க வேணடும். விரத காலத்தில் புலனடக்கத்தோடு மனத்தை ஒரு நிலைப்படுத்தி, பக்தியோடு தேவார திருவாசகங்களை ஓதலாம். அல்லது புராண இதிகாசகளைப் படிக்கலாம். நித்திரை விழிப்பு என்று சொல்லிச் சினிமா பார்த்தலோ அல்லது வேறு கேளிக்கைகளில் ஈடுபடுவதோகூடாது. அவ்வாறு செய்தல் குளிக்கப்போய் சேறு பூசியதாக முடிந்துவிடும்.

இவ்விரதம் அனுஷ்டிப்பவர்கள் திரயோதசியில் அதாவது முதல்நாள் ஒருவேளை மதியம் மட்டும் உணவு உட்கொண்டு சிவராத்திரியில் நித்திரை கொள்ளாமல் விழித்திருந்து உபவாசமிருந்து மறுநாள் காலை சிவநாமங்களை உச்சரித்துப் பயபக்தியோடு பாறணை பண்ணலாம்.

இந்த மகிமை மிக்க விரதத்தை அனுஷ்டித்து இந்திரனும் குபேரனும் நற்கதி அடைந்ததாகப் புராணம் கூறுகிறது.

முழுநாளும் விரதம் இருக்க முடியாதவர்கள் நள்ளிரவு 12 மணிவரைக்குமாவது அதாவது லிங்கோற்பவ காலம் வரை கண்விழிந்து வழிபாடு செய்தல் உத்தமம்.

பிரம்மாவும் ஜோதி வடிவில் நின்று உண்மையை உணர்த்திய நாளே சிவராத்திரி என்றும் கூறப்படுகிறது.

ஆதலால், இந்த சிவராத்திரி விரத்தை முறைப்படி அனுஷ்டித்து சிவபெருமானின் திருவருட் கருணைக்கும் பாத்திரமாகி இவ்வுலகில் பேரானந்தப் பெருவாழ்வுக்கு நம்மை நாமே தயார் படுத்திக்கொள்வோமாக.

— சிவநெறிக்கலாநிதி —
இராசையா ஸ்ரீதரன்

# பெண்கள் விழிப்புணர்வு அரங்கத்தின் சர்வதேச மகளிர் தின கருத்தரங்கு




(யாழ்ப்பாணம்)

சர்வதேச மகளிர் தினத்தை முன்னிட்டு பெண்கள் விழிப்புணர்வு அரங்கத்தின் ஏற்பாட்டில் சர்வதேச மகளிர்தின கருத்தரங்கு நிகழ்வு நேற்று சனிக்கிழமை காலை 10 மணி முதல் மாலை வரை யாழ். கூட்டுறவுச் சங்க மண்டபத்தில் நடைபெற்றது.

இக்கருத்தரங்கு நிகழ்வில் வன்முறையற்ற வாழ்வை நோக்கி, பெண்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகளும் சாத்தியமான தீர்வுகளும், சுயாதீனமான பெண்கள் அமைப்பின் தேவை குறித்து போன்ற விடயங்கள் பற்றி வளவாளர்களால் கலந்துரையாடப் பட்டது.

இதில் கருத்தரங்கு ஏற்பாட்டாளர்களில் ஒருவரான ஞானசக்தி ஸ்ரீதரன், வாசுகி, வளர்மதி, கொக்குவில் இந்துக் கல்லூரி மாணவி சாவித்திரி சிவதாஸன், சர்மிளா, யாழ் வேந்தன், சுகந்தினிதேவி, ஜெயரஞ்சனி ஆகியோர் உரையாற்றினர். இந்த நிகழ்வில் நூற்றுக்கும் மேற்பட்டவர்கள் கலந்துகொண்டனர். மதிய போசனத்தின் பின்னரும் கலந்துரையாடல் இடம்பெற்றது.

எதுவொன்று இருப்பதைவிட வித்தியாசமாக இருக்கிறதோ அதுவே முதலில் கவனிக்கப்படும் - ஸ்டாடர்.

தினப்பதிப்பு
தினமுரசு
THINAMURASU

இல:373, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி : 0212223628, கைத்தொலைபேசி : 0777193264
தொலைநகல் : 0212221811, thinamurasu@live.com
Online : www.thinamurasu.net

## நுகர்வுக் கலாசாரத்திலிருந்து மீள....

இருபதாம் நூற்றாண்டின் தொடக்கம் பத்திரிகைகளின் காலமாக இருந்தது. அதன் பின்னர் வானொலியும் சினிமாவும் ஆட்சி மிக்க ஊடகங்களாக வந்தன. இருபதாம் நூற்றாண்டின் நடுப் பகுதிக்குப் பின்னர் தொலைக்காட்சி ஆக்கிரமிக்க ஆரம்பித்தது. அதன்பின் சற்றலைற்கள் மூலம் உலகின் மூலைமுடுக்கில் நடப்பதெல்லாம் நம் அறைக்குள் தெரிந்தது. இதன் தொடர்ச்சியாக கணனி, இன்ரர்நெற், செல்போன்கள் வந்து நம் உள்ளங்கைகளுக்குள் உலகைச் சுருட்டி எடுத்துக்கொண்டோம்.

பன்னாட்டு நிறுவனங்கள் தங்கள் பொருட்களை விற்பதற்கும் கருத்துக்களைத் திணிப்பதற்கும் இந்த உலகளாவிய ஊடக வலைப் பின்னலைப் பயன்படுத்திக் கொண்டார்கள். கவர்ச்சியான விளம்பரங்கள் மூலம் நம்மையெல்லாம் நுகர்வு அடிமைகளாக்கினார்கள்.

தொலைக்காட்சிகளில் பெரும்பாலும் குழந்தைகளுக்கான உணவு வகைகள், குளிர் பானங்கள், சொக்ளேற், செல்போன், அழகு சாதனங்கள் பற்றிய விளம்பரங்களே அதிகமாக இடம்பெறுவதாக ஆய்வுகள் தெரிவிக்கின்றன. இந்தப் பொருட்களை மேலும் மேலும் வாங்க வேண்டும் என்ற நுகர்வு மனநிலையை இளைஞர்களிடமும் குழந்தைகளிடமும் விளம்பரங்கள் ஏற்படுத்தியுள்ளன.

இன்று ஏதேனும் ஒரு திரைக்கு முன்னால் பலமணி நேரம் இளைஞர்களும் குழந்தைகளும் அமர்ந்திருக்கிறார்கள். இவ்வாறு நீண்ட நேரம் தொலைக்காட்சி பார்ப்பதால் மன அமைதி கெடும்; மகிழ்ச்சி இராது என நரம்பியல் விஞ்ஞானிகள் தெரிவிக்கிறார்கள்.

அதிக நேரம் தொலைக்காட்சி பார்ப்பது சமூக நலனுக்கும் உகந்ததல்ல. தனி நபர் நலனுக்கும் நல்லதல்ல. தொலைக்காட்சியின் வருகைக்குப் பின்னர் ஒரே குடும்பத்தில் ஒருவருக்கொருவர் அந்நியப்பட்டுள்ளனர். குடும்பத்துக்குள் கூடிப்பேசுதல் என்பது பெருமளவு குறைந்துள்ளது. குழந்தைகளும், இளைஞர்களும் தங்களைச் சுற்றி நடக்கிற விஷயங்களைக்கூட காணாது தொலைக்காட்சியில் மூழ்கிக் கிடக்கிறார்கள். விடுமுறை நாட்களில் உறவினரைச் சென்று பார்ப்பதிலும், வீட்டிற்கு வருகிற விருந்தினர்களை உபசரிப்பதிலும் நிறைய மாற்றங்கள் ஏற்பட்டுள்ளன. தொலைக்காட்சியில் குறிப்பிட்ட நிகழ்ச்சிகளைக் காணும் பொருட்டு தங்களின் செயல் திட்டங்களைத் தள்ளிப் போடுகிறார்கள்.

நடத்தையிலும் மாற்றங்கள் ஏற்பட்டுள்ளன. பெரும்பாலும் தேவையான விடயங்களை அறிந்து கொள்வதற்குப் பதிலாக பொழுதுபோக்கு நிகழ்ச்சிகளில் மட்டுமே தங்களின் ஆர்வத்தை செலுத்துகிறார்கள். இன்றைய இளைஞர்களுக்கு நாட்டின் பொது நலம் சார்ந்த பிரச்சினைகள் பற்றிய அறிவு மிகவும் குறைவாகவே உள்ளது அல்லது இல்லை என்றே சொல்லலாம்.

அத்தோடு, அதிக நேரம் தொலைக்காட்சி பார்ப்பதற்கும் உடற் பருமனாவதற்கும் தொடர்புள்ளது என லக்ஸம்பேர்க் வானொலி, தொலைக்காட்சி நிலையமும் பொருளியல் நிறுவனமும் இணைந்து நடத்திய ஆய்வுகள் தெரிவிக்கின்றன. குழந்தைகள் அதிக நேரம் தொலைக்காட்சி பார்ப்பதால் ஓடி விளையாடுவது குறைந்துள்ளது. விளம்பரங்களைப் பார்த்து, அதில் காட்டுகிற உணவுப் பொருட்களை, கொழுப்புள்ள தின்பண்டங்களை வாங்கி உண்ணுவதாலும், தொலைக்காட்சி பார்த்துக் கொண்டே நொறுக்குத் தீனி சாப்பிடுவதாலும்தான் உடல் குண்டாகிறது.

சமூக நலனில் அக்கறையின்மையும், பொது நலச்சேவை செய்வது பெருமளவு குறைந்துள்ளதும் தெரியவந்துள்ளது. சமூகப் பொறுப்புணர்வு மிகவும் குறைந்து விட்டது. அதிகம் தொலைக்காட்சி பார்க்கிற நாடுகளில் ஊழலும் அதிகமாக உள்ளது என்று அந்த ஆய்வு தெரிவித்துள்ளது.

நாம் இந்த நுகர்வு கலாசாரத்திலிருந்து விடுபடவேண்டும். ஓய்வு நேரத்தை நல்வழிகளில் உபயோகப்படுத்தக் கற்றுக் கொடுக்க வேண்டும். சிறந்த கல்வி, இயற்கையோடு இயைந்த தன்மை, அடுத்தவர்களோடு ஒருங்கிணைந்து செயல்படுதல் என சிறு வயதிலிருந்தே பாடசாலைகளும் பெற்றோரும் இயங்கவேண்டும்.

- ஆசிரியர்

# 10 மில்லியன் ரூபாய் கொள்ளை; 3 பொலிஸார் உட்பட 7பேர் கைது

(கொழும்பு)

கொம்பனி வீதியில் கடந்த மாதம் இடம்பெற்ற 10 மில்லியன் ரூபா கொள்ளைச் சம்பவத்துடன் தொடர்புடைய தாக கூறப்படும் 3 பொலிஸ் அதிகாரிகள் உட்பட ஏழு பேர் நேற்று முன்தினம் கைது செய்யப்பட்டுள்ளனர். கொழும்பு குற்றத் தடுப்பு பிரிவின் பிரதி பொலிஸ் மா அதிபர் அனுர சேனாநாயக்க தலைமையிலான பொலிஸ் குழுவினர் இக்கைது நடவடிக்கையில் ஈடுபட்டதாக பொலிஸ் பேச்சாளர் புத்திக ஸ்ரீவர்தன தெரிவித்துள்ளார்.

இக்கொள்ளைச் சம்பவத்துடன் தொடர்புடையதாக கூறப்படும் மேற்படி 7 நபர்களும் கொழும்பின் பலபகுதிகளிலிருந்து கைதுசெய்யப்பட்டுள்ளனர்.இக் கொள்ளைச்சம்பவத்தில் போக்குவரத்து பிரிவு பொலிஸ் அதிகாரிகள் இருவர் உட்பட அமைச்சரவை பாதுகாப்பு அதிகாரி ஒருவரும் உள்ளடங்குவதாக பொலிஸ் பேச்சாளர் தெரிவித்தார்.

மேற்படி கும்பல் கொள்ளையடித்த பணத்தின் ஒருபகுதி மீட்கப்பட்டுள்ளதாகவும் மிகுதி தொகையை மீட்பதற்கான விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வருவதாகவும் பொலிஸ் பேச்சாளர் மேலும் தெரிவித்தார். போக்குவரத்து பொலிஸ் அதிகாரி ஒருவரை தலைமையாக கொண்ட மேற்படி கொள்ளை கும்பலானது, கடந்த மாதம் 12 ஆம் திகதி கொம்பனி வீதி, கங்காரம பகுதியில் வைத்து வ்ர்த்தகர் ஒருவரிடமிருந்து 10 மில்லியன் ரூபாவை கொள்ளையடித்து சென்றுள்ளது.

மேற்படி சம்பவத்தில் பாதிக்கப்பட்ட வர்த்தகர் தனது மனைவியுடன் கங்காரமை விகாரைக்கு வழிபாட்டுக்காக சென்ற போது அவர் பயணித்த வானை போக்குவரத்து பொலிஸார் இடையில் வழிமறித்துள்ளனர். இதன்போது வந்த இனந்தெரியாத 4 நபர்கள் குறித்த நபரையும் அவரது மனைவியையும் வானிலிருந்து தள்ளிவிட்டு வானை புறக்கோட்டைப் பக்கமாக செலுத்தி சென்றதாகவும் அதில் ஒருவர் வான் வேண்டுமானால் பேலியாகொடை பக்கமாக வந்து பெற்றுகொள்ளுமாறும் கூறிவிட்டுச் சென்றதாக பாதிக்கப்பட்ட நபர் தனது முறைப்பாட்டில் தெரிவித்துள்ளார். குறித்த நபர் கொழும்பு, குற்றப்பிரிவு பிரிவில் முறைப்பாடுகளை பதிவு செய்துள்ளதுடன் அவரது வான் சில மணி நேரங்களின் பின்னர் பேலி யாகொடை பகுதியிலிருந்து மீட்கப்பட்டுள்ளது.

## மின்னல் தாக்கியதில் இளைஞர் உயிரிழப்பு

மின்னல் தாக்கத்தில் நேற்று முன்தினம் மாலை இளைஞர் ஒருவர் உயிரிழந்துள்ளதாக மாதம்பை பொலிஸார் தெரிவித்தனர். மாலை 3 மணியளவில் இடம்பெற்ற இடி தாக்கத்தில் சிலாபம், இனிகொடவெல பிரதேசத்தைச் சேர்ந்த இளைஞர் ஒருவரே இவ்வாறு உயிரிழந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

அப்பிரதேசத்தில் கடும் மழையுடன் கூடிய மழை நிலவியுள்ள நிலையில், குறித்த இளைஞர் வேறு சிலருடன் மாதம்பை, கடுபிட்டிஓயா எனும் பிரதேசத்திற்கு அருகில் நின்றிருந்த சமயம் மின்னல் தாக்குதலுக்கு உள்ளாகியுள்ளார்.

இதன் பின்னர் உடனடியாக அவர் மாதம்பை வைத்தியசாலைக்கு எடுத்துச் சென்று அனுமதித்த போதும் வைத்தியசாலைக்கு அழைத்துச் செல்லப்படுவதற்கு முன்னரே அவர் உயிரிழந்துள்ளார் என்று தெரிவிக்கப்படுகின்றது.

## தலையணைக்குள் அரிவாள்; வைத்தியசாலையில் நோயாளி கைது

தலையணைக்குள் அரிவாளை மறைத்து வைத்துக் கொண்டு வைத்தியசாலைக்கு வந்த நோயாளி ஒருவர் கைது செய்யப்பட்ட சம்பவம் ஒன்று பொல்கஸ்வோவிட்ட பகுதியிலுள்ள வைத்தியசாலையில் இடம்பெற்றுள்ளது. பொல்கஸ் வோவிட்ட வேத்தர வைத்திய சாலைக்கே குறித்த நபர் நேற்று வருகைதந்துள்ளார்.

தலையணைக்குள் மறைத்து வைத்திருந்த அரிவாளை எடுத்த நோயாளி வைத்தியர் மற்றும் வைத்தியசாலையின் பணியாளர்கள் மீதும் தாக்குதல் நடதத்துவதற்கும் அவர் முயற்சித்துள்ளார். அதன்போது அவர்கள் ஓடி ஒளிந்து தப்பித்துக்கொண்டனர். எனினும், அவரிடமிருந்து தப்பித்து ஓடியபோது வைத்தியர் ஒருவர் கீழே விழுந்து காயமடைந்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

தான் ஒரு நோயாளி என்றும் தன்னை வைத்தியசாலையில் அனுமதிக்குமாறும் கூறிக் கொண்டே வந்த ஒருவர் தான் கொண்டு வந்திருந்த தலையணையில் மறைத்து வைத்திருந்த அரிவாளை எடுத்து தாக்குதல் நடத்த முற்பட்டதாகவும் அந்த நபரே கைது செய்யப்பட்டுள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

## காலநிலை மாற்றத்தால் காற்று வீசக்கூடிய அபாயம்

தென்கிழக்குப் பருவப் பெயர்ச்சிக் காற்றுடன் பெய்து வரும் இடியுடன் கூடிய மழையின் காரணமாக நாட்டின் பல பகுதிகளில் டொனடோ சுழல்காற்று வீசக்கூடிய நிலை இருப்பதாக வானிலை அவதான நிலையம் எச்சரித்துள்ளது.

டொனடா சுழல்காற்று குறிப்பிட்ட சில மணி நேரங்களுக்கே நீடிக்கும் என்றும், இது பாரிய சூறாவளியாக மாற்றமடையாது என்றும் வானிலை அவதான நிலையம் தெரிவித்துள்ளது.

இடியுடன் கூடிய மழை பெய்யும் நேரங்களில் இடி, மின்னல் தாக்கங்களுக்கும் இலக்காகலாம் என்பதால் பொதுமக்கள் எச்சரிக்கையாக இருக்குமாறும், மின் சாதனங்களைப் பாதுகாப்பதற்கு நடவடிக்கை எடுக்குமாறும் அந்நிலையம் அறிவித்துள்ளது.

தென்கிழக்கு பருவப் பெயர்ச்சி காற்றுக் காரணமாக வடக்கு, வடமத்தி, ஊவா ஆகிய மாகாணங்களிலும் அம்பாந்தோட்டை மாவட்டத்திலும் அடிக்கடி மழை பெய்யும் என்றும், நாட்டின் ஏனைய பகுதிகளில் இடியுடன் கூடிய மழை பெய்யும் என்றும் வானிலை அவதான நிலையம் தெரிவித் துள்ளது.

## கோரிக்கையை மறுத்தமையால் சபை உறுப்பினர்கள் வெளிநடப்பு

(மானிப்பாய்)

வலி. தென்மேற்கு பிரதேச சபையில் பிரதேச சபை குழுக்கள் அமைப்பது தொடர்பிலான கோரிக்கையை வாக்கெடுப்பிற்கு விடுவதற்கு தவிசாளர் மறுத்ததனை எதிர்த்து எதிர்க்கட்சி உறுப்பினர்கள் வெளிநடப்பு செய்தனர்.

நேற்று முன்தினம் நடைபெற்ற பிரதேச சபையின் மாதாந்த கூட்டத்தில் நிதிக்குழு, ஆளணிக்குழு, சுகாதாரக் குழு போன்ற குழுக்களினை அமைக்க வேண்டும் என எதிர்க்கட்சியினர் கோரிக்கை வைத்தனர். அத்துடன் அக்குழுக்கள் சுயாதீனமாக இயங்கவேண்டும் எனவும் கேட்டுக்கொண்டதுடன் இதனை சபையில் வாக்கெடுப்பிற்கு விடவேண்டும். எதிர்க்கட்சித் தலைவர் வெ.அன்ரன் ஜோன்சன் கேட்டுக்கொண்டார்.

இதற்கு தவிசாளர் மறுப்புத் தெரிவித்தார். இதனால் எதிர்க்கட்சி உறுப்பினர்கள் சபைக் கூட்டத்தை விட்டு வெளியேறினர். அவர்களை தொடர்ந்து ஆளும்கட்சி உறுப்பினர்களும் வெளிநடப்பு செய்தனர்.

கடந்த மாதம் நடைபெற்ற பிரதேச சபைக்கூட்டத்திலும் உறுப்பினர்கள் வெளிநடப்பு செய்தமை குறிப்பிடத்தக்கது. (54)

## நினைவு நிகழ்வும் நூல் வெளியீடும்

(குருநகர்)

இலங்கை கம்யூனிஸ்ட் கட்சியின் (மாவோ) மூத்த உறுப்பினரான தோழர் நா.சண்முகதாசன் 20 ஆம் ஆண்டு நினைவும், ஒரு கம்யூனிஸ்டின் அரசியல் நினைவுகளும், நூல் வெளியீடும் இன்று பிற்பகல் 4.00 மணிக்கு யாழ்.ஆரியகுளம் டானியல் ஞாபகார்த்த மீட்டல் கல்வி நிலையத்தில் இ.தவராசா தலைமையில் நடைபெறவுள்ளது.

சிறப்புரையை சி.கா.செந்தில்வேலும், நூல் வெளியீட்டுரையை சோ.தேவராசாவும், கருத்துரைகளை எஸ்.ஜீ.கணேசவேல் கே.ஏ.சீவரெட்ணம் ஆகியோரும் நிகழ்த்துவர். ஆர்வமுடையோரைக் கலந்துகொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (68)

# அரசியல் தீர்வுக்குத் தேவையானவை

# சரியான கொள்கையும் நிதானமான அணுகுமுறையும்

**இனப்பிரச்சினைக்கான தீர்வுடன் சர்வதேச சமூகம் இலங்கை அரசாங்கத்தின் கதவைத் தட்டுகின்றது என்று தமிழ் மக்களை நம்ப வைத்தவர்கள் அந்தச் சர்வதேச சமூகத்தினால் உருப்படியாக எதுவும் நடக்காது என்று இப்போது கூறுவது சிரமமான காரியம்தான். அமெரிக்காவின் இந்தப் பிரேரணை திருப்திகரமானதாக இல்லையென்று சொன்னால் சர்வதேச சமூகம் தீர்வைக் கொண்டுவரும் என்று சொன்னதெல்லாம் புலுடா ஆகிவிடுமே. இது சம்பந்தனுக்கு நன்றாக விளங்குகின்றது. அதனால்தான் இலங்கை அரசாங்கம் என்றாவது ஒரு நாள் சர்வதேச விசாரணைக்கு உள்ளாகும் என்று அறிக்கை விட்டிருக்கின்றார். என்றாவது ஒரு நாள் சர்வதேச விசாரணைக்கு உள்ளாகும் என்றால் நீண்ட காலத்துக்குச் சர்வதேச சமூகம் பற்றிப் பேசிப் பேசியே காலத்தைக் கடத்தலாமல்லவா?**



சங்கர சிவன்

தமிழ்த் தேசியக் கூட்டமைப்புத் தலைவர்கள் ஜெனிவாவுக்குப் போயிருக்கின்றார்கள். ஜெனீவாவில் நடைபெறும் மனித உரிமைகள் பேரவை மாநாட்டுக்குப் போயிருக்கின்றார்கள் என்று கூறாமல் ஜெனிவாவுக்குப் போயிருக்கின்றார்கள் எனக் கூறுவதற்குக் காரணம் உண்டு. ஜெனிவாவில் இவர்கள் பெரிதாக ஏதோ செய்வதாகச் சில ஊடகங்கள் செய்தி வெளியிடுகின்றபோதிலும் மனித உரிமைகள் பேரவை மாநாட்டுப் பக்கத்தில் இவர்களின் தலைக் கறுப்பைக் காணவில்லை என்று நம்பகமான தகவல்கள் கிடைக்கின்றன.

ஜெனிவா மாநாட்டைத் தமிழ் மக்களுக்குச் சார்பாக திருப்புவதற்காகவே கூட்டமைப்புத் தலைவர்கள் அங்கு செல்கின்றார்கள் என்ற அபிப்பிராயம் இவர்கள் ஜெனிவாவுக்குப் புறப்படுவதற்கு முன்னரே தமிழ் மக்களிடம் தோற்றுவிக்கப்பட்டுவிட்டது. இப்படியான தந்திரப் பிரசாரத்தில் கூட்டமைப்புத் தலைவர்கள் கைதேர்ந்தவர்கள்.

ஜெனிவா மாநாட்டின் மூலம் தமிழ் மக்களுக்கு உருப்படியான நன்மை எதுவும் கிடைக்கப்போவதில்லை என்பது கூட்டமைப்புத் தலைவர்களுக்குத் தெரியும். ஜெனிவா மாநாட்டில் எங்களால் என்ன செய்ய முடியும்? என்று 'ஏசியா ட்ரிபியூன்' நேர்காணலில் சம்பந்தன் கேள்வி எழுப்பியதும் நாங்கள் தமிழர் உரிமை மாநாட்டில் பங்குபற்றுவதற்காகப் போகின்றோமேயொழிய மனித உரிமைகள் பேரவை மகாநாட்டுக்கல்ல என்று மாவை சேனாதிராசா கூறியதும் ஜெனிவா மாநாட்டின் மூலம் தமிழருக்கு எதுவும் கிடைக்கப்போவதில்லை என்பதைப் புரிந்துகொண்டதன் வெளிப்பாடுகள்.

சுரேஷ் பிரேமச்சந்திரன் எப்போதும் தமிழரசுக் கட்சிக்கு எதிரான நிலைப்பாட்டில் நிற்பவர். மாவை சேனாதிராசா கூறியதை மறுதலிக்கும் வகையில் சுரேஷ் கருத்துக் கூறினார். மாநாட்டுக்கு வரும் பிரதிநிதிகளையும் அவர்களுடைய நாடுகளின் தூதுவர்களையும் சந்தித்து இலங்கையின் மனித உரிமை மீறல்கள் பற்றி முழுமையான தகவல்களை வழங்கப்போவதாக ஜெனிவாவுக்குப் புறப்படுவதற்கு முன்னர் அவர் சொன்னார். ஜெனிவாவுக்குப் போய்ச் சேர்ந்ததும் சுருதி மாறத் தொடங்கியது.

அமெரிக்கப் பிரேரணையின் வாசகம் திருப்திகரமானதாக இல்லை என்று ஜெனிவாவில் சுரேஷ் கருத்து வெளியிட்டார். அந்தப் பிரேரணையில் இனப்பிரச்சினையின் தீர்வு பற்றி எதுவும் இல்லை என்பதற்காக சுரேஷ் அவ்வாறு கூறவில்லை.

சுரேஷ் தீவிர நிலைப்பாட்டைக் கொண்ட புலம்பெயர் தமிழ் அமைப்புக்களுடன் நெருக்கமான தொடர்பைக் கொண்டிருப்பவர். அந்த அமைப்புக்களின் இலங்கைப் பிரதிநிதி என்று கூறலாம். ஏதிர்க்கட்சிகளின் கூட்டு என்ற புதிய அமைப்பின் புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கூட்டமைப்பு கையொப்பம் இடாதிருப்பதற்கு சுரேஷ் தான் பிரதான காரணம் என்று அரசியல் வட்டாரங்களில் கதை அடிபடுகின்றது. புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் யைொப்பம் இடுபவர்களின் பெயர்ப் பட்டியலில் தமிழத் தேசியக் கூட்டமைப்பின் சார்பில் எம்.ஏ.சுமந்திரனின் பெயர் இருந்ததால் கடுப்படைந்த சுரேஷ், புலம் பெயர் அமைப்புக்களுடன் தொடர்பு கொண்டு கையொப்பம் இடுவதை அவர்கள் மூலம் தடுத்ததாகப் பேசிக் கொள்கின்றார்கள்.

சுயமாக இயங்குவதில்லை என்பது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவிதி ஆகிவிட்டது. ஆரம்பத்தில் புலிகளின் தாளத்துக்கு ஆடினார்கள். இப்போது புலம்பெயர் அமைப்புக்களின் தாளத்துக்கு ஆடுகின்றார்கள். அரசியல் தீர்வுக்கான திட்டமொன்றைத் தயாரிக்கக் கூட்டமைப்பினால் இயலாமல் இருப்பதற்குப் புலம் பெயர் அமைப்புக்களின் அழுத்தமே காரணம் என்பது இரகசியமல்ல.

புலம்பெயர் தமிழ் அமைப்புக்களின் தேவையும் இலங்கையிலுள்ள தமிழ் மக்களின் தேவையும் வெவ்வேறானவை. இனப்பிரச்சினைக்கான அரசியல் தீர்வு தான் இலங்கையில் வாழும் தமிழ் மக்களின் பிரதான தேவை. புலம் பெயர் தமிழ் அமைப்புக்களின் பிரதான தேவை அதுவல்ல. இலங்கை அரசாங்கம் தமிழ் மக்களுக்கு எதிராக மோசமான மனித உரிமை மீறல்களில் ஈடுபடுகின்றது என்பதும் தமிழ் மக்கள் இலங்கையில் சுதந்திரமான பிரஜைகளாக வாழ முடியாது என்பதும் உலக நாடுகளுக்குப் பகிரங்கப்படுத்தப்பட வேண்டும் என்பதே புலம்பெயர் தமிழ் அமைப்புக்களின் எதிர்பார்ப்பு. இதுதான் அவர்களுடைய தேவை. வெளிநாடுகளில் தங்கள் இருப்பை உறுதிப்படுத்த அவர்களுக்கு இது தேவைப்படுகின்றது. இந்தத் தேவைக்கு ஏற்ற வகையிலேயே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு இலங்கைக்கான அதன் நிகழ்ச்சி நிரலைத் தயாரித்திருக்கின்றது.

புலம் பெயர் தமிழ் அமைப்புக்களின் தேவைக்கு ஏற்ற வகையில் அமெரிக்கப் பிரேரணையின் வாசகம் அமையவில்லை என்பதே சுரேஷ் பிரேமச்சந்திரனின் ஆதங்கம். அதனால்தான் அமெரிக்கா சமர்ப்பித்த பிரேரணையின் வாசகம் திருப்திகரமாக அமையவில்லை என்கிறார்.

அமெரிக்காவினதும், ஐரோப்பாவின் பிரதான நாடுகளினதும் தேவை வேறு. அவற்றுக்கு இலங்கை தேவை. இலங்கை அரசாங்கம் தங்கள் செல்வாக்கு வட்டத்துக்குள் வரவேண்டுமென அந்தநாடுகள் எதிர்பார்க்கின்றன. அதனால் இலங்கை அரசாங்கத்தை நாராகக் கிழிக்க அவை தயாராக இல்லை. தங்கள் நோக்கத்தை நிறைவேற்றுவதற்காக இலங்கையின் மனித உரிமை மீறல்களை அந்நாடுகள் ஆயுதமாகப் பாவிக்கின்றன.

கூட்டமைப்புத் தலைவர்கள் இதை விளங்கிக்கொள்ள முடியாத ஞான சூனியங்களல்ல. ஆனால், மக்களுக்கு வேறு கதை சொல்கின்றார்கள். எப்போதும் எதையாவது கூறி மக்களை ஏமாற்றுவதற்குப் பழக்கப்பட்டுப்போனவர்கள். மனித உரிமைகள் பேரவை மாநாட்டு விடயத்திலும் அதையே செய்கின்றார்கள். இனப்பிரச்சினைக்கான தீர்வுடன் சர்வதேச சமூகம் இலங்கை அரசாங்கத்தின் கதவைத் தட்டுகின்றது என்று தமிழ் மக்களை நம்ப வைத்தவர்கள் அந்தச் சர்வதேச சமூகத்தினால் உருப்படியாக எதுவும் நடக்காது என்று இப்போது கூறுவது சிரமமான காரியம்தான். சர்வதேச சமூகம் என்று எந்த நாடுகளை இவர்கள் குறிப்பிட்டுக் கூறிப் பிரசாரம் செய்தார்களோ அதே நாடுகள்தான் இன்று அமெரிக்கப் பிரேரணைக்குப் பின்னாலும் இருக்கின்றன. இந்தப் பிரேரணை திருப்திகரமானதாக இல்லையென்றால் சர்வதேச சமூகம் தீர்வைக் கொண்டுவரும் என்று சொன்னதெல்லாம் புலுடா ஆகிவிடுமே. இது சம்பந்தனுக்கு நன்றாக விளங்குகின்றது. அதனால்தான் இலங்கை அரசாங்கம் என்றாவது ஒரு நாள் சர்வதேச விசாரணைக்கு உள்ளாகும் என்று அறிக்கை விட்டிருக்கின்றார். என்றாவது ஒரு நாள் சர்வதேச விசாரணைக்கு உள்ளாகும் என்றால் நீண்ட காலத்துக்குச் சர்வதேச சமூகம் பற்றிப் பேசிப் பேசியே காலத்தைக் கடத்தலாமல்லவா?

இலங்கை அரசாங்கத்தை மோசமான குற்றவாளியாக உலக நாடுகளுக்குக் காட்டும் வகையில் அமெரிக்காவின் பிரேரணை இல்லையே என்று வருத்தம் தெரிவிக்கின்றார் சுரேஷ் பிரேமச்சந்திரன். இலங்கை அரசாங்கம் என்றாவது ஒரு நாள் சர்வதேச விசாரணைக்கு உள்ளாகும் என்கிறார். சம்பந்தன். இலங்கை அரசாங்கத்தைக் குற்றவாளியாகக் காட்டுவதன் மூலமும் சர்வதேச விசாரணைக்கு உட்படுத்துவதன் மூலமும் தமிழ் மக்களின் பிரச்சினைக்குத் தீர்வு கிடைத்துவிடுமா?

இலங்கை அரசாங்கத்தைக் குற்றவாளியாகக் காட்டுவது இத்துவரை செய்த செயல்களுக்கான தண்டனை என்று கூட்டமைப்புத் தலைவர்கள் கூறலாம். ஆனால், இனிச் செய்ய வேண்டிய விடயங்கள் பற்றிய சிந்தனை தானே முக்கியமானது. இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணவேண்டும். மக்கள் தங்கள் சொந்த இடங்களில் குடியேற வேண்டும். தமிழ் மக்களின் அரசியல் மற்றும் ஜனநாயக உரிமைகள் பேணப்பட வேண்டும். இந்த விடயங்களில் சர்வதேச சமூகமும் செயற்படவில்லை. கூட்டமைப்புத் தலைவர்களும் செயற்படவில்லை. அரசாங்கத்தை அபகீர்த்திக்கு உள்ளாக்க வேண்டும் என்ற பிரதான நோக்கத்துடனேயே கூட்டமைப்பினர் செயற்படுகின்றார்கள். கூட்டமைப்பின் பிரதான இலக்கு அரசாங்கத்தை வீழ்த்தி ஆட்சி மாற்றத்தை ஏற்படுத்துவதே என்பது இதிலிருந்து விளங்குகின்றது.

இலங்கையில் எத்தனையோ ஆட்சி மாற்றங்கள் வந்துபோய்விட்டன. இனப்பிரச்சினை தொடர்கின்றது. ஆட்சி மாற்றம் தீர்வைக் கொண்டு வரும் என்பது மாயை. சரியான கொள்கையும் நிதானமான அணுகுமுறையுமே அரசியல் தீர்வுக்குத் தேவை. இந்த இரண்டும் தமிழ்த் தலைவர்களிடம் இல்லாததாலேயே ஆறு தசாப்தங்களுக்கு மேலாக இனப்பிரச்சினை தொடர்கின்றது.

ஐக்கிய தேசியக் கட்சியை ஆட்சிக்கு கொண்டு வருவதிலேயே கூட்டமைப்பு ஆர்வம் காட்டுகின்றது. ஆட்சி மாற்றத்துக்காக ஐக்கிய தேசியக் கட்சி அமைத்திருக்கும் எதிரணிக் கூட்டில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு இணைந்திருப்பது ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமையில் ஆட்சி மாற்றத்தைக்கொண்டுவருவதற்காகவே. ஐக்கிய தேசியக் கட்சியின் ஆட்சி எப்படி இருக்கும் என்பதை ரணில் அண்மையில் தெளிவுபடுத்தியிருக்கின்றார்.

மனித உரிமை மீறல்களை விசாரணை செய்யும் அதிகாரத்துடன் மனித உரிமைகள் பேரவையை அமைப்பதற்கான பிரேரணை ஐக்கிய நாடுகள் சபையில் 2006ஆம் ஆண்டு வந்தபோது மகிந்த ராஜபக்ஷவின் அரசாங்கம் அதற்கு ஆதரவாக வாக்களித்தது தவறு என்கிறார் ரணில். அதனாலேயே இன்று விசாரணையை எதிர்நோக்க வேண்டியுள்ளது என்றும் சொல்கிறார்.

விசாரணைக்கு இடமளிக்காமல் மனித உரிமை மீறல்களை மேற்கொள்ள வேண்டும் என்பதே இதன் அர்த்தம். இப்படியான தலைவரின் ஆட்சியில் தமிழ் மக்களின் உரிமைகளைப் பெறலாம் என்று கூட்டமைப்பு நம்புகின்றதா?



# முஸ்லிம் தலைவர்களுக்கு நாய்ப்பட்டி அணிவிக்க வேண்டும்

(கொழும்பு)

மாநகர சபை அமர்வுகளுக்கு கறுப்புப் பட்டி அணிந்து செல்வதை விட பதவிகளுக்கு வாலாட்டும் தமது தலைவர்களுக்கு முதலில் நாயப்பட்டி அணிவிப்பதற்கு முன்வர வேண்டும் என முஸ்லிம் மக்கள் கட்சி தெரிவித்துள்ளது.

இது தொடர்பில் அக்கட்சியின் தலைவர் முபாறக் அப்துல் மஜீத் மேலும் தெரிவித்துள்ளதாவது,

இந்த நாட்டின் வரலாற்றில் என்றுமே கண்டிராத அளவு இனத்துவேசம் இந்த ஆட்சியில் பகிரங்கமாக பேசப்பட்டுக் கொணடிருக்கும் போது பூனைக்கு மணி கட்டுவது யார், எப்படி என்று தெரியாமல் முஸ்லிம் கட்சித் தலைமைகள் தடுமாறிக் கொண்டிருக்கின்றன. தங்களது சுய நல பதவிகளுக்கு ஆப்பு வந்து விடும் என்ற அச்சத்திலேயே இவர்கள் இவை பற்றி நாடாளுமன்றத்தில் பேசாமல் மூடிய அறைக்குள் இருந்து கொண்டு குசுகுசுக்கின்றனர்.

முஸ்லிம் சமூகம் எதிர்நோக்கும் ஆபத்து பற்றி இவர்கள் பேசுவார்கள் என நம்பி இவர்களுக்கு வாக்களித்த முஸ்லிம் சமூகம் இன்று நாதியற்று தத்தளித்துக்கொண்டிருக்கும் அதே வேளை சமூகத்துக்காக தமது சுயநலன்களை வீசி விட்டு களத்தில் குதித்திருப்போரைக் கூட இனங்கண்டு அவர்களை ஆதரிக்கத் தெரியாத ஒரு சமூகமாகவும் முஸ்லிம் சமூகம் இருக்கிறது.

முஸ்லிம்களின் பிரச்சினைக்கு ஒரு மாகாண சபை உறுப்பினர் கண்டனத் தீர்மானம் கொண்டு வருகிறார். இன்னொருவர் கறுப்புப்பட்டி அணிகிறார் என்றார்.



கம்பஹா பிரதேசத்தில் நேற்றுமுன்தினம் மாலை வீசிய சுழல் காற்றால் 59 குடும்பங்களைச் சேர்ந்த 293 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர். சுழல் காற்றினால் 39 வீடுகளுக்கு சேதம் ஏற்பட்டுள்ள நிலையில் இதில் 3 வீடுகள் முழுமையாக சேதமடைந்துள்ளன. மினுவாங்கொட, அத்தனகல்ல பிரதேச செயலாளர் பிரிவில் உள்ள வீடுகளே சேதமடைந்துள்ளன. சுழல் காற்றால் மரம் முறிந்து வீழ்ந்ததில் ரயில் போக்குவரத்தும் பாதிக்கப்பட்டுள்ளது.

# லெபனானில் இலங்கைப் பெண் வெட்டியும், குத்தியும் படுகொலை

(கொழும்பு)

லெபனான், பெய்ரூட் நகரில் இலங்கைப் பெண்ணொருவர் மர்மமான முறையில் படுகொலை செய்யப்பட்டுள்ளார். சிலாபம், பிரதேசத்தைச் சேர்ந்த திலீகா பெரேரா (வயது 32) என்ற இளம் பெண்ணே கூரிய ஆயுதத்தால் குத்தியும், வெட்டியும் படுகொலை செய்யப்பட்டுள்ளார்.

இவரது சடலம் பெய்ரூட் நகரில் வீதியோரமாக கண்டெடுக்கப்பட்டுள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன. எட்டு ஆண்டுகளுக்கு முன்னர் பணிப் பெண்ணாக லெபனான் சென்ற இவர் பல இடங்களில் பணிப் பெண்ணாக தொழில் புரிந்துள்ளார். மேலும் அங்கு உதவி தரகராகவும் செயற்பட்டுள்ளார்.

இலங்கையிலிருந்து பணிப் பெண்களுக்கு வேலைவாய்ப்புகளையும் இவர் பெற்றுக் கொடுத்துள்ளார் என்றும் அவரது உறவினர்கள் தெரிவிக்கின்றனர்.

மர்மமான முறையில் இவர் கொல்லப்பட்ட சம்பவம் தொடர்பாக இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகம் மற்றும் வெளிவிவகார அமைச்சுக்கும் உறவினர்கள் முறைப்பாடு செய்துள்ளனர்.

# கிழக்குப் பல்கலைக்கழகத்தில் தமிழ் மாணவன் மீது தாக்குதல்

(கொழும்பு)

கிழக்குப் பல்கலைக்கழகத்தின் வர்த்தக பீடத்தில் கல்வி பயிலும் முதலாம் ஆண்டு மாணவர் ஒருவர், இரண்டாம் ஆண்டு வர்த்தகப் பிரிவில் கல்வி கற்கும் மாணவர்களினால் தாக்கப்பட்டு, செங்கலடி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

நேற்றுமுன்தினம் இரவு ஏழு மணியளவில் வளாகத்தில் உள்ள தனது விடுதியிலிருந்து கடைக்கு சாப்பாடு எடுக்கச் சென்ற மாணவன் மீதே இந்தத் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளதாக பல்கலைக்கழக வட்டாரங்கள் தெரிவித்தன.

நான்கு மாணவர்கள் சேர்ந்து குறித்த மாணவனை தாக்கி விட்டு பல்கலைக்கழக வளாகத்துககுள் சென்று ஒழிந்து கொண்டதாகவும் அந்த வட்டாரங்கள் தெரிவித்தன.

தாக்கப்பட்டவர் வர்த்தக பீடத்தில் முதலாம் ஆண்டு கல்வி பயிலும் ந.சஞ்ஜீவன் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. தாக்கப்பட்ட மாணவன் செங்கலடி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்தன.

# ஜே.வி.பி.யின் முன்னாள் செயற்பாட்டாளர் முச்சக்கரவண்டியில் சடலமாக மீட்பு

(கொழும்பு)

பாதுக்க - பொரகெதர சமிந்து உயண மைதான வளாகத்தில் முச்சக்கர வண்டிக்குள் மர்மமான முறையில் உயிரிழந்த ஒருவரின் சடலம் மீட்கப்பட்டுள்ளது. இது குறித்து மொரகஹஹேன பொலிஸாருக்கு அறிவிக்கப்பட்ட நிலையில் பொலிஸார் சடலத்தை மீட்டு விசாரணை நடாத்தி வருகின்றனர்.

குறித்த நபர் மக்கள் விடுதலை முன்னணியுடன் இணைந்து சிறிதுகாலம் அரசியல் நடவடிக்கைகளில் ஈடுபட்டவர் என கண்டறியப்பட்டுள்ளது. உயிரிழந்த நபரின் கழுத்துப் பகுதியில் வெட்டுக் காயம் காணப்படுவதாக தெரிவிக்கப்படுகிறது. குறித்த முச்சக்கர வணடி இருந்த இடத்திற்கு அருகில் மதுபானப் போத்தல் ஒன்றும் கத்தியும் மீட்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

# நாட்டுக்கு எதிராக பிரசாரம்; "திவயின" குற்றச்சாட்டு

(கொழும்பு)

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாட்டுக்கு எதிராக பிரசாரம் செய்து வருவதாக "திவயின" சிங்களப் பத்திரிகை குற்றம் சுமத்தியுள்ளது. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் தற்போது சுவிட்சலாந்துக்கு விஜயம் செய்துள்ளனர்.


குறித்த நாடாளுமன்ற உறுபபினர்கள் சுவிஸ் வாழ் புலம் பெயர் தமிழர்களுக்கு விசேட கருத்தரங்குகளை நடாத்தி வருகின்றனர்.

நாட்டுக்கு எதிராக பொய்யான தகவல்களைத் தெரிவித்து புலம்பெயர் தமிழ் சமூகத்தை இலங்கைக்கு எதிராக திசை திருப்பும் வகையில் இந்தக் கருத்தரங்குகள் அமைந்துள்ளன. சுவிட்சர்லாந்தின் சில நகரங்களில் இவ்வாறான கருத்தரங்கு நடாத்தப்பட்டுள்ளது.

போர் நிறைவடைந்த போதிலும் காணிகளை படையினர் கொள்ளையிடுவதாகவும், வடக்கில் இராணுவ ஆட்சியே நிலவி வருவதாகவும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்கள் தெரிவித்துள்ளனர்.

எவ்வாறெனினும், புலிகளினால் மேற்கொள்ளப்பட்ட வன்முறைகள் குறித்து இந்தக் கருத்தரங்குகளில் எவ்வித கருத்தும் வெளி யிடப்படுவதில்லை என அப் பத்திரிகை மேலும் செய்தி வெளியிட்டுள்ளது.

# இரயில் கடவை இல்லாததால் விபத்து



(கொழும்பு)

மட்டக்களப்பில் பாதுகாப்பான இரயில் கடவை இல்லாததினால் இரயிலுடன் பேருந்து மோதிய சம்பவம் நேற்றுக் காலை இடம்பெற்றது.

மட்டக்களப்பு கூழாவடிச் சந்தியில் உள்ள பாதுகாப்பற்ற இரயில் கடவையினைக் கடக்க முற்பட்ட இலங்கைப் போக்குவரத்துச் சபைக்குச் சொந்தமான பேருந்து மோதிய விபத்துச் சம்பவம் நேற்றுக் காலை இடம்பெற்றது.

கொழும்பில் இருந்து மட்டக்களப்பிற்கு புறப்பட்ட இரயிலுடன் மட்டக்களப்பு திராய்மடுவிற்கான இலங்கைப் போக்குவரத்துச் சபைக்குச் சொந்தமான பயணிகள் பேருந்தே மோதுணடுள்ளது.

மாமாங்கம் கூழாவடிச் சந்தியல் உள்ள பாதுகாப்பற்ற இரயில கடவையினைக் கடப்பதற்கு பேருந்து வண்டி முற்பட்டபோது வாழைச்சேனையில் இருந்து மட்டக்களப்பு நோக்கி வந்த ரயில் மோதியதில் பேருந்தின் பின்புறம் சேதமடைந்ததுடன், பேருந்தில் பயணம் செய்த பெண் ஒருவரும் சிறிய காயத்துக்குள்ளாகியுள்ளார்.

மட்டக்களப்பில் பாதுகாப்பற்ற ரயில் கடவைகள் பல காணப்படுவதனால் ஏற்கனவே இவ்வாறான பல விபத்துக்கள் ஏற்பட்டுள்ளன.

இவ் இரயில் கடவைகளுக்கு பாதுகாப்பை ஏற்படுத்த சம்பந்தப்பட்டோர் நடவடிக்கை எடுக்க வேண்டும் என சம்பவ இடத்தில் கூடியிருந்த மக்கள் கருத்துத் தெரிவித்தனர்.

பாதுகாப்பான இரயில் கடவையினை ஏற்படுத்துவது தொடர்பாக மட்டக்களப்பு அபிவிருத்திக் குழுக் கூட்டத்தில் பல்வேறு தடவைகள் பேசப்பட்ட போதும் ஆக்கபூர்வமான நடவடிக்கைகள் எதுவும் இதுவரை எடுக்கப்படவில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது.

# இலங்கையில் சீமெந்தின் விலை அதிகரிப்பதற்கான அவசியம் இல்லை



(கொழும்பு)

சீமெந்து விலையை அதிகரிப்பதற்கான அவசியம் எதுவும் இல்லை என இலங்கை சீமெந்துக் கூட்டுத்தாபனம் தெரிவித்துள்ளது. 6 வருடங்களின் பின் குறைந்த விலையில் சீமெந்து இறக்குமதி செய்ய தமக்கு வாய்ப்புக் கிட்டியுள்ளதாக இலங்கை சீமெந்து நிறுவனம் மற்றும் இலங்கை சீமெந்துக் கூட்டுத்தாபனம் ஆகியவற்றின் தலைவர் என்.சம்சுதீன் தெரி வித்துள்ளார்.

இதன்படி சீமெந்து மெட்ரிக் தொன் 71 அமெரிக்க டொலருக்கு இறக்குமதி செய்யப்படுவதாக அவர் குறிப்பிட்டார்.

இதற்கு முன் சீமெந்து ஒரு மெட்ரிக் தொன் 74 அமெரிக்க டொலருக்கு இறக்குமதி செய்யப்பட்டதாக அவர் சுட்டிக் காட்டினார். புதிய விலையின் கீழ் 53,000 மெட்ரிக் தொன் சீமெந்து மே மாத ஆரம்பத்தில் இறக்குமதி செய்யப்படும் என அவர் கூறினார். தற்போது இலங்கையில் ஒரு பக்கற் சீமெந்து 880 ரூபாவிற்கு விற்கப்படுவதாகவும் எதிர்காலத்திலும் அதே விலைக்கு சீமெந்து விற்பனை செய்யப்படும் எனவும் அவர் தெரிவித்தார்.

# ஜெயபுரம் மகாவித்தியாலயத்திற்கு 75 மில்லியன் ரூபாவில் புதிய கட்டடங்கள்

## பாடசாலை அதிபர் தெரிவிப்பு



(கிரு-சிகரம்)

கிளிநொச்சி பல்லவராயன் கட்டு ஜெயபுரம் மகாவித்தியாலயத்தில் புதிதாக அமைக்கப்பட்டு வரும் கட்டடங்களின் நிர்மாணப் பணிகள் ஏப்ரல் மாதம் நிறைவடையும் என பாடசாலையின் அதிபர் நடேசமூர்த்தி தெரிவித்தார் இது தொடர்பாக அவர் தெரிவிக்கையில்,

மீள்குடியேற்றத்திற்குப் பின்னர் கிளிநொச்சி மாவட்டம் அனைத்துத் துறைகளிலும் துரித கதியில் அபிவிருத்தி கண்டு வருவதுடன், இம் மாவட்டத்தில் யுத்தத்தால் பாதிக்கப்பட்ட பாடசாலைகள் புனரமைக்கப்பட்டும், பாடசாலையில் பல புதிய கட்டடங்களும் நிர்மாணிக்கப்பட்டும் வருகின்றன.

அந்த வகையில், நாடாளுமன்ற உறுப்பினர் மு.சந்திரகுமாரின் வேண்டுதலுக்கு அமைய அவுஸ்ரேலிய அரசாங்கம் மற்றும் யுனிசெப் நிறுவனத்தின் 75 மில்லியன் ரூபா நிதி உதவியுடன் ஜெயபுரம் மகா வித்தியாலயத்தில் இந்தப் புதிய கட்டடங்கள் நிர்மாணிக்கப்பட்டு வருகிறது.

2012 யூலை 15 ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்ட இந்த புதிய கட்டடங்களின் வேலைகள் 2013 மார்ச் 15ஆம் திகதி முடிவடைய இருந்தபோதும், நாட்டில் நிலவிய அசாதாரண கால நிலை காரணமாக தாமதமாவதாகவும், இருப்பினும் ஏப்ரல் மாத நிறைவில் புனரமைப்புப் பணிகள நிறைவடையும். ஈ.பி.டி.பி. யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரின் முயற்சியும், அக்கறையும் காரணமாகவே எமது பாடசாலைக்கு புதிய கட்டடம் ஒன்று கிடைத்துள்ளதாகவும் பல்ல வராயன் கட்டு ஜெயபுரம் மகா வித்தியாலய அதிபர் நடேச மூர்த்தி மேலும் தெரிவித்தார்..

# வலிகாமம் கிழக்கில் இன்று விவசாயசபை அங்குரார்ப்பணம்

(அச்சுவேலி)

வலிகாமம் கிழக்கு விவசாய அபிவிருத்திச் சபையின் ஆங்குரார்ப்பண நிகழ்வு இன்று பிற்பகல் 03.00 மணிக்கு சிறுப்பிட்டி இந்து தமிழ் கலவன் பாடசாலைக்கு அருகாமையில் அமைந்துள்ள ஜி.ரி.எம்.எஸ் பொது மண்டபத்தில் இடம் பெறவுள்ளது.

சபையின் தலைவர் அ.தம்பிநாதன் தலைமையில் இடம்பெறும் இவ்அங்குரார்ப்பண வைபவத்தில் பிரதம விருந்தினராக ஈ.பி.டி.பி.யின் யாழ். மாவட்ட பிரதம அமைப்பாளர் க.கமலேந்திரன், சிறப்பு விருந்தினராக வலிகாமம் கிழக்கு பிரதேச செயலர் ம.பிரதீபன், கௌரவ விருந்தினராக வலிகாமம் கிழக்கு பிரதேச சபையின் எதிர்க்கட்சி தலைவரும் ஈ.பி.டி.பி.யின் வலிகாமம் கிழக்கு பிரதேச அமைப்பாளருமாகிய இ.ஜங்கரன் ஆகியோர் கலந்து கொண்டு சிறப்பிக்க வுள்ளர்.

விவசாயிகளின் நன்மைகளைக் கருத்திற் கொண்டு இவ்வமைப்பின் எதிர்கால நடவடிக்கைகள் பற்றியும், விவசாயிகளின் நலன்கள் தொடர்பாகவும் பல முக்கிய விடயங்கள் கலந்துரையாடப்பட இருப்பதனால் வலிகாமம் கிழக்குப் பிரதேச விவசாயிகள் தவறாது கலந்து கொள்ளுமாறும் வேண்டப்படுகின்றனர். (03)

# சைவ தீட்சை வழங்கல்


(வடமராட்சி)

பொலிகண்டி - மருதாம்புலம் ஸ்ரீ பத்திரகாளி அம்பாள் ஆலயத்தில் சிவராத்திரியை முன்னிட்டு இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 9.00 மணிக்கு சைவ தீட்சை வழங்கப்படவுள்ளது.

ஆலய பிரதம குரு பிரம்மஸ்ரீ எஸ்.வைத்தீஸ் வரநாதக்குருக்கள் சைவ தீட்சையை வழங்க வுள்ளார். இதில் ஆண், பெண் இருபாலருக்கும் வழங்கப்படவுள்ளதுடன், பெறுவோர் ஆச்சார சீலர்களாக வருகை தருமாறு ஆலய நிர்வாக சலை உபதலைவர் ந.பாஸ்கரஜோதி அறிவித்துள்ளார்.

இதேவேளை இவ் ஆலய முன்றலில் அறநெறிப்பாடசாலை ஒன்று இயங்கி வருகிறது. இதில் 50 இற்கும் மேற்பட்ட மாணவர்கள் கல்வி பயின்று வருவதுடன் திருமதி.கதிர்காமநாதன் ஆசிரியை கல்வி கற்பித்து வருகின்றார் எனவும் தெரிவிக்கப்படுகிறது. (116)

# நிர்வாக சேவையில் இணைவு



(திருநெல்வேலி)

நல்லூர் கோட்டக் கல்விப் பணிப்பாளராகக கடமையாற்றிய எஸ். மாணிக்கராஜா கல்வி நிர்வாக சேவை தரம் iii இற்கு உள்வாங்கப்பட்டுள்ளார்.

ஆசிரியராக, அதிபராக, கோட்டக்கல்விப் பணிப்பாளராகப் பல பதவி உயர்வுகளைப் பெற்ற எஸ்.மாணிக்கராஜா கல்வி நிர்வாக சேவையில் இணைந்திருப்பதையிட்டு கல்விச் சமூகம் மகிழ்ச்சி தெரிவித்துள்ளது. (137)

# சிவராத்திரி நிகழ்வு நேரடி அஞ்சல்

(திருநெல்வேலி)

சரித்திரப் பிரசித்தி பெற்ற கீரிமலை நகுலேஸ்வரத்தில் இன்று ஞாயிற்றுக்கிழமை நடைபெறவுள்ள மகா சிவராத்திரியையொட்டி நான்கு ஜாமப்பூஜை வழிபாடு நிகழ்வுகள் ஏனைய கலாசார நிகழ்வுகள இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத் தாபன யாழ். F.M அலைவரிசையில் நேரடியாக அஞ்சல் செய்யப்படவுள்ளது.

இவ் ஒலிபரப்பு அன்றைய தினம் மாலை 6.00 மணிமுதல் இடம் பெறவுள்ளதுடன் இவ் நேரடி அஞ்சல், நேர்முக வர்ணணையை கலாநிதி மதுரகவி. காரை. எம்.பி.அருளானந்தன் தொகுத்து வழங்கவுள்ளார். (60)

## சிறப்புப்பட்டிமன்றம்

யாழ்.பட்டிமன்றக் குழுவினர் வழங்கும் சிறப்புப் பட்டிமன்றம் சிவராத்திரிதினமான இன்று ஞாயிற்றுக்கிழமை அன்று இரவு 8மணியளவில் பண்டத்தரிப்பு பிரான்பற்று முருகமூர்த்தி ஆலயத்தில் நடைபெறவுள்ளது. சொல்வேந்தர் பொன்.சுகந்தன் தலைமையில் "அன்பேசிவம் என்பர் அத்தகைய அன்பு இன்றைய சமூகத்தில் அதிகரித்துள்ளதா" அல்லது அருகி வருகிறதா என்னும் தலைப்பில் இப் பட்டிமன்றம் நடைபெறும். (10)

# பரிசளிப்பு விழா

மகா சிவராத்திரியையொட்டி உரும்பிராய் அருள்மிகு ஸ்ரீ கண்ணகா பரமேஸ்வரி அம்பாள் ஆலய பரிபாலன சபையினரால் ஆண்டு தோறும் நடாத்தப்படும் சைவ சமய அறிவுப்போட்டிகள் யாவும் போட்டி இணைப்பாளர் ஆசிரியர் மதுரகவி. காரை.எம். பி.அருளானந்தன் தலைமையில் உரும்பிராய் சைவத்தமிழ் வித்தியாலயத்தில் அண்மையில் நடைபெற்றது. இதில் வெற்றி பெற்ற மாணவர்களுக்குரிய பரிசளிப்பு நிகழ்வு இன்று ஞாயிற்றுக்கிழமை மாலை 7.00 மணிக்கு மேற்படி ஆலய வீதியில் நடைபெறவுள்ளது. தரம் 1 முதல் தரம் 12 வரையான வகுப்பு மாணவர்களுக்குரிய பரிசளிப்பு நிகழ்வாக இவ்வைபம் அமையவுள்ளது. (60)

# பொய்யுள்



மூலபாரதி

## நீலிக்கண்ணீர்!

இலங்கை அரசு ஒப்பந் தங்களை
ஏனென் றில்லாமல் கிளித்தெ றிந்தது;
தூங்கும் விடயம் ஐம்பத் தாறே
தொடங்கு கூத்து தொடர்ந்தே கிற்று!

ஐம்பத் தெட்டு எழுபத் தேளொடு
எண்பத்து மூன்றுக் கறுப்பு ஜூலையும்;
இம்மண் சிவக்க எழுந்த சவால்கள்
இனமதை ரெண்டாய் வெட்டிப்போட்டது!

எல்லாம் அறிந்த அமெரிக்கா பிரிட்டன்
இணைந்து அழிவுப் போரைத் தொடுத்தார்;
நில்லாமல் இடையில் நிற்கதி விட்டோர்
நீலிக்கண் ணீரதை ஜெனிவா உகுப்பர்!

# முரசின் இன்றைய பலன்

(10.03.2013 - ஞாயிற்றுக்கிழமை)

நந்தன வருஷம் மாசி 26 ஆம் திகதி. நட்சத்திரம் அவிட்டம். பின்னிரவு 1.51 வரை. திதி சதுர்த்தி பின்னிரவு 02.58 வரை. இராகுகாலம் 04.53 - 06.23 வரை. சுபநேரம் 09.23 - 10.53 வரை.

சோதிடஞானி அவர்களால் கணிக்கப்பட்டது.

| | |
|---|---|
| மேடம் | அறிவாற்றலை சிறந்த முறையில் பயன்படுத்துவீர்கள். மனதில் உற்சாகம். தொழில், செழிக்கும். உபரி வரவு. மாமன், மைத்துனருக்கு உதவுவீர்கள். கணவன்-மனைவி நெருக்கம். |
| ரிஷபம் | சொந்த நலனில் அதிக அக்கறை. பிறரது அதிருப்திக்கு உட்பட நேரும். தொழில் செழிப்பு. அதிக ஆதாயம். பயணத்திட்டத்தில் மாறுதல். நண்பர் எதிர்பாராத உதவி. |
| மிதுனம் | சிலரது செயல்பாடு மனதை கஷ்டப்படுத்தும். விலகிச் செயல்படுவீர்கள். தொழில், புதிய வழிவகை சிந்தனை. அளவான பணவரவு. ஓய்வு உடல்நலம் காக்கும். சவாலான நாள். |
| கடகம் | பெரியவர்களின் சொல்லுக்கு மரியாதை. பிறரிடம் நல்லெண்ணம் பெறுவீர்கள். தொழில், புதிய சாதனை. அதிக பணவரவு. விருந்து, விசேஷம். சமூகத்தில் பாராட்டும் புகழும். |
| சிம்மம் | இறங்கிய செயலில் கூடுதல் கவனம். தொழிலில் லாபம். கடன் திரும்பி அத்தியாவசிய செலவுக்குப் பயன்படும். பொருட்களில் கவனம் வேண்டும். உடல் நலம் பலம் பெறும். |
| கன்னி | வீண் பேச்சுக்களை தவிர்ப்பதால் நன்மை. தொழில் சராசரி. வரவு செலவுக்கு ஆகும். எதிர்பார்த்த நற்செய்தி தாமதம். பொறுமை தேவை. குடும்பத்தினரால் மனக்கஷ்டம் குறையும். |
| துலாம் | பேச்சில் வசீகரம். புதியவர்களின் நட்பு. தொழில் இலக்கு நிறைவேறும். பணவரவும், நன்மையும் கூடும். மாணவர்களுக்குப் பாராட்டு. புதிய திட்டங்கள். மனதில் புத்துணர்ச்சி. |
| விருச்சிகம் | வெகுநாள் திட்டமிட்ட ஒன்று நிறைவேறும். நண்பர், உறவினர் பாராட்டுவர். தொழில், முன்னேற்றம் பெறும். வரவு கூடும். இல்லறத்துணை விரும்பியது செய்வீர்கள். ஜெயம். |
| தனுசு | சிலரது செயலால் தர்ம சங்கடம். குடும்பத்தினர் ஆதரவு. தொழில், மாறுதல் அவசியம். சுமாரான பணவரவு. பழைய நண்பர் உதவுவார். உடல்நலத்திற்கு உணவில் கவனம். |
| மகரம் | சிறிய முயற்சியும், அதிக நன்மை தரும். உயர்ந்த செயல் புரிந்து, புகழ் பெறுவீர்கள். தொழில், நிறைவு. உபரி வருமானம். உறவுகள் தேடிவரும். உத்தியோகத்தில் பரிசும் சலுகையும். |
| கும்பம் | மனம் தெளிந்த நீரோடை போல இருக்கும். திறமைகளை வளர்த்துக் கொள்வீர்கள். தொழில் விருத்தி. உபரி பணவரவு. தேடியது கைவந்து சேரும். சுப நிகழ்வு திட்டம். வழிபாடு. |
| மீனம் | புதிய முயற்சிகளில் ஈடுபடுவீர்கள். விவேகத்திற்கு பலன். தொழில் அதிக நேரம் வேலை. சராசரி பணவரவு. கேட்ட உதவிகள் கிட்டும். பதவி உயரும். தன்னம்பிக்கை துளிர்விடும். |



# குக், கம்ப்டன் சதம் இங்கிலாந்து பதிலடி

குக், கம்ப்டன் ஆகியோரின் சிறப்பான துடுப்பாட்டத்தின் மூலம் நியூசிலாந்து அணிக்கெதிரான முதலாவது டெஸ்ட் போட்டியில் இங்கிலாந்து அணி பதிலடி கொடுத்து வருகின்றது. நியூசிலாந்து, இங்கிலாந்து அணிகளுக்கிடையிலான மூன்று போட்டிகளைக் கொண்ட டெஸ்ட் தொடரின் முதலாவது போட்டி நியூசிலாந்தின் டுனிடினில் நடைபெற்று வருகின்றது. இதில் ஏழு விக்கெட்டுக்களை இழந்து 402 ஓட்டங்களைப் பெற்றிருந்த நிலையில் நான்காம் நாள் ஆட்டத்தை நியூசிலாந்து அணி தொடர்ந்தது. இங்கிலாந்து அணி சிறப்பாக பந்து வீசி, ஒரு முனையில் விக்கெட்டுக்களைச் சாய்த்துக் கொண்டிருந்தபோதிலும் மறுமுனையில், கப்டன் மக்கலம் அதிரடியான ஆட்டத்தை வெளிப்படுத்தி அணியின் ஓட்ட வேகத்தை மேலும் அதிகரித்தனர். இறுதியில் நியூசிலாந்து அணி ஒன்பது விக்கெட்டுக்களை இழந்து 460 ஓட்டங்களைப் பெற்றிருந்த நிலையில் ஆட்டத்தை நிறுத்திக் கொண்டது. இதில் கப்டன் மக்கலம் 59 பந்துகளில் மூன்று சிக்ஸர்கள், ஒன்பது பவுண்டரிகள் அடங்கலாக 74, மார்ட்டின் 41, ருதர்போர்ட் 171 ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீச்சில் அண்டர்சன் நான்கு, புரொட் மூன்று விக்கெட்டுக்களை வீழ்த்தினர். 293 ஓட்டங்கள் பின்னிலையில் இரண்டாவது இனிங்ஸிற்காக இங்கிலாந்து அணி களமிறங்கியது. ஆரம்பத் துடுப்பாட்ட வீரர்களாகக் களமிறங்கிய கப்டன் குக், கம்ப்டன் ஆகியோரின் ஆட்டம் நியூசிலாந்து பந்து வீச்சாளர்களை திண்டாட வைத்தது.முதல் இனிங்ஸில் கோட்டைவிட்டதற்கு பதிலடி கொடுக்கும் வகையில் இந்தஜோடியின் ஆட்டம் அமைந்திருந்தது. இந்த ஜோடியைப் பிரிக்க நியூசிலாந்து அணியால் பல முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. இருப்பினும் 231 ஓட்டங்களைப் பெற்றிருந்த நிலையில் இந்த ஜோடி பிரிக்கப்பட்டது. இறுதியில் நேற்றைய நான்காம் நாள் ஆட்டம் நிறுத்தப்பட்ட வேளை, இங்கிலாந்து அணி ஒரு விக்கெட்டை இழந்து 234 ஓட்டங்களைப் பெற்றிருந்தது. இதில் கப்டன் குக் 252 பந்துகளை எதிர்கொண்டு 15 பவுண்டரிகள் அடங்கலாக 116 ஓட்டங்களைப் பெற்றார். டெஸ்ட் அரங்கில் குக் பெற்ற 24 சதமாக இது அமைந்தது. கம்ப்டன் 260 பந்துகளை எதிர்கொண்டு பத்து பவுண்டரிகள் அடங்கலாக ஆட்டமிழக்காது 102 ஓட்டங்களைப் பெற்றார். இது கம்ப்டனின் கன்னிச் சதமாக அமைந்தது. இன்று போட்டியின் இறுதி நாளாகும். ஒன்பது விக்கெட்டுக்கள் கைவசமுள்ள நிலையில் இங்கிலாந்து அணி 59 ஓட்டங்களால் பின்னிலையில் உள்ளது. இங்கிலாந்து முதல் இனிங்ஸ் 167.



# சேவாக் நீக்கம் சரியான நேரமில்லை

(ஹைதராபாம்)

சேவாக்கை நீக்க இது சரியான நேரம் இல்லை. அவருக்கு இன்னும் வாய்ப்பு வழங்கியிருக்கலாம் என இந்திய அணியின் முன்னாள் வீரர் லக்ஸ்மன் தெரிவித்துள்ளார்.

சேவாக்கை நீக்கியதன் மூலம் அடுத்து வரும் முக்கியமான தென்னாபிரிக்காவுக்கு எதிரான டெஸ்ட் தொடரை (டிசம்பர் மாதம்) தேர்வாளர்கள் மறந்து விட்டார்கள். அந்தத் தொடருக்கும் இப்போதே திட்டமிட்டு கவனம் செலுத்த வேண்டும். இந்திய அணி தென்னாபிரிக்காவுக்குச் செல்லும் போது அனுபவமும், இளமையும் கலந்த அணியாக இருக்க வேண்டியது முக்கியம். தென்னாபிரிக்கா போன்ற கடினமான சூழலில் விளையாட சேவாக் இல்லாத இந்திய அணியை என்னால் கற்பனை செய்து கூட பார்க்க முடியாது. இந்திய அணி சேவாக் இல்லாமல் தென்னாபிரிக்காவுக்கு செல்லக் கூடாது. தென்னாபிரிக்காவுக்கு எதிரான தொடருக்கு முன்பாக அவுஸ்ரேலியாவுக்கு எதிரான டெஸ்ட் தொடர் மட்டுமே இருப்பதால் எஞ்சிய இரு போட்டிகளிலும் விளையாட சேவாக்குக்கு வாய்ப்பு அளித்திருக்க வேண்டும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

# விரட்டி விரட்டி உதைக்கப்பட்ட நடுவர்



(பெய்ரூட்)

கால்பந்து போட்டியில் ரெட் கார்ட் (சிவப்பு அட்டை) காட்டிய லெபனான் நடுவரை, வீரர்கள் அடித்து உதைத்தனர்.

லெபனானில் இரண்டாம் பிரிவு கால்பந்துப் போட்டிகள் தற்போது நடைபெற்று வருகின்றன. இதில் அல்-நாக்டா, அல்-சலாம் அணிகள் மோதின. முரட்டு ஆட்டம் ஆடிய அல்-நாக்டா வீரர் யூசெப் ஓமருக்கு, நடுவர் (லெபனான்) முதலில் மஞ்சள் அட்டை காட்டினார்.

இதற்கு அவர் எதிர்ப்புத் தெரிவித்து வாக்கு வாதம் செய்ய, நடுவர் உடனடியாக ரெட் கார்ட் காட்டி வெளியேறச் சொன்னார். ஆத்திரம் அடைந்த யூசெப், நடுவரை ஓங்கி அடித்தார். இவரிடம் இருந்து தப்பிக்க, மைதானத்தின் பல பகுதிகளுக்கு ஓடிய அவரை, வேறு சில வீரர்களும் சேர்ந்து விரட்டி விரட்டி உதைத்தனர்.

பின் பாதுகாவலர்கள் தலையிட்டு நடுவரை மீட்டனர். நல்லவேளையாக காயம் பெரியளவில் இல்லை. உதை வாங்கிய நடுவர், இனி நடுவர் பணியை செய்யமாட்டேன் என்று அறிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# உண்மை தான்



இந்திய கிரிக்கெட் அணியின் அதிரடி துடுப்பாட்ட வீரர்களில் ஒருவரான சுரேஷ் ரெய்னா. இவருக்கும், இந்தி நடிகை அனுஷ்கா சர்மாவுக்கும் இடையே காதல் ஏற்பட்டு இருவரும் பல்வேறு இடங்களுக்கு சென்று வந்துள்ளதாக செய்திகள் பரவிய வண்ணம் இருந்தன.

இருப்பினும் ரெய்னாவும் அனுஷ்கா சர்மாவும் காதலை மறுத்தே வந்தனர்.

இந்த நிலையில் அனுஷ்கா சர்மாவுடன் காதல் இருப்பதை ரெய்னா ஒப்புக் கொண்டார்.

புது நடிகை அனுஷ்கா சர்மாவின் நடிப்பு எனக்கு மிகவும் பிடிக்கும். அவர் எனக்கு பிடித்தமானவர். இங்கிலாந்து பயணத்தின்போது நான், ராவிட், டோனி ஆகியோர் இவரின் பல படங்களை பார்த்து இருக்கிறோம்.

ராஜேஷ்கண்ணா, அமிதாப்பச்சன் நடிப்பை பார்த்து நான் மெய்சிலிர்த்தேன் தற்போதைய தலை முறையில் ரன்பீர் கபூர் மிகவும் பிரமாதமாக நடிக்கிறார். எனது திருமணம் குறித்து எனது குடும்பத்தினர் ஆலோசனை செய்து வருகிறார்கள் எனவும் தெரிவித்தார்.

# காதலியைக் கொன்றவருக்குச் சிறை



(பிரேசிலியா)

காதலியைக் கொன்று நாய்க்கு உணவாக்கிய கொடூர கால்பந்து வீரர் புருனோ பெர்னாண்டஸ் டி சோசாவுக்கு 22 ஆண்டுகள் சிறைத் தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

பிரேசிலை சேர்ந்த கால்பந்து வீரர் புருனோ பெர்னாண்டஸ் டி சோசா (வயது-28). சிறந்த கோல்கீப்பரான இவர், எலிசா சாமுடியோ (வயது-25) என்பவரை காதலித்தார். கடந்த 2010இல் சாமுடியோ காணாமல் போனார். இவரை புருனோ கொலை செய்ததாக புகார் எழுந்தது.

குழந்தையின் வளர்ப்பு செலவுக்கு பணம் கொடுப்பதை தவிர்க்கவே, சாமுடியோவைக் கடத்தி, தனது கூட்டாளிகளுடன் சேர்த்து கழுத்தை நெரித்துக் கொலை செய்தது கண்டறியப்பட்டது. இறந்த காதலியின் உடலின் சில பகுதிகளை தனது நாய்க்கு உணவாக புருனோ கொடுத்த கொடூரமும் அரங்கேறியது. இதனை முதலில் புருனோ மறுத்தார்.

இந்நிலையில், நேற்று முன்தினம் நீதிமன்றில் சாமுடியோ கொலை செய்யப்பட்டதை புருனோ ஒத்துக் கொண்டார். இவ்வழக்கில் நீதிபதி ரோட்ரிக்ஸ் அளித்த தீர்ப்பில், காதலியை மிகவும் நுணுக்கமான முறையில் திட்டமிட்டு கொலை செய்துள்ளார் புருனோ. இவருக்கு 22 ஆண்டு கால சிறைத் தண்டனை விதிக்கப்படுகிறது என்றார்.



# இலங்கை ஆதிக்கம்

(காலி)

பங்களாதேஷ் அணிக்கெதிரான முதலாவது டெஸ்ட் போட்டியில் இலங்கை அணி முழுமையாக ஆதிக்கம் செலுத்தி வருகின்றது. இலங்கை, பங்களாதேஷ் அணிகளுக்கிடையிலான இரண்டு போட்டிகளைக் கொண்ட டெஸ்ட் தொடரின் முதலாவது போட்டி காலியில் நடைபெற்று வருகின்றது. இதில் மூன்று விக்கெட்டுக்களை இழந்து 361 ஓட்டங்களைப் பெற்றிருந்த நிலையில் இரண்டாம் நாள் ஆட்டத்தை இலங்கை அணி தொடர்ந்தது. கப்டன் மத்தியூஸ், திரிமன்ன இணை நிதானமாக ஆட முற்பட்டது. இதில் சிறிது நேரம் தாக்குப் பிடித்த கப்டன் மத்தியூஸ் 27 ஓட்டங்களைப் பெற்றிருந்த நிலையில் வெளியேற்றப்பட்டார். ஐந்தாவது விக்கெட்டுக்காக களமிறங்கிய சண்டிமல் திரிமன்னவுடன் இணைந்து அதிரடியான ஆட்டத்தை வெளிப்படுத்தினார். இந்த இணை பங்களாதேஷ் பந்து வீச்சாளர்களை பந்தாடி ஓட்டங்களைக் குவித்தது. இந்த ஜோடியைப் பிரிக்கவும், ஓட்டங்களைக் கட்டுப்படுத்தவும் பங்களாதேஷ் கப்டன் ரஹீம் பெரு முயற்சியை மேற்கொண்டார். இருவரும் சதமடித்தபோதிலும் இந்த ஜோடி பிரிக்கப்படவில்லை. இறுதியில் நான்கு விக்கெட்டுக்களை இழந்து 570 ஓட்டங்களைப் பெற்றிருந்த நிலையில் இலங்கை அணி ஆட்டத்தை நிறுத்திக் கொண்டது. இதில் திரிமன்ன 256 பந்துகளை எதிர்கொண்டு 155 ஓட்டங்களையும், சண்டிமல் 151 பந்துகளை எதிர்கொண்டு இரண்டு சிக்ஸர்கள், 12 பவுண்டரிகள் அடங்கலாக 116 ஓட்டங்களையும் ஆட்டமிழக்காது பெற்றன்ர். இந்த ஜோடி ஐந்தாவது விக்கெட்டுக்காக 207 ஓட்டங்களைப் பெற்றது. பந்து வீச்சில் ஹசி மூன்று விக்கெட்டுக்களை வீழ்த்தினார். பதிலுக்கு முதல் இனிங்ஸிற்காக ஆடி வரும் பங்களாதேஷ் அணி நேற்றைய இரண்டாம் நாள் ஆட்டம் நிறுத்தப்பட்ட வேளை இரண்டு விக்கெட்டுக்களை இழந்து 135 ஓட்டங்களைப் பெற்றுள்ளது. இதில் மொகமட் அஷ்ரபுல் ஆட்டமிழக்காது 65 ஓட்டங்களைப் பெற்றுள்ளார். பந்து வீச்சில் மத்தியூஸ், எரங்க ஒவ்வொரு விக்கெட்டை வீழ்த்தினர். எட்டு விக்கெட்டுக்கள் கைவசமுள்ள நிலையில் பங்களாதேஷ் அணி 435 ஓட்டங்களால் பின்னிலையில் உள்ளது. இன்று மூன்றாம் நாளாகும்.



# சரிவிலிருந்து மீள்வோம் கிளார்க் நம்பிக்கை


(புதுடில்லி)

சரிவில் இருந்து மீண்டு தொடரை 2-2 என்ற கணக்கில் சமன் செய்ய எங்களுக்கு எல்லா வாய்ப்புக் உள்ளது என அவுஸ்ரேலிய அணிக் கப்டன் கிளார்க் தெரிவித்துள்ளார்.

மீதமுள்ள இரண்டு டெஸ்ட் போட்டிகளிலும் இந்திய அணிக்கு கடும் சவாலாக விளங்குவதுடன், வெற்றி கண்டு தொடரை சமன் செய்வது தான் எங்களது இலக்கு. தற்போதைய நிலையில் இந்திய அணி சிறப்பாக செயற்பட்டு வருவதால் எங்களது இலக்கை எட்டுவது கடினமாக இருக்கும். கடந்த டெஸ்ட்களில் கண்ட தோல்விக்கு சாக்கு போக்கு எதுவும் சொல்ல முடியாது.

துடுப்பாட்டம், பந்துவீச்சு, களத்தடுப்பு உள்ளிட்ட ஆட்டத்தின் எல்லா அம்சங்களிலும் நாங்கள் சரிவை சந்தித்தோம். நாங்கள் அணியாக முன்னேற வேண்டியது அவசியமானதாகும். கடந்த 2 ஆட்டங்களில் செய்த தவறுகளில் இருந்து பாடம் கற்று இருக்கிறோம். எங்களது சரிவுகளை சரிசெய்ய அடுத்த ஆட்டத்திற்கு முன்பு நிறைய காலம் இருப்பதாக கருதுகிறேன். தற்போதைய அணியில் இடம் பிடித்துள்ள 4 வீரர்களுக்கு மட்டுமே இந்தியாவில் டெஸ்ட் போட்டியில் விளையாடிய அனுபவம் இருக்கிறது. இந்தியாவில் உள்ள தட்பவெப்பநிலை, உணவு, ஆடுகளம் உள்ளிட்ட அனைத்து அம்சங்களும் எங்களுக்கு வித்தியாசமானதும், கடினமானதும் ஆகும் எனவும் அவர் தெரிவித்தார்.

## ஞாபகம் இருக்கிறதா?



புதிய கண்டுபிடிப்புக்கள், அதன் பயனாக உருவாகக்கூடிய நவீன வரவுகளினால் நாம் இழந்துபோனவை பலவுண்டு. இந்த வகையில் உடலுக்கும் மனதிற்கும் மிக வலிமை சேர்க்கின்ற, எங்கள் பாரம்பரியத்தை கட்டியம் கூறுகின்ற 'மல்லர் கம்பம்' என்ற தமிழர் பாரம்பரிய விளையாட்டை நாம் மறந்து போனமை மிக துயரமான விடயம் தான். (எஸ்.பி.)

# வவுனியா கோட்ட மட்ட மென்பந்து இறம்பைக்குளம், இந்துக் கல்லூரி சம்பியன்

(வவுனியா)

வவுனியா கோட்ட மட்ட மென்பந்து கிரிக்கெட் போட்டியில் இறம்பைக்குளம் மகளிர் கல்லூரி, வவுனியா இந்துக் கல்லூரி அணிகள் சம்பியன் பட்டத்தைக் கைப்பற்றிக் கொண்டன.

வவுனியா கோட்ட மட்ட பாட சாலைகளுக்கிடையிலான மென்பந்து கிரிக்கெட் போட்டிகளில் வெற்றியீட்டிய அணிகளின் விபரம் அதன் கோட்டக் கல்வி அதிகாரி எம்.பி. நடராஜினால் வெளியிடப்பட்டது.

இதில் பெண்கள் பிரிவில் முதலாமிடத்தை இறம்பைக்குளம் மகளிர் கல்லூரி அணியும், இரண்டாமிடத்தை சைவப்பிரகாச மகளிர் கல்லூரி அணியும், மூன்றாமிடத்தை வவுனியா இந்துக் கல்லூரி அணியும் பெற்றுக் கொண்டன.

ஆண்கள் பிரிவில் முதலாமிடத்தை வவுனியா இந்துக் கல்லூரி அணியும், இரண்டாமிடத்தை வவுனியா தமிழ் மத்திய மகாவித்தியாலய அணியும், மூன்றாமிடத்தை பண்டாரிக்குளம் விபுலானந்தாக் கல்லூரி அணியும் பெற்றுக்கொண்டது.

இப்போட்டிகள் அணிக்கு ஆறு பேர் கொண்ட ஐந்து ஓவர்கள் கொண்ட மென்பந்து கிரிக்கெட் தொடராக இடம் பெற்றமை குறிப்பிடத்தக்கது. (160)




## ஐக்கியம் சம்பியன்

(பருத்தித்துறை)

பருத்தித்துறை பிரதேச மட்ட எல்லேப் போட்டியில் பருத்தித்துறை ஐக்கியம் அணி சம்பியன் பட்டத்தைக் கைப்பற்றிக் கொண்டது.

பருத்தித்துறை பிரதேச செயலகத்தினால் பதிவு செய்யப்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கிடையே நடைபெற்ற ஆண்களுக்கான எல்லே போட்டியின் இறுதிப்போட்டி கடந்த வாரம் அல்வாய் மனோகரா விளையாட்டுக்கழக மைதானத்தில் நடைபெற்றது.

இதில் பருத்தித்துறை சென்.தோமஸ் விளயாட்டுக் கழகத்தை எதிர்த்து பருத்தித்தறை ஐக்கியம் அணி மோதியது. விறுவிறுப்பாக நடைபெற்ற இப்போட்டியில் 10:9 என்ற புள்ளிகளின் அடிப்படையில் பருத்தித்துறை ஐக்கியம் அணி வெற்றி பெற்று சம்பியன் பட்டத்தைக் கைப்பற்றிக் கொண்டது. (93)

## இரண்டாவது சுற்றில் சிவானந்தா, ஐக்கியம்



(நெல்லியடி)

இமையாணன் விளையாட்டுக்கழகத்தினால் நடத்தப்பட்டு வரும் கால்பந்தாட்டத் தொடரின் இரண்டாவது சுற்றுக்கு சிவானந்தா மற்றும் கலட்டி ஐக்கியம் அணிகள் தகுதி பெற்றுள்ளன.

இமையாணன் மத்திய விளையாட்டுக்கழகம் பருத்தித்துறை கால்ப்பந்தாட்ட லீக்கின் அனுமதியுடன் யாழ். மாவட்ட கால்ப்பந்தாட்ட அணிகளுக்கிடையில் விலகல் முறையிலான கால்பந்தாட்டச் சுற்றுப்போட்டியை நடத்தி வருகின்றது.

சுற்றுப்போட்டியில் கடந்த செவ்வாய்க்கிழமை இமையாணன் விளையாட்டுக்கழக மைதானத்தில் நடைபெற்ற போட்டிகளில் முதல் போட்டியில் அல்வாய் பாரதி அணியினை எதிர்த்து சிவானந்தா அணி மோதியது. இப்போட்டியில் ஆரம்பம் முதலே ஆதிக்கம் செலுத்திய சிவானந்தா அணி 3:0 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்று இரண்டாவது சுற்றுக்குத் தகுதிபெற்றது.

தொடர்ந்து நடைபெற்ற இரண்டாவது போட்டியில்கலட்டி ஐக்கிய அணியினை எதிர்த்து வல்வைஆதிசக்தி அணிமோதியது. இப்போட்டியில் சிறப்பாக விளையாடிய கலட்டி ஐக்கிய அணி 2:0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்று இரண்டாவது சுற்றுக்குத் தகுதிபெற்றது. (12)

# வேலணை பிரதேச மட்ட பெண்கள் கால்பந்து புங்குடுதீவு சென். சேவியர் சம்பியன்



(வேலணை)

வேலணைப் பிரதேச செயலக பெண்கள் கால்பந்தாட்டப் போட்டியில் புங்குடுதீவு சென். சேவியர் அணி சம்பியன் பட்டத்தைக் கைப்பற்றிக் கொண்டது.

வேலணைப் பிரதேச செயலக விளையாட்டு விழாவின் ஓர் அங்கமாக தற்போது பெரு விளையாட்டுப் போட்டிகள் நடைபெற்று வருகின்றன.

அந்த வகையில், பெண்களுக்கான கால்பந்தாட்டப் போட்டி அண்மையில் புங்குடுதீவு அம்பாள் விளையாட்டுக்கழக மைதானத்தில் நடைபெற்றது.

இதில் முதலாவது அரையிறுதிப் போட்டியில் துறையூர் ஐயனார் அணியை எதிர்த்து புங்குடுதீவு ஜனசக்தி அணி மோதியது. இரு அணிகளுமே வெற்றிக்காக இறுதி வரை போராடியபோதும் கோல் எதுவும் பெற்றுக்கொள்ளப்படாத நிலையில் போட்டி சமநிலையில் நிறைவடைந்தது. இந்நிலையில் தண்ட உதை மூலம் வெற்றி தோல்வி தீர்மானிக்கப்பட்டது. இதில் துறையூர் ஐயனார் அணி 03 : 02 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்று இறுதிப் போட்டிக்குத் தகுதிபெற்றது.

தொடர்ந்து நடைபெற்ற இரண்டாவது அரையிறுதிப் போட்டியில் புங்குடுதீவு சென்.சேவியர் அணியும், புங்குடுதீவு சண் ஸ்ரார் அணியும் மோதின. இப்போட்டியில் இரு அணிகளும் ஒன்றுக்கொன்று சளைத்தவை அல்ல என்பதை வெளிப்படுத்தும் வகையில் ஆடின. இறுதி வரை கோல் எதுவும் பெற்றுக்கொள்ளப்படாத நிலையில் போட்டி நிறைவுக்கு வந்தது. இந்நிலையில், தண்ட உதை மூலம் வெற்றி தோல்வி தீர்மானிக்கப்பட்டது. இதில் புங்குடுதீவு சென்.சேவியர் அணி 04 : 02 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்று இறுதிப் போட்டிக்கு முன்னேறியது.

தொடர்ந்து நடைபெற்ற இறுதிப் போட்டியில் துறையூர் ஐயனார் அணியும், புங்குடுதீவு சென்.சேவியர் அணியும் மோதியது. இதில் சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்தி புங்குடுதீவு சென்.சேவியர் 1-0 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்று சம்பியன் பட்டத்தைக் கைப்பற்றிக் கொண்டது. இப்போட்டி நிகழ்வில் பிரதேச விளையாட்டு உத்தியோகஸ்தர் மயூரன், யாழ். மாவட்ட விளையாட்டுச் செயலகத்தைச் சேர்ந்த உத்தியோகத்தர்கள், விளையாட்டுக்கழகத் தலைவர்கள், செயலாளர்கள், வீர, வீரரங்கனைகள் எனப் பலர் கலந்து கொண்டு போட்டியைக் கண்டு களித்தனர். (93)

# பிரதேச மட்ட எல்லே வவுனியா – பூவரசன் சம்பியன்

(வவுனியா)

வவுனியா பிரதேசமட்ட எல்லே போட்டியில் பூவரசன் அணி சம்பியன் பட்டத்தைக் கைப்பற்றிக் கொண்டது.

வவுனியா பிரதேச செயலக விளையாட்டு விழாவை முன்னிட்டு தற்போது பெரு விளையாட்டுப் போட்டிகள் நடைபெற்று வருகின்றது. இதில் ஆண்களுக்கான எல்லே போட்டி வவுனியா நகரசபை மைதானத்தில் அண்மையில் இடம்பெற்றது.

பல அணிகள் இப்போட்டித் தொடரில் பங்குபற்றியபோதும் இதன் இறுதிப் போட்டிக்கு வவுனியா யங்ஸ்ரார் அணியும், வவுனியா பூவரசன் அணியும் மோதின. இதில் வவுனியா பூவரசன் அணி 1-0 என்ற கணக்கில் புள்ளிகள் அடிப்படையில் வெற்றிபெற்று பிரதேச மட்ட சம்பியன் பட்டத்தைக் கைப்பற்றிக் கொண்டது.

இப்போட்டி நிகழ்வில் பிரதேச விளையாட்டு உத்தியோகத்தர், விளையாட்டுக்கழகத்தைச் சேர்ந்தோர், நலன் விரும்பிகள் எனப் பலர் கலந்து கொண்டு போட்டியைக் கண்டு களித்தனர். (93)

# பலன் அடையப்போவது அவர்கள், மீண்டும் பாதிப்படையப் போவது தமிழ்மக்கள்தான்!

ஜெனிவா மனித உரிமைப் பேரவையில் இலங்கைக்கு எதிரான அமெரிக்கப் பிரேரணை குறித்த அறிவிப்பு வெளியானவுடனேயே அதன் மூலம் இலங்கையில் பாதிக்கப்பட்டிருக்கும் தமிழ் மக்களின் அனைத்துப் பிரச்சினைகளும் முடிவடையப் போகின்றன. இதனூடாக கனமான அரசியல் தீர்வு கிடைக்கப் போகின்றது என்ற மாயை சாதாரண மக்களிடம் தமிழ் ஊடகங்களினாலும், அரசியல்வாதிகளினாலும் ஏற்படுத்தப்பட்டன.

முன்னரே கூறியதுபோல, ஜெனிவா பேரவை என்பது தமிழ் மக்களின் உணர்வுகளுக்ும், பிரச்சினைகளுக்கும் முன்னுரிமை கொடுக்கும் இடமல்ல. அது உலகில் ஆதிக்கம் செலுத்துகின்ற நாடுகள் வளர்முக நாடுகளை தமது பிடிக்குள் கொண்டுவர எத்தனிப்பதற்கான நிகழ்ச்சி நிரலை உள்ளடக்கிய இடமாகும். இலங்கையில் தமிழ் மக்கள் மீதான அடக்குமுறை, தரமறுக்கப்படுகின்ற அரசியல் உரிமைகள் என்பன ஜெனிவாவில் போய் கூறித்தான் மேற்குலக நாடுகளினால் இலங்கையை ஏற்கச் செய்ய வேண்டும் என்றில்லை. இலங்கையில் நடந்தது, நடப்பது ஆதிக்க நாடுகள் அனைத்துக்கும் நன்கு தெரியும்.

இங்குள்ள முக்கிய விடயம் என்னவென்றால், இலங்கையில் மத்திய கிழக்கு நாடுகளைப் போல எரிபொருள் வளம் இல்லாவிட்டாலும் இந்து சமுத்திரத்தின் முக்கிய அமைவிட வளம் உள்ளது. தென்ஆசியாவையும், இந்துசமுத்திரத்தையும் கட்டுப்படுத்த நினைக்கும் எந்த சக்திக்கும் இலங்கையின் ஆதரவும், தளமும் முக்கியமானது.

அதனால் தான் தமது சொந்த, பிராந்திய நலனில் இலங்கையை கொண்டு வருவதற்காகவே இலங்கையின் தமிழர்பிரச்சினையும் மனித உரிமை மீறல்களும் முன்னிலைப்படுத்தப் படுகின்றன. இதில் அமெரிக்கா, இந்தியா, சீனா என்று யாரும் விதி விலக்கல்ல. இதனை இலங்கை அரசாங்கமும், தமிழர்களின் அரசியற் பிரதிநிதிகளும் நன்கு புரிந்துள்ளனர். ஆனால் சாதாரண தமிழ் மக்கள் இதனைப் புரிந்துகொள்வதற்கான சந்தர்ப்பத்தை ஊடகங்களும், அரசியற் கட்சிகளும் வழங்கவில்லை. ஏனெனில் இதில் தான் அவர்களின் வாக்கு வங்கியே உள்ளது. இதில் இலங்கை அரசாங்கம் எவ்வாறு சிங்கள மக்களை வழிநடாத்துகின்றதோ, அது போலவே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் தமிழ் மக்களை வழி நடாத்துகின்றது. ஜெனிவா பிரேரணை என்பதனூடாக தமது உள் பிரச்சினைகளைத் தீர்க்க முயல்கின்றன இரு தரப்பும்.

மனித உரிமைப் பேரவையில் இலங்கைக்கு எதிராக அமெரிக்காவினால் கொண்டுவரப்படவுள்ள தீர்மானம் மிக கடுமையான-தாக இருக்கப்போகின்றது என்ற தோற்றப்பாடு ஆரம்பத்தில் உருவாக்கப்பட்டது. இதில் உண்மையும் இருந்தது. அமெரிக்க இராஜதந்திரச் செயலகத்தினால் அவ்வாறான தோற்றப்பாடு இலங்கைக்கு ஏற்படுத்தப்பட்டது. ஆரம்பத்தில் தயாரிக்கப்பட்ட நகல் தீர்மானம் இதனை உறுதிப்படுத்தியது அமெரிக்காவிற்கும் நன்கு தெரியும் இதில் மாற்றங்கள் ஏற்படுத்தப்படும் என்று.

அமெரிக்காவின் தேவையினை இலங்கை அரசாங்கம் பூர்த்தி செய்யுமாக இருந்தால் பிரேரணையின் வலு குறைவடையும் என்பதை இலங்கை புரிந்து கொண்டது. இவ்விடயத்தில் இரு தரப்பிற்கும் தரகராகச் செயற்பட்டது, செயற்படுகின்றது இந்தியாதான். ஏனெனில் இதில் இந்தியாவின் பிராந்திய நலனும், உள்நாட்டு அரசியலும் உள்ளது.

இலங்கை விவகாரத்தில் இந்தியா தவிர்க்க முடியாத சக்தி. இலங்கை அரசாங்கம் யாருடன் நெருங்கிப்பழகினாலும், யாரின் உதவியைப் பெற்றாலும் இந்தியாவை தவிர்க்கவோ, புறக்கணிப்பதோ கடினம். இவ்வடிப்படையில் இந்தியா இலங்கை மீதான தனது செல்வாக்கை உறுதிப்படுத்த வேண்டும். அதேநேரம் தமிழ்நாட்டு மக்களின் உணர்வுகளை மதிப்பதாக காட்டவும் வேண்டும்.

எனவே தான் இலங்கைக்கு எதிராக வலுவில்லாத, எவ்வச்சுறுத்தலும் இல்லாத தீர்மானம் ஒன்றை அமெரிக்கா கொண்டுவரும் பட்சத்தில் அதனை இந்தியா ஆதரிப்பதில் எப் பாதிப்பும் இல்லை. இவ்வாறான நிலைமை ஏற்படும்போது இந்தியாவினால் தமிழ்நாட்டு மக்களின் உணர்வுகளுக்கு மதிப்பளித்து இலங்கைக்கு எதிராக வாக்களித்ததாகவும், மறுபடியும் இலங்கைக்கு எதிரான அமெரிக்க நெருக்கடியை தணித்து தனது செல்வாக்கை உறுதிப்படுத்தியதாகவும் அமையும்.

இதற்காக இலங்கை அமெரிக்காவிற்கும், இந்தியாவிற்கும் தெளிவுபடுத்த வேண்டிய விடயம் என்னவென்றால், சீனாவுடன் நெருக்கமாகி வரும் தனது உறவு பொருளாதார நலன் சார்ந்தது மட்டுமே. அரசியல், பாதுகாப்பு, ஒத்துழைப்பு என்பதில் முன்னுரிமை அமெரிக்காவிற்கும், இந்தியாவிற்கும் தான் என்பதே.

உண்மை நிலைமையும் இதுதான். சீனாவுடனான இலங்கையின் உறவு சீனாவிடமிருந்து கடன்கள், ஏனைய பொருளாதார விடயங்களை மையப்படுத்தியே உள்ளது. உலக வல்லரசான அமெரிக்காவையும், பிராந்திய வல்லரசான இந்தியாவையும் தாண்டி பாதுகாப்பு ஒத்துழைப்பில் சீனாவுடன் இணங்குவது சாதுரியமான விடயமல்ல என்பதை இலங்கையின் கொள்கை வகிப்பாளர்கள் நன்கு உணர்வர்.

எனவே, இலங்கை, இந்தியா, அமெரிக்கா ஆகிய மூன்றும் ஒரே புள்ளியில் வருகின்ற போது ஜெனிவாத் தீர்மானம் என்பது வலுவில்லாத ஒன்றாக மாறும். இதனால் பயனடைவது இந்தியா, இலங்கை, அமெரிக்கா மற்றும் தமிழ் தேசிய கூட்டமைப்பினர், பாதிக்கப்படுவது மீண்டும் தமிழ் மக்கள் தான்.



**- எம்.எம்.எம். ஹன்சீர் கட்டுரையிலிருந்து.**


# பிழையின்றித் தமிழ் 2

**- ஞானச்செல்வன் -**

இடையின ரகரம் வல்லின றகரம்:

இவற்றைச் சின்ன "ர" பெரிய "ற" என்று சொல்லுதல் வழக்கத்தில் உள்ளது. பெரியவருக்குச் சின்ன "ர" போடவேண்டும் சிறியவருக்குப் பெரிய "ற" போடவேண்டும் என்று வேடிக்கையாகச் சொல்வர்.

ய ர ல வ ழ ள என்னும் இடையின எழுத்துகளுள் ஒன்று "ர". க ச ட த ப ற என்னும் வல்லின எழுத்துகளுள் ஒன்று "ற". தகராறு எனும் சொல்லில் (தகர்+ஆறு) "ர்" இடையினம் "று"-வல்லினம். சுவர் என்னும் சொல்லுடன் "இல்" உருபு சேர்த்தால் சுவர்+இல்=சுவரில் என்றுதான் ஆகும். ஆனால் பலரும் சுவற்றில் எழுதாதே என்று (சுவறு+இல்=சுவற்றில்) தவறாக எழுதுகிறார்கள். சோறு+இல்=சோற்றில் என்பது சரி. (வல்லொற்று இரட்டித்தல் என்பது இலக்கணம்) கயிறு என்று எழுதவேண்டிய சொல்லைக் கயர் எனத் தவறாக எழுதுவோர் உளர் (கயர் - வியாபாரம்).




**'ண'கர, 'ந'கர, 'ன'கரங்கள்:**

மூன்று சுழி "ண"னா, இரண்டு சுழி "ன"னா, காக்கா மூக்கு "ந"னா என்றெல்லாம் சொல்லுவதை விட்டு விடுவோம். தமிழ் எழுத்துகளின் வரிசையில் "ட" பின் வருவது டண்ணகரம் "த"பின் வருவது தந்நகரம் "ற"பின் வருவது றன்னகரம் என்று சுட்டப்படுதல் வேண்டும். இந்த மூன்றும் இடம்மாறி - எழுத்துமாறி போடப்பட்டால் பெரும் குழப்பமாகிவிடும். பொருள் வேறுபட்டுச் சிதைவு ஏற்படும். ஆதலின் கவனமாக இவ்வெழுத்துகளைப் பயன்படுத்த வேண்டும்.

பணி - குளிர்ச்சியானது

பணி - பணிந்து போ, தொண்டு

பதநி - (பதநீர்) இளநி (இளநீர்) - பருகுபவை

அன்னை - தாய்; அண்ணன் - தமையன்; அந்நாள் - அந்தநாள். எந்த இடத்தில் எந்த எழுத்தைப் போடவேண்டும் என்று அறிதல் அவசியம். இன்றைய தமிழில் நேர்ந்துவிட்ட சிதைவுகள் - பிழைகள் பற்றி இனி விரிவாகக் காண்போம்.

**சரியெனக் கருதும் பிழையான சொற்கள்:**

**1.** கோர்வை, கோர்த்து:

அவர் நன்றாகக் கோர்வையாகப் பேசினார் என்றும், இருநாட்டு அதிபர்களும் சந்தித்தபோது கை கோர்த்துக் கொண்டனர் என்றும் செய்தித்தாளில் படிக்கிறோம். கோவையாகப் பேசினார், கை கோத்துக் கொண்டனர் என்பனதாம் சரியானவை. இடையில் ஒரு "ர்" சேர்ப்பது தவறு. சான்று: நான்மணிக்கோவை, ஆசாரக்கோவை. "எடுக்கவோ கோக்கவோ என்றான்" (வில்லி).

**2.** முகர்ந்து:

மலரை எடுத்து முகர்ந்து பார்த்தான் என்று கதையில் எழுதுகிறார்கள். முகர்ந்து என ஒரு சொல் தமிழில் இல்லை. நுகர்ந்து என ஒரு சொல், அனுபவித்து எனும் பொருள் கொண்டது. முகந்து என ஒரு சொல், (நீரை முகந்து) அள்ளி எனும் பொருள் கொண்டது. மோந்து எனும் சொல்லே முகர்ந்து என மாறிவிட்டது. மோந்து பார்த்தல் என்று சொல்லுவதில்லையா? மோப்பநாய், "மோப்பக்குழையும் அனிச்சம்" என்பன காண்க.

**3.** முயற்சிக்கிறேன்:

"உனக்காக நான் முயற்சிக்கிறேன்" என்று பேசுகிறார்கள். உனக்காக நான் முயல்கிறேன் என்றோ, முயற்சி செய்கிறேன் என்றோ சொல்ல வேண்டும். முயற்சிக்கிறேன் என்பது பிழை. முயற்சி ஒரு தொழில்பெயர். முயல் என்பது வினைப் பகுதியாயினும் முயற்சி எனும் சொல் (தொழில்) பெயர்ச்சொல் ஆகிவிடுவ தால் முயற்சிக்கிறேன் பிழையாகிறது. ஆடுதல், பாடுதல் என்பனவும் தொழில் பெயர்களே. ஆடுதலிக்கிறேன், பாடுதலிக்கிறேன் என்பதுண்டோ?

4. அருகாமையில்:

என் வீடு அருகாமையில் உள்ளது என்று சொல்லுகிறோம். அருகில் உள்ளது என்றுதான் சொல்ல வேண்டும். அருகாமை எனில் அருகில் இல்லாமை (அருகு+ஆமை) - சேய்மை எனும் பொருள் உண்டாகும். இல்லாமை, கல்லாமை, நில்லாமை, செல்லாமை என்பனவற்றுள் "ஆ" எதிர்மறை இடைநிலை இருப்பதுபோலவே, அருகாமையிலும் உள்ளது.

# எப்படி ஜெயித்தார் எம்.ஜி.ஆர்.

- அதிஷா -

1937 ஆண்டு. கல்கத்தாவில் மாயா மச்சீந்திரா என்கிற படத்தின் சூட்டிங். அப்போது எம்.ஜி.ஆர். சாதாரண ராமசந்தராகத்தான் இருந்தார். புரட்சித் தலைவரெல்லாம் கிடையாது. துடிப்பான இளைஞரான எம்.ஜி.ஆர். அக்காலகட்டத்தில் ஏகப்பட்ட ஆங்கிலப்படங்கள் பார்க்கிறார். இத்தனைக்கும் எம்.ஜி.ஆருக்கு அந்த சமயத்தில் ஆங்கிலம் சுத்தமாக தெரிந்திருக்கவில்லை. இருந்தாலும் சினிமாவின் மீது தீராத ஆர்வமும் குறுகுறுப்பும் துறுதுறுப்புமாக திரிந்த காலம் அது.

ஒரு நாள் சில நண்பர்களுடன் ஆங்கிலப் படம் ஒன்றைப் பார்க்கிறார். அப்படத்தின் பெயர் If i were a king. ரொனால்ட் கோல்மன் என்கிற நடிகர் நடித்த சூப்பர் ஹிட் படம் அது. படம் முழுக்க IF I WERE A KING என்கிற வசனம் படம் முழுக்க இடம்பெறுகிறது. அந்த வசனத்துக்கு மட்டும்தான் அர்த்தம் தெரிந்துவைத்திருந்தார் எம்.ஜி.ஆர். படம் பார்த்துவிட்டு தன் அறைக்கு வந்து விதவிதமாக "நான் மன்னனானால்" என்கிற வசனத்தை விதவிதமாக சொல்லிப்பார்க்கிறார். ஒருவேளை தான் தமிழ்நாட்டுக்கே மன்னனானால் என்னவெல்லாம் செய்ய வேண்டும் என்று சிந்தித்துப்பார்க்கிறார்.




"அந்தக் காலத்திலேயே ஏழ்மையை பற்றியும் மக்களின் நிலையைப்பற்றியும் சிந்தித்தவன் நான் சிந்தித்தவன் என்பதை விட அனுபவித்துக் கொண்டிருந்தேன் என்பதே சரியானது... நாட்டிலே இதுபோன்ற தொல்லைகள் ஏன் இருக்க வேண்டும் என அடிக்கடி எண்ணுவேன்... அதுதான் இந்த நாடோடியை மன்னனாக மாற்றியது" என்கிறார் எம்.ஜி.ஆர்.

பின்னாளில் எம்.ஜி.ஆர் தமிழ்நாட்டுக்கே மன்னன் ஆனதெல்லாம் வரலாறு. அவர் நடித்து வெளியாகி சரித்திரம் படைத்த நாடோடி மன்னன் திரைப்படத்துக்கான கருப்பொருள் இப்படித்தான் உருவானது. நாடோடி மன்னன் திரைப்படம் வெளியாகி மிகப்பெரிய வெற்றிபெற்றபோது அதற்காக வெள்ளிவிழா மலர் தயாரிக்கப்பட்டது. அதில் இப்படத்தின் பின்னணிகள் குறித்து நிறைய தகவல்களை பகிர்ந்திருக்கிறார் எம்.ஜி.ஆர். படத்தை தயாரிப்பதில் தொடங்கி அதை படமாக்குவதில் பட்ட இன்னல்களை தனக்கேயுரிய அடக்கத்துடன் பகிர்ந்துகொள்கிறார்.

இன்று ஏகப்பட்ட ஹொலிவுட் மற்றும் உலகசினிமாவிலிருந்து கதையை சுட்டு படமெடுப்பதை பார்க்க முடிகிறது. நாடோடி மன்னனும் கூட prisoner of zenda என்கிற படத்தின் தழுவல்தான். ஆனால் அதை தன் படத்துக்கான முதல் விளம்பரத்திலேயே அறிவித்திருக்கிறார் எம்.ஜி.ஆர். அதோடு ஆங்கிலக்கதையை எப்படி தமிழுக்கு ஏற்றபடி மாற்றி அமைத்தார் என்பதையும் குறிப்பிட்டு ஒரு கட்டுரையில் விளக்குகிறார்.

நாடோடி மன்னன் திரைப்படம் பாதி கறுப்பு வெள்ளையிலும் மீதி கலரிலும் இருக்கும். படத்தின் ஒளிப்பதிவாளரான ராமுவின் மீது எம்.ஜி.ஆருக்கு அப்படி ஒரு மரியாதை. அதனால் படம் முழுமைக்கு அவரை ஒளிப்பதிவாளராக பயன்படுத்துவது என முடிவாகிறது. ஆனால் ராமுவோ தான் கலர் படத்தில் வேலை பார்த்த அனுபவமே கிடையாது வேறு யாராவது நல்ல நிபுணரை பயன்படுத்திக் கொள்ளுங்களேன் என்று எம்.ஜி.ஆரிடம் கேட்கிறார். ஆனால் எம்.ஜி.ஆரோ நீங்கள்தான் வண்ணக்காட்சியையும் படமாக்க வேண்டும்.. இல்லையென்றால் படத்தில் கலரே வேண்டாம் என்று சொல்லிவிடுகிறார்.

தொழில்நுட்ப கலைஞர்கள் மட்டுமல்லாது படத்தின் நடிக நடிகையர் அனைவரது உழைப்பையும் விளக்கும் வகையிலான கட்டுரைகளும் இப்புத்தகத்தில் உள்ளன. குறிப்பாக சந்திரபாபு குறித்தும் அவருடனான எம்.ஜி.ஆரின் உரசலும் சுவாரஸ்யமானது.


எம்.ஜி.ஆர். ஒரு காட்சிக்காக சில குதிரைகளை ஏற்பாடு செய்கிறார். அதில் ஒன்று முரட்டுக்குதிரை. சந்திரபாபு அந்தக் குதிரையில்தான் பயணிப்பேன் என்று அடம்பிடிக்கிறார். எம்.ஜி.ஆர். எவ்வளவோ தடுத்தும் கேட்காமல் அதில் ஏறி.. அடுத்த ஐந்தாவது நிமிடத்தில் கீழே விழுந்து கைகால்களில் காயத்தோடு திரும்புகிறார். அச்சமயத்தில் எம்.ஜி.ஆர். சந்திரபாபுவுக்கு கொடுத்த அறிவுரை சினிமா கலைஞர்கள் அனைவருமே தெரிந்துகொள்ள வேண்டிய ஒன்று.

"சந்திரபாபுவின் திறமையை மக்கள் போற்றுகிறார்கள் புகழுகிறார்கள் என்றால் அந்த சந்திரபாபு தன்னிடமிருக்கும் கலைத்திறனை எத்தனை தொல்லைகளுக்கிடையே எத்தனை எதிர்பார்ப்புகளுக்கிடையே கற்றுக்கொண்டிருப்பார். அதற்காக எத்தனை வருடங்கள் உழைப்பு தேவைப்பட்டிருக்கும். அவைகளை எல்லாம் ஒரேநாளில் நினைத்ததும் பெறமுடியாத அந்த திறமைகளையெல்லாம் ஒரே விநாடியில் இழந்துவிடும் நிலைக்கு நம்மை கொண்டு செல்வது ஒரு கலைஞன் மக்களுக்கு செய்கிற மகத்தான துரோகமில்லையா" என்று குறிப்பிடுகிறார்.

இதுபோல இன்னும் ஏகப்பட்ட சுவாரஸ்யமான தகவல்கள் புத்தகமெங்கும் நிறைந்திருக்கிறது. அந்தகாலத்து சலிப்பூட்டும் எழுத்து நடைதான் என்றாலும் சம்பவங்கள் பலதும் "அட!" போட வைக்கின்றன. அக்காலகட்டத்துக்கே நம்மை அழைத்துச்செல்கின்றன.

புத்தகம் முழுக்க எம்.ஜி.ஆர். தன்னுடைய புரட்சிதலைவர் இமேஜையெல்லாம் தள்ளிவைத்துவிட்டு ஒரு சாதாரண ராமசந்தராகவே நம்மோடு உரையாடுகிறார். அந்த எளிமையும் தன்னடக்கமும்தான் ராமசந்தர் என்கிற நாடோடியை மன்னனாக்கியதோ என்னவோ!

ஒரு திரைப்படத்தின் வெற்றி என்பது தனிநபருக்கு மட்டுமே சொந்தமானதல்ல. அதன் ஒவ்வொரு ஃப்ரேமுக்கு பின்னாலும் எண்ணற்ற மனிதர்களின் வியர்வையும் உழைப்பும் அடங்கி இருக்கிறது. அந்த மகத்தான உழைப்பு எப்படி பயன்படுத்தப்படுகிறது என்பதில்தான் வெற்றியின் சூத்திரம் அடங்கியிருக்கிறது. அதை தெரிந்துகொள்ள விரும்புபவர்கள் கட்டாயம் படிக்க வேண்டிய புத்தகம் இந்த "எப்படி ஜெயித்தேன்!"



# ஜி.வி. விசாரிப்பு!

- தமிழ்மகன் -

இயக்குநர் ராஜகுமாரனை மணந்த பிறகு தேவயானி தயாரித்த படம் "காதலுடன்". குடும்பத்தைப் பகைத்துக் கொண்ட நேரத்தில் மிகுந்த சிரமத்துக்கிடையில் அவர் தயாரித்த படம் இது. நடிகர்கள் சம்பள பாக்கிக்காகவும் ஃபைனான்ஸியர்கள் வட்டிக்காகவும் அவரைப் படாத பாடுபடுத்தினர். படம் தயாரான பிறகும் ரிலீஸாகாமலேயே இருந்தது.

மிகுந்த சிரமத்துக்கிடையே படத்தை ரிலீஸ் செய்தார் தேவயானி. பத்திரிகையாளர் காட்சி முடிந்தது. அதே நாளில் மணிரத்னத்தின் அண்ணன் ஜி.வி. (ஜி.வெங்கடேஸ்வரன்) மகள் திருமண வரவேற்பு. ஏவி.எம். ராஜேஸ்வரி மண்டபத்தில் நடந்தது. படம் முடிந்த கையோடு அந்தத் திருமண வரவேற்புக்கு பத்திரிகையாளர்கள் கூட்டமாகக் கிளம்பினோம். மணமக்கள் பக்கத்தில் இருந்தார் ஜி.வி.

பத்திரிகையாளர்கள் எல்லோரும் ஒட்டு மொத்தமாக வந்ததைப் பார்த்து "எல்லாரும் எங்கிருந்து வருகிறீர்கள்?" என்றார்.

சொன்னோம். "படம் தப்பிச் சுடுமா?" என்றார். மணமக்களுக்கான வரவேற்புக்கிடையில் வரிசையாக பிரபலங்கள் வந்து கொண்டிருந்த வேளையில் மிகவும் அக்கறையாக "காதலுடன்" படத்தைப் பற்றி விசாரித்துக் கொண்டார்.

எதற்காக "காதலுடன்" படத்தின் ரிசல்டைப் பற்றி இவ்வளவு விசாரிக்கிறார் என்று அப்போது புரியவில்லை.

அடுத்த சில மாதங்களில் அவர் கடன் தொல்லை காரணமாகத் தற்கொலை செய்து கொண்டார். அப்போது அவர் விசாரித்ததன் முழு அர்த்தத்தையும் வலியுடன் உணர்ந்தேன்.

# பின்லேடனைக் கொன்றவருக்குச் சோதனை!



அமெரிக்காவின் "நேவி சீல்" என்ற அதிரடிப்படையைச் சேர்ந்த இராணுவ வீரர்கள் பாகிஸ்தானில் பின்லேடன் வசித்த அபோதாபாத் நகரிலுள்ள மாளிகையில் புகுந்து பின்லேடனை கொன்றனர். பின்லேடனை நேருக்கு நேர் நின்று சுட்டுக் கொன்ற வீரர் சம்பவம் நடந்தவிதம் குறித்து அமெரிக்க பத்திரிகை ஒன்றுக்கு பேட்டியளித்துள்ளார்:

ஓய்வு பெற்றுவிட்ட அந்த இராணுவ வீரருக்கு தற்போது ஓய்வூதியம் கூட கிடையாது. அமெரிக்க இராணுவத்தில் 20 வருடங்கள் பணியாற்றி இருந்தால் மட்டுமே ஓய்வூதியம் வழங்கப்படும். அவ்வீரர் 16 ஆண்டுகள் பணியாற்றி ஓய்வு பெற்றதால் ஓய்வூதியம் பெறத் தகுதியில்லை. அவருக்கும் அவர் குடும்பத்தைச் சார்ந்தவர்களுக்கும் மருத்துவக் காப்பீடும் இதனால் கிடைக்கவில்லை. அவரையும் அவரது குடும்பத்தினரையும் பழிக்குப் பழிவாங்கும் தாக்குதல் நடைபெறக்கூடும் என்ற அச்சத்துடனேயே அவர் வாழ்க்கை நடத்துவதாகச் சொல்லியிருக்கிறார்.



# மாணவனால் உருவான உலகப்போர்

முதல் உலகப்போர் தோன்றுவதற்கு உடனடி காரணமாயிருந்தது ஒரு மாணவன். செர்பியா நாட்டில் THE BLACK HAND SOCIETY எனும் இயக்கத்தில் உறுப்பினராக இருந்த அந்த மாணவன் அந்நாட்டிற்கு வந்திருந்த ஆஸ்திரிய அரசர் பேர்டினன்ட்டையும் அவரது மனைவி அரசி ஸோபியாவையும் 12.06.1914 அன்று சுட்டுக் கொன்றுவிட, உடனே உலகப்போர் ஆரம்பமாகிவிட்டது.

# அறிமுகமாகின்றது அப்பிளின் iphone 5s



அப்பிளின் அடுத்த வெளியீடான 'ஐபோன் 5எஸ்' எதிர்வரும் ஆகஸ்ட் மாதம் அறிமுகப்படுத்தப்படுமென தகவல் வெளியாகியுள்ளது. ஐபோன் 5எஸ் ஆனது, தோற்றத்தில் ஐபோன் 5 ஐப் போன்றதாகவே இருக்குமெனவும், வேகமான புரோசசர் மற்றும் மேம்பட்ட கமராவினைக் கொண்டிருக்குமெனவும் தெரிவிக் கப்படுகின்றது. இது தவிர குறைந்த விலையில் ஐபோன் ஒன்றையும்,ஐபோன் 5எஸ் உடன் அப்பிள் வெளியிடலாம் என எதிர்பார்க்கப்படுகின்றது. இதுமட்டுமன்றி புதிய ஐபேட் ஒன்றையும் அப்பிள் இவ்வருடத்திற்குள் அறிமுகப்படுத்தும் என உத்தியோகப் பற்றற்ற தகவல்கள் தெரிவிக்கின்றன.

இதேவேளை அப்பிளின் நேரடிப் போட்டியாளனும், பெரும் தலையிடியாகவும் மாறியுள்ள நிறுவனமான 'சம்சுங்' தனது 'கலக்ஸி' வரிசையின் புதிய ஸ்மார்ட் போனான 'கலக்ஸ் 4எஸ்'இனை இம்மாதம் 14 ஆம் திகதி அறிமுகப்படுத்தவுள்ளது. சுமார் 3 வருடங்களின் பின்னர் சம்சுங் தனது ஸ்மார்ட் போனொன்றிற்கான அறிமுக நிகழ்வை அமெரிக்காவில் நடத்தவுள்ளது.



நிஜ உலகில் நண்பர்கள் இருப்பது போல சமூக வலைத்தளங்களான பேஸ்புக்கிலும், டுவிட்டரிலும் நண்பர்கள் கிடைக்கின்றனர். இவர்களில் பேஸ்புக் நண்பர்கள் ஒருவிதம் என்றால் டுவிட்டர் நண்பர்கள் இன்னொரு விதம். பேஸ்புக்கில் நண்பராக ஏற்க சம்மதமா? என்று கேட்டு அது ஏற்றுக்கொள்ளப்பட்டால், நண்பர்களாகலாம். டுவிட்டரில் அப்படி இல்லை, ஒருவருடைய குறும்பதிவுகள் பிடித்திருந்தால் அல்லது பயனுள்ளதாக இருக்கும் என்று நினைத்தால் அவரது டுவிட்டர் கணக்கை பின்தொடர ஆரம்பித்து விடலாம். அந்த நொடியில் இருந்து அவர் டுவிட்டர் நண்பராகி விடுவார். டுவிட்டரில்த்தான் சந்திக்க வேண்டும் என்றில்லை. நிகழ்ச்சிகளில் சந்தித்து பேசும் போது கூட டுவிட்டரில் இருக்கிறீர்களா என்று கேட்டு டுவிட்டர் முகவரியை வாங்கி பின்தொடரலாம்.

எல்லாம் சரி டுவிட்டர் நண்பர்கள் அதிகரிக்கும் போது குறிப்பிட்ட டுவிட்டர் நண்பர்களை எங்கே சந்தித்தோம் என்பது நினைவில் இல்லாமல் போகலாம். டுவிட்டரில் ஒருவரை எப்படி சந்தித்தோம் என்ற தகவல் பல காரணங்களுக்காக தேவைப்படலாம்.

# பின்தொடர்ந்த டுவிட்டர் நண்பர்களை ஞாபகத்தில் வைத்துக்கொள்வது எப்படி?

இந்தத் தேவையை நிறைவேற்றுவதற்காக என்றே ஒரு இணைய சேவை இருக்கிறது. met.nu என்னும் அந்த தளம்மூலம் டுவிட்டர் சந்திப்புகளை குறித்து வைத்துக்கொள்ளலாம். இந்த சேவையை புக்மார்க்கிங் துண்டாக தரவிறக்கம் செய்து கொண்டால், அது பிரவுசரில்போய் உட்கார்ந்து கொள்ளும். அதன் பின்னர் புதிய டுவிட்டர் நண்பர்கள் கிடைக்கும் போது இந்த புக்மார்க் துண்டை கிளிக் செய்து, அந்த டுவிட்டர் நண்பர் எங்கே எப்படி அறிமுகமானார் என்பதைக் குறித்து வைத்துக்கொள்ளலாம். அவரது தொடர்பு, முகவரி மற்றும் தொலைபேசி எண்ணையும் குறித்துக் கொள்ளலாம். பின்னர் எப்போது தேவை என்றாலும் இந்த குறிப்புகளை பார்த்துக் கொள்ளலாம்.

# வின்டோஸ் 7 இயங்கு தளம் கொண்ட கணனியை எப்படி தமிழில் பயன்படுத்துவது?

முதலில் இந்த இணைப்பில் (http://www.microsoft.com/downloads/details.aspx?FamilyID=a1a48de1-e264-48d6-8439-ab7139c9c14d&displaylang=ta)

உங்கள் கணினியில் தரவிறக்கம் ஆன பின்பு, அதை உங்கள் கணனியில் நீங்கள் இன்ஸ்டோல் செய்ய வேண்டும்.

Next என்பதை தெரிவு செய்து, பின் அடுத்து வரும் பகுதியில் I"Accept the license terms" என்பதை தெரிவு செய்து மீண்டும் ஒரு Next, அடுத்து மீண்டும் ஒரு Next, இப்போது தமிழ் மொழி உங்கள் கணனியில் இன்ஸ்டோல் ஆகும்.

இன்ஸ்டோல் ஆன பின் மீண்டும் Next என்பதை கிளிக் செய்யுங்கள். இப்போது நீங்கள் Display மொழியை தெரிவு செய்ய வேண்டும். அதில் தமிழ் என்பதை தெரிவு செய்து "Apply display language to welcome screen and system accounts" என்பதை கிளிக் செய்து "Change Display Language" என்பதை கிளிக் செய்யுங்கள்.


அவ்வளவு தான் இப்போது உங்கள் கணனியை ஒரு முறை நீங்கள் Restart செய்ய வேண்டும்.

இனி உங்கள் கணனி தமிழில் இயங்க ஆரம்பிக்கும். அனைத்து வசதிகளும், செயல்களும் தமிழில் இல்லாவிட்டாலும் பொதுவான பல விடயங்கள் தமிழில் இருக்கும்.

இனி ஆங்கிலம் தெரியாதவர்கள் கூட கணனியில் அடிப்படை விடயங்களைச் செய்ய முடியும்.

மீண்டும் ஆங்கிலத்துக்கு மாற: ஸ்டார்ட் மெனு>> கட்டுப்பாட்டுப் பலகம்>> காட்சி மொழியை மாற்றவும் எனபதை கிளிக்செய்து மாற்றலாம். இவ்வாறு வராதவர்கள் கட்டுப் பாட்டுப் பலகம் >> வட்டாரம் மற்றும் மொழி என்பதைக் கிளிக்செய்து வரும் சிறிய வின்டோவில் விசைப் பல கைகளும், மொழிகளும் என்கிற பகுதியில் காட்சி மொழி ஒன்றை, தேர்வு செய்யவும் என்பதற்கு கீழே English என்பதை தெரிவு செய்யுங்கள்.

ஆங்கிலத்தில் இருந்து தமிழுக்கு மாற (இன்ஸ்டால் செய்த பின்): Control Panel >> Change Display Language என்பதை கிளிக் செய்து மாற்றலாம். இவ்வாறு வராதவர்கள் Control Panel>> Region and Language என்பதை கிளிக் செய்து வரும் சிறிய வின்டோவில் Keyboards and Language என்பதில்Choose a Display Language கீழே தமிழை தெரிவு செய்து கொள்ளலாம்.




# நவீன தொழில்நுட்பங்களுடன் கூடிய டிஜிட்டல் கடிகாரம் அறிமுகமாகியது







தற்போது அதிகரித்துவரும் டிஜிட்டல் கடிகார பாவனையின் விளைவாக ஒட்டுமொத்த கணனித் தொழில்நுட்பத்தையும் கைப் பேசிகளுக்கு அடுத்தபடியாக இவற்றுள் திணிப்பதற்கு முயற்சிப்பதை 'Neptune Pine' கடிகாரத்தின் வரவு உணர்த்துகின்றது. அதாவது அழைப்புக்களை ஏற்படுத்துதல், புகைப்படங்கள் எடுத்தல், இணையத்தில் உலாவுதல் போன்ற வசதிகளை உள்ளடக்கியதாக 'Neptune Pine' எனும் கடிகாரம் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. Android 4.0 இயங்கு தளத்தினை அடிப்படையாகக் கொண்டு உருவாக்கப்பட்ட இக்கடிகாரங்கள் 2.5 அங்குல அளவுடைய தொடுதிரையினைக் கொண்டுள்ளதுடன், GSM/GPRS/EDGE, 3G, 802.11 WiFi மற்றும் Bluetooth 4.0 வசதிகளையும் உள் அடக்கியுள்ளன. இவற்றின் பெறுமதியானது, 325 அமெரிக்க டொலர்கள் ஆகும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.







# கூகுள் ருசிகரம்

கூகுள் நிறுவனத்திற்கு உலகில் உள்ள அனைத்து தகவல்களும் அத்துப்படி. எதனைக் கேட்டாலும். இணையத்திலிருந்து தேடி எடுத்துத் தரும் அசகாய சூரன். இங்கு கூகுள் நிறுவனத்தைப் பற்றியும், அதன் உருவாக்கம் மற்றும் செயற்பாடுகள் குறித்தும் பல ருசிகரமான தகவல்களைக் காணலாம்.

1. கூகுள் தேடுதல் தளத்தில் உள்ள சேர்ச் இஞ்சினுக்கு, இந்நிறுவனத்தினை நிறுவிய லாரி பேஜ் மற்றும் பிரின் இட்ட பெயர் பேக்ரப் (BackRub).

2. கூகுள் நிறுவனத்தின் முதல் அலுவலகம் இன்டெல் நிறுவன மனேஜர் வீட்டில் இருந்த கார் ஷெட்டில் இயங்கியது.

3. ஓர் இணையத் தளத்தின் தரத்தினை அளக்க பேஜ் ராங்க் (Page Rank) என்ற அலகினை கூகுள் பயன்படுத்துகிறது.

4. ஜிமெயிலை உருவாக்கிய கூகுள் பொறியாளர் போல் புக்ஹெய்ட் (Paul Buchheit). இவர் தான் கூகுள் நிறுவனத்தின் புகழ் பெற்ற "Don't be evil" என்ற வாசகத்தைக் கொண்டு வந்தவர்.

5. கிராண்ட் சென்ரல் (GrandCentral) என்ற நிறுவனத்தினை கூகுள் கையகப் படுத்தி கூகுள் வொய்ஸ் (Google Voice) என்ற சேவையைக் கொண்டு வந்தது.

6. கூகுள் நிறுவனத்தின் ஆண்டுக் கூட்டம் Google I/O என அழைக்கப்படுகிறது.

7. இந்த ஆண்டு Google I/O கூட்டத்தின் போது, இதன் நிறுவுனர்களில் ஒருவரான செர்ஜி பிரின், ஸ்கை டைவிங் செய்து, உலகத்தில் உள்ள பத்திரிகைகளில் செய்தியாக இடம் பெற்றார்.

# கிராமிய நீர்வழங்கல் திட்டத்தின் கீழ்
# 125 பயனாளிகளுக்கு மலசல கூடங்கள்



நீர் வழங்கல் வடிகால் அமைப்பு சபையினால் கிளிநொச்சி- வட்டக்கச்சி பிரதேசத்திற்கு கிராமிய நீர் வழங்கல் சுகாதார திட்டத்தின் கீழ் 125 பயனாளிகளுக்கு 65ஆயிரம் ரூபா பெறுமதியோடு 18 வீத மக்கள் பங்களிப்புடனும் மலசல கூடங்கள் அமைத்துக்கொடுக்கப்படவுள்ளன.

நாடளாவிய ரீதியில் நடைமுறைப்படுத்தப்பட்டு வரும் இத்திட்டமானது கிளிநொச்சியிலும், பல கிராமங்களிலும் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

இது தொடர்பான நிகழ்வு நேற்று முன்தினம் வட்டக்கச்சி கட்சன் வீதியில் கிராம அலுவலர் அலுவலகத்தில் கிராம அலுவலர் சத்தியநாதன் தலைமையில் இடம்பெற்றது. இந்நிகழ்வில இலங்கை நீர் வழங்கல் வடிகால் அமைப்புச் சபையின் தலைமை அலுவலகத்திலிருந்து வருகை தந்திருந்த திட்ட கண்காணிப்பு,மதிப்பீட்டு உத்தியோகத்தர் கன்சங்க விக்கிரமசிங்க திட்டத்தின் சூழலியல் நிபுனர் அத்துல பிரியந்த, சமூகவியலாளர் அரபாத், திட்டத்தின் சிரேஸ்ட தொழில்நுட்ப ஆலோசகர் இளையராஜா,சமூக அபிவிருத்தி உத்தியோகத்தர் குகன், ஆகியோர் மக்களுக்கு திட்டம் தொடர்பாக விளக்கமளித்தனர்.

இந்நிகழ்வில் கரைச்சி பிரதேச சபை உறுப்பினர் இராமச்சந்திரன் கிராம அலுவலர்களான சத்தியநாதன்,ஜோன் ஜெகநாதன் கிராம அபிவிருத்திச்சங்கத்தலைவர் விஜயன் ,பொதுமக்கள் ஆகியோர் கலந்து கொண்டனர். (29)

# உள்ளூர் வீதிகள் படுமோசம்; வலி.கிழக்கு மக்கள் கவலை

(அச்சுவேலி)

வலிகாமம் கிழக்கு பிரதேச சபையின் தொடர்ச்சியான அசமந்தப் போக்கு உள்ளூர் கிராம வீதிகளின் நிலையை மேலும் மேலும் மோசமான நிலைக்கு இட்டுச் செல்வதனால் பொது மக்களின் கவலை மேலும் அதிகரித்து வருவதனைக் காணக் கூடியதாக உள்ளது.

அச்சுவேலிப் பகுதியில் உள்ள கிராம வீதிகளின் அவல நிலை தொடர்பாக பிரதேச சபை இன்றுவரை எந்தவொரு நடவடிக்கையும் எடுக்காத நிலையில் அச்சுவேலி தெற்கு பயிற்றோலை வீதியின் மாவடிப் பகுதியில் வீதியின் நடுவே கட்டடக் கழிவுக்கற்கள் கொட்டப்பட்டதனை காணக்கூடியதாக இருக்கின்றது. தினமும் மாணவர்களும், பலநூற்றுக்கணக்கான பாதசாரிகளும், வாகனங்களும் இவ்வீதியின் ஊடாக பயணம் செய்து வருகின்ற போதிலும் கூட பிரதேச சபையின் அக்கறையில்லாத் தன்மையானது வலி. கிழக்குப் பிரதேச சபையின் மீது அப்பகுதி மக்களிற்கிருந்த நம்பிக்கையை குறைப்பதாக அமைந்திருப்பதாகவும், மக்கள் தரப்பில் தெரிவிக்கப்படுகின்றது.

இதேவேளை கடந்த 30 வருடங்களுக்கு மேலாக எந்தவொரு திருத்த வேலைகளுக்கும் உட்படுத்தப்படாத இவ்வீதியினை திருத்தியமைப்பதற்கான நடவடிக்கைகள் கடந்த ஆண்டில் நெல்சிப் திட்டத்தின் மூலம் மேற்கொள்ளப்பட்டிருந்த நிலையிலும்,கடைசி நேரத்தில் அது கைகூடாது சென்ற நிலையில் அதே பயிற்றோலை வீதியில் சிவசக்தி கோயில்ப் பகுதியில் இணைந்துள்ள, சில வீடுகளுக்கு மட்டும் பயன்படுத்தப்படும் ஓர் சிறு ஒழுங்கையை தார் வீதியாக இதே பிரதேச சபை அமைத்துக் கொடுத்திருந்ததனையும் சுட்டிக்காட்டும் பொது மக்கள் இது எதன் அடிப்படையில் மேற்கொள் ளப்பட்டது என்ற கேள்வியினையும் எழுப்புகின்றனர். (03)

# குளோபல் ரெக் நிறுவனக்கிளை யாழில் அங்குரார்ப்பணம்



(யாழ்ப்பாணம்)

கொழும்பு பத்தரமுல்லையில் உள்ள குளோபல் ரெக் Global Tech நிறுவனம் தற்போது தனது வாயு சீராக்கல் கிளையை (எயார் கண்டிஷன்) யாழ்ப்பாணத்தில் நிறவியுள்ளது.

கடந்த 4ஆம் திகதி இல. 320 ஏ. பிரதான வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் இந்தப் புதிய கிளை அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டுள்ளது.

குளோபல் ரெக் Global Tech நிறுவன நிர்வாக இயக்குநர் வசந்த மல்லிகராச்சி, யாழ்.வர்த்தக சங்கத் தலைவர் பூரணச் சந்திரன், நிறுவனத்தின் யாழ். கிளையின் முகாமையாளர் சுதர்சன் ஆகியோர் இணைந்து இந்தப் புதிய கிளையைத் திறந்து வைத்தனர்.

# சமயப்போட்டி பரிசில் வழங்கல்

(அச்சுவேலி)

ஆவரங்கால் நடராஜ இராமலிங்கேஸ்வரர் தேவஸ்தானத்தின் சிவராத்திரி தின சிறப்புப் பூஜைகள் இன்று இடம்பெறவுள்ள அதேவேளை, மேற்படி தேவஸ்தானத்தினால் சிவராத்திரி தினத்தை முன்னிட்டு பாடசாலைமாணவர்களுக்காக நடத்தப்பட்ட சமயப் போட்டிகளின் பரிசில் வழங்கல் நிகழ்வுகளும் , சிறப்புப் பட்டிமன்ற நிகழ்வும் இடம்பெறவுள்ளது.

இதேவேளை சிறப்பு நிகழ்வாக, இன்று காலை ஆலயத்தில் சமய தீட்சை வழங்கும் நிகழ்வு இடம்பெற இருப்பதால் சைவச் சிறார்கள் தீட்சை பெற்றுக்கொள்ள முடியும் எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

மேலும் இன்று இரவு சிவராத்திரி தின சிறப்பு வழிபாட்டின் போது நான்கு காலப் பூஜைகள் இடம்பெறுவதுடன் நான்காம் காலப் பூஜை அதிகாலை 4 மணிக்கு ஆரம்பமாகி காலை தீர்த்தோற்சவத்துடன் நிறைவடையும். (03)

# பதிவிறக்கப் பெட்டகம்

"மௌனத்தை எப்படிச் சொல்வது" என்ற தலைப்பில் ஈரோடு கதிர என்பவர் தனது வலைத்தளத்தில் தந்திருக்கும் சொல் வீச்சுக்கள் இவை. சிரிக்கலாம், தப்பில்லை.

உற்றுப் பார்த்தால் எல்லா மரமுமே போதி மரம்தான்.

***

எல்லாம் "புரிஞ்சு" என்ன பண்ணப் போறோம்!

***

ஒருவர்மேல் வரும் கோபத்திற்கு, அப்போது நிகழ்ந்த ஒன்று மட்டுமே பெரிதும்காரணமாக இருப்பதில்லை. எப்பவோ, எங்கோ, யாரோ, எதற்கோ செய்ததும்கூட காரணமாக இருககலாம்!

***

'தள்ளிப் போடுதலை' மட்டும் உடனுக்குடன் செய்து விடுகிறோம்!

***

குடி போதையில் ஏற்படுத்தும் விபத்துகள் தற்கொலைக்கும், கொலைக்கும் நிகரானது.

***

பறக்கத் தொந்தரவாக இருக்கும் என்பதனாலும் பறவைகள் தொப்பை வளர்க்காமல் இருக்கலாம்!

***

கடந்து போக வேண்டியவற்றை சுமந்து திரிவதும்தான் பல சிக்கல்களுக்குக் காரணம்!

***

"எதையும் நினைக்கக் கூடாது" என நினைக்க உரிமையறறவர்கள் நாம்!

***

கேள்வியுறும் எல்லாப் பெயரிலும் யாரோ ஒருவரை அறிந்திருக்கிறோம், குறைந்தபட்சம் யாரோ ஒருவர் குறித்த நினைவையாவது தக்க வைத்திருக்கிறோம்.

***

எல்லாமே பழசு ஆகும், பாராட்டு உட்பட!

***

எல்லோருக்கும் எடை குறைக்க ஆசைதான், எவருக்கும் வழகத்தை விட மட்டும் விருப்பமிருப்பதில்லை!

***

ஒரு வார்த்தையை உதிர்ப்பதையும், விழுங்குவதையும் தீர்மானிப்பதற்கு 'விதி' எனவும் பெயரிடலாம்!

***

செய்யவேண்டிய வேலைகளை மட்டும் ஒழுங்காக செய்தால், வேலைகள் முடிந்தபிறகும் நிறைய நேரமும் மிச்சம் இருக்கின்றது!

***

"பழகிப்போச்சு" எனும் வார்த்தை பழகிப்போகாமல் இருந்திருந்தால், எத்தனையோ மாற்றமும், புரட்சியும் இந்த சமூகத்தில நிகழ்ந்திருக்கும்.

***

தேடித்தேடிச் சேர்ப்பது, ஒரு கட்டத்தில் தீர்க்கவோ, தொலைககவோ தானே!

***

நம்மை அள்ளி தமக்குள்ளே வைத்து பூட்டிக்கொள்கின்றன சில வார்த்தைகள். அதிலிருந்து விடுபட முடிவதில்லை என்பதைவிட நாம் விடுபட விரும்புவதில்லை!

***

முதல் கவளத்தின் ருசி கடைசிக் கவளத்திலும் இருந்தால் சோறு போதாது என்றும் அர்த்தம்!

***

உயிர் வாழ சுவாசிக்கும் கையளவு காற்றைக்கூட, இது என் காற்று, எனக்கானது எனப் பிடித்து வைத்துக்கொள்ள முடியாதவன் நான்!

***

இருக்கும்போது அதன் பெருமையும், இல்லாதபோது அதன அருமையும் தெரிவது 'பணத்திலும்'தான்!

***

வருசத்துக்கு 3 பொறந்த நாள் கொண்டாடி மூத்தவங்க வயசை முந்த முடியாது. 3 வருசத்துக்கு ஒருக்கா பிறந்தநாள கொண்டாடி வயசைக் குறைக்க முடியாது.

***

நூறு ரூபாயை வீணடித்த வருத்தத்தைவிட, கீழே கிடக்கும பத்து ரூபாயை எடுப்பதில் இருக்கும் மகிழ்ச்சி அலாதியானது!

***

வாழ்நாள் முழுதும் புரியாதது "மரணம்" என்பது வெற்றியா தோல்வியா?

***

'நான்' என்பதைத் தவிர என்ன மிச்சமிருந்துவிடப் போகிறது என்னிடம்.



கைதடி மேற்கு சரஸ்வதி மாதர் கிராம அபிவிருத்திச் சங்கத்தின் மகளிர் தினநிகழ்வு நேற்றுமுன்தினம் கைதடி சனசமூகநிலையத்தில் நடைபெற்றபோது, கௌரவிக்கப்பட்ட பெண்மணிகளையும், விளையாட்டு நிகழ்வில் பெண்கள் ஈடுபடுவதனையும், விளையாட்டில் வெற்றிபெற்ற பெண்மணிக்கு விருந்தினர் ஒருவர் பரிசில் வழங்குவதனையும், சங்கத்தின் தலைவி ம.நிர்மலா உரையாற்றுவதனையும் காணலாம். (எஸ்.பி)

# புங்குடுதீவு றோ.க.வித்தியாலய கட்டடத்தொகுதிக்கு நிதி ஒதுக்கீடு



புங்குடுதீவு றோ.க.த.க வித்தியாலயத்தின் புதிய வகுப்பறை கட்டடத் தொகுதிகளின் கட்டுமானப் பணிகளுக்காக விரைவில் நிதி ஒதுக்கீடு மேற்கொள்ளப்படும் என ஈ.பி.டி.பி.யின் யாழ். மாவட்ட அமைப்பாளர் கந்தசாமி கமலேந்திரன் (கமல்) தெரிவித்துள்ளார்.

புங்குடுதீவு றோமன் கத்தோலிக்க தமிழ்க் கலவன் வித்தியாலய வருடாந்த இல்ல மெய்வல்லுநர் திறனாய்வுப் போட்டி நிகழ்வுகளில் பிரதம விருந்தினராக கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு அவர் தொடர்ந்து உரையாற்றுகையில், மாணவர்களின் கல்வி வளர்ச்சிக்குத் தேவையான ஆக்கபூர்வமான பணிகளை பெற்றோர் மற்றும் ஆசிரியர்களே முன்னெடுப்பதுடன், பெற்றோர் தமது பிள்ளைகளை சகல துறைகளிலும் ஆளுமைப் பண்புடையவர்களாக கட்டியெழுப்ப வேண்டும். இப் பிரதேசம் கஷ்டப்பிரதேசம் எனக் கருதாது, இங்குள்ள வளங்களை சரியான வகையில் பயன்படுத்தி உங்கள் பிள்ளைகளின் எதிர்காலத்தை வளமுடையதாக்கிக் கொள்ளவேண்டும்

கடந்த இரு தினங்களிற்கு முன் யாழ். மாவட்டத்தில் இடம்பெற்ற கல்விக்குழு மாநாட்டில் வடமாகாணத்தில் நிலவிவரும் கல்விச் செயற்பாட்டிற்கான தேவைகளை பூர்த்தி செய்வதற்கான நடவடிக்கைகள் விரைவில் முன்னெடுக்கப்படவுள்ளதால் சகல பாடசாலைகளும் இத்திட்டத்தின் மூலம் அபிவிருத்தி அடையும்.

விளையாட்டுக்களில் ஈடுபடுவதன் மூலம் மாணவர்கள் உடல், உளரீதியாக வளர்ச்சியடைவதுடன் அவ் உளத்தூண்டலகளால் கல்வியிலும் மேம்பாடடைய முடியும்.

இதனைக் கருத்தில் கொண்டே பாடசாலைகளில் இணைப்பாடவிதானம் கல்வித்திட்டம் முன்னெடுக்கப்பட்டு வருவதுடன், ஈழ மக்கள் ஜன நாயகக் கட்சி தீவக மாணவர்களின் கல்வி வளர்ச்சிக்கான பணிகளை தொடர்ந்தும் சிறந்த முறையில் முன்னெடுத்து, தீவக மாணவர்களின் வளமான எதிர்கால வாழ்வுக்காக உழைக்கும் எனத் தெரிவித்தார்.

தொடர்ந்து, பல்வேறு போட்டி நிகழ்வுகளுடன், இடைவேளை நிகழ்வாக மாணவர்களின் இசையும் அசைவும் இடம்பெற்றது.

அடுத்து போட்டி நிகழ்வுகளில் வெற்றியீட்டிய அணிகளிற்கான வெற்றிக்கேடயங்களையும், வீரவீராங்கனைகளிற்கான வெற்றிக் கிண்ணங்களையும், சான்றிதழ்களையும் மாவட்ட அமைப்பாளர் கமல் மற்றும் நிகழ்வில் கலந்து கொண்ட அதிதிகள் வழங்கிவைத்தனர்.

இந் நிகழ்வில் ஈ.பி.டி.பி.யின் புங்குடுதீவு இணைப்பாளர் ஜயாக்கிளி சிவனேசன் (நவம்) வேலணை கோட்ட ஆரம்பக் கல்வி உதவிப்பணிப்பாளர் தனிநாயகம், அயற்பாடசாலைகளின் அதிபர்கள், ஆசிரியர்கள், பெற்றோர் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

# வவுனியா பறன்நட்டகல் கிராமத்தில் மீள் எழுச்சித் திட்ட வெதுப்பகம்

(வவுனியா)

வவுனியா பறன்நட்டகல் கிராமத்தில் உள்ள வறுமைக்கோட்டின் கீழ் வாழும் மக்களுக்கு பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் மீள் எழுச்சித் திட்டத்தின் ஊடாக வெதுப்பகம் அமைத்து கடந்த 7 ஆம் திகதி பயனாளிகளுக்கு கையளிக்கப்பட்டது

4 இலட்சம் ரூபா பெறுமதியில் அமைக்கப்பட்ட இவ் வெதுப்பகம் வட்டியில்லா மீள்சுழற்சி நிதியில் மக்களுக்கு வழங்கப்பட்டதுடன், இவ் வெதுப்பகத்தில் இருந்து பாண், பனிஸ், மற்றும் இதர மாவகை உற்பத்திப் பொருட்களை தயாரிக்கும் வகையில் அமைக்கப்பட்டுள்ளது.

இக் கிராமத்தில் உள்ள பலருக்கும் இதன் மூலம் வேலை வாய்ப்புக்களை வழங்கும் நோக்கில் மக்களிடம் வெதுப்பகத்தை கையளிக்கும் நிகழ்வில் மீள் எழுச்சித் திட்டத்தின் பிரதித் திட்டப்பணிப்பாளர் டி. யு. டி. ரஞ்சித், வாழ்வாதார அபிவிருத்தி உத்தியோகத்தர் செல்வி கே. ஜானகி, சமூக அபிவிருத்தி உத்தியோகத்தர் எல். பெர்ணான்டோ, சமூக வலுவூட்டலாளர் எஸ். சந்திரகுமார் உட்பட கிராம மக்கள் பலரும் கலந்து கொண்டிருந்தனர். (160)

# கொடுப்பனவுகள் அனுப்பப்பட்டுள்ளன

(அச்சுவேலி)

கடந்த ஆண்டு நடைபெற்ற கல்விப் பொதுத்தராததர சாதாரண தரப்பரீட்சையின் போது பல்வேறு பணிநிலைகளிலும் பணியாற்றிய அலுவலர்களுக்கான கொடுப்பனவுகள் பரீட்சைத் திணைக்களத்தினால் அனுப்பிவைக்கப்பட்டுள்ளது.

மேற்படி கொடுப்பனவுகள் தபாலகங்களில் பணமாக மாற்றிப் பெறக்கூடிய வகையில் உரிய அலுவலர்களின் பெயர்களுக்கு காசுக்கட்டளைகளாக அனுப்பிவைக்கப்பட்டுள்ளன. (03)

# வர்த்தக பிரிவு மாணவர்களுக்கு பரீட்சை வழிகாட்டல் கருத்தரங்கு

(வவுனியா)

சீமா நிறுவனத்தின் அனுசரணையுடன் வவுனியா தெற்கு வலயக் கல்வி அலுவலகத்தினால் ஏற்பாடு செய்யப்பட்ட இவ் ஆண்டு உயர்தரப் பரீட்சையில் தோற்றவுள்ள மாணவர்களுக்கான பரீட்சை வழிகாட்டல் கருத்தரங்கு வவுனியா இறம்பைக் குளம் மகளிர் மகாவித்தியாலய அக்குவைனஸ் கேட்போர் கூடத்தில் கடந்த 7ஆம் திகதி இடம்பெற்றது.

வவுனியா தெற்கு வலய வர்த்தகப் பாட ஆசிரிய ஆலோசகர் ச.தேவதாஸ் தலைமையில் இடம்பெற்ற பரீட்சை வழிகாட்டல் கருத்தரங்கில் வழிகாட்டல் கருத்துக்களை கொழும்பு பல்கலைக் கழக பொருளியல் துறை சிரேஸ்ட விரிவுரையாளர்களான கலாநிதி எம்.கணேசமூர்த்தி, கலாநிதி என். இரவீந்திரகுமரன் ஆகியோர் வழங்கியிருந்தனர்.

இக் கருத்தரங்கில் வவுனியா - தெற்கு, வவுனியா வடக்கு, மன்னார் ஆகிய கல்வி வலய பாடசாலைகளைச் சேர்ந்த சுமார் 700 மாணவர்கள் கலந்து கொண்டிருந்தனர்.

கடந்த ஆண்டும் வவுனியா தெற்கு வலயக் கல்வி அலுவலகத்தினால் வர்த்தகத் துறை மாணவர்களுக்கான பரீட்சை வழிகாட்டல் கருத்தரங்குகளும் வர்த்தக கண்காட்சியும் இடம்பெற்றமையினால் கடந்த முறை உயர்தர பரீட்சை பெறுபோறுகளின் வீதம் வவுனியாப் பாடசாலைகளில் அதிகரித்திருந்ததென வர்த்தகப் பாட ஆசிரிய ஆலோசகர் ச.தேவ்தாஸ் தெரிவித்தார்.

# சமயப்பணிகளாலும், சமுதாயப்பணிகளாலும் உயர்வு பெற்ற ஆறுமுகநாதனுக்கு பாராட்டு

தெல்லிப்பழை துர்க்காதேவி தேவஸ்தானத்தின் உப தலைவராகப் பணியாற்றும் ச.ஆறுமுகநாதன் நீண்டகால நண்பரும் அன்பரும் ஆக விளங்குகினறார். அவருக்கு சமூக நிறுவனங்கள் பல கௌரவங்களையும், பாராட்டுக்களையும் வழங்கி வருகின்றன. அண்மையில் சமூக நிறுவனங்கள் தேசாபிமணி, வங்காபுத்திர, விஸ்வகீர்த்தி போன்ற பட்டங்களை வழங்கியமையை முன்னிட்டு துர்க்கை அம்மன் கோயிலில் இன்று பாராட்டு விழா நடைபெறும்.

துர்க்கை அம்மன் கோயில் முன்றலில் இவருடைய வீடு அமைந்துள்ளது. இதனால் அம்பாளை தினமும் வழிபாடு செய்யும் பேறுபெற்றார். இவர் தமது எக்கருமங்களுக்குச் சென்றாலும் துர்க்கை அம்பாளை வழிபடாது செல்லமாட்டார். இதனால் பல வெற்றிகளையும் பெற்றார்.

கோயிலின் பெருந்தெருவுக்கு செல்லும் முகப்புப்பாதை அக்காலத்தில் ஈசான திசையில் நேராக செல்லவில்லை. இதனால் பாதையை நேராகப் பெறுவதற்கும், மாற்றம் செய்யவும் இசைவு வழங்கியதில் உதவியவர்களில் இவருடைய தாயார் திருமதி. அன்னப்பிள்ளை சரவணமுத்து அம்மையார் முக்கியத்துவம் பெறுகிறார். அம்மையாரின் தர்மசிந்தனையை இவர்கள் இன்று வாழவைக்கின்றனர். சிவத்தமிழ் செல்வி அம்மையாருக்கு வலது கரம் போன்று நின்று ஆலய வளர்ச்சிப்பணியில் உதவியவர். அம்மையார் காலத்து மிகமுக்கிய பணிகளான, கோயில் மண்டபங்கள் அமைத்தல், சித்திரத் தேர்திருப்பணி, இராஜகோபுர திருப்பணி, தீர்த்தத்தடாகத் திருப்பணிகளில் எல்லாம் முன்னின்று நீண்ட காலமாக முக்கிய பணிகள் ஆற்றியவர்.

துர்க்கை அம்மன் கோயில் நிதிவளம் இக் காலத்தைப் போன்று அக்காலத்தில் இருக்கவில்லை. இதனால் கல், மணல், சீமெந்து போன்ற பொருட்களை எல்லாம் கோயிலுக்கு கடனாகக் கொடுத்து உதவி செயதிருக்கிறார். இத்தகைய செய்திகளை எல்லாம் கடந்தகால ஆண்டு அறிக்கைகள் சுட்டிக் காட்டுகின்றன.

இத்தகைய ஆறுமுகநாதனின் பணிகள் நன்கறிந்த சிவத்தமிழ் செல்வி அம்மையார் தமது காலத்தில் 2006ஆம் ஆண்டு பதவிவெற்றிடம் வந்த போது அந்த இடத்துக்கு ச.ஆறுமுகநாதன் அவர்களை உப தலைவராகத் தெரிவுசெய்தார்.

ஆறுமுகநாதனை அவர்களின் சமய, சமூக அன்னதானப் பணிகளை பயன் நன்கு அறிந்தவன் பணிகளால் பெருமை பெற்ற இவரின் பணிகள் மேன்மேலும் சிறப்புற யாம் அனுதினமும் வழிபாடு செய்யும் தெல்லிநகர் துர்க்கை அம்பாளைப் பிரார்த்திப்போமாக.

கா.சிவபாலன்.

# கிளிநொச்சி - ஜெயபுரம்; வீதித்திருத்தம் எப்போது?

(கிரு-சிகரம்)

கிளிநொச்சி அம்பலப் பெருமாள் ஜெயபுரம் வீதி நீண்டகாலமாக குண்டும்குழியுமாக காணப்படுவதாகவும், இதனால் இவ் வீதியூடான போக்குவரத்தில் தாம் பெரும் சிரமங்களை எதிர்கொள்வதாகவும் இந்தப் பகுதி மக்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

வீதியின் நடுவே ஆங்காங்கே காணப்படும் பாரிய குழிகளில் மழைகாலங்களில் நீர் தேங்கி நிற்பதால், இவ் வீதியில் அடிக்கடி விபத்துக்கள் இடம்பெறுவதாகவும் குறிப்பிட்ட அப்பிரதேச மக்கள், இந்த வீதியூடாக கனரக வாகனங்கள் மட்டுமே பயணிக்க கூடியதாக உள்ளதாகவும் குறிப்பிட்டனர்.


வீதியின் இந்த மோசமான நிலை காரணமாக பாடசாலை மாணவர்கள், அலுவலகங்களுக்குச் செல்வோர் எனப்பவரும் உரிய நேரத்திற்குச் செல்ல முடியாது சிரமமப்படுவதாகவும் பாடசாலை மாணவி ஒருவர் தெரிவித்தார். எனவே, உரிய அதிகாரிகள் சீரான போக்குவரத்திற்கு ஏற்ற வகையில் இந்த வீதியை செப்பனிட்டு தர வேண்டும் என இந்தப் பிரதேச மக்கள் கேட்டுக் கொண்டனர்.

# க.பொ.த (சாதாரணதர) மாணவர்களுக்கான பயிற்சி வினாத்தாள்

**கணிதம்**

ஆசிரியர் :
S.T. ஜனார்த்தனன்
(B.sc)


01) சுருக்குக : $\frac{(-4) \times 3}{(-2) \times (-3)}$




02) அருகில் உள்ள உருவின்

1. I. இன் பெறுமதி?
2. சுற்றளவு யாது?

03) முக்கோணம் PQR இல் PQ = 9 cm, QR = 5 cm எனின் PR இன் நீளத்தைக் காண்க.




04) $1260^0$ இனை அகக் கோணமாகக் கொண்ட பல்கோணியின் பக்கங்களின் எண்ணிக்கை யாது?

05) $x^3 - y^3 = 2y, x^2 + xy + y^2 = 2\frac{2}{3}$ எனின் x-y ஐ காண்க.

06) (3, -5) ஐ மூலகங்களாகவுடைய x இனாலான இருபடிச் சமன்பாட்டை எழுதுக?

07) காரணி பற்றிய அறிவைப் பயன்படுத்தி சுருக்குக?
$\sqrt{86 \times 114 + 196}$

08) சுருக்குக $\log_2 8 \times \log_4 256$

09) சுருக்குக $\frac{3x}{2} - \frac{x}{4}$

10) 0.06941 எனும் எண்ணை விஞ்ஞான முறைக் குறிப்பீட்டில் தருக?

11) $V = \frac{ER}{R+Q}$ எனும் தொடர்பில் R ஐ ஏனைய உறுப்புக்களின் சார்பில் தருக?

12) $\frac{5x}{3} - x = 6$ சுருக்குக.

13) 5, 8, 7, 9, 14, 2, 6 என்பவற்றின் இடையம், இடை என்பவற்றைக் காண்க?

14) சுருக்குக $10101_{இரண்டு} - 1110_{இரண்டு}$

15) சுருக்குக [5/6 + 1/5} ÷ 6 1/5

16) 2y = 3x - 4 என்ற நேர்கோட்டின் படித்திறனையும் வெட்டுத்துண்டையும் காண்க?

17) 25, 22, 19, ............. என்ற கூட்டல் விருத்தியின் 7 ஆம் உறுப்பைக் காண்க?

18) x = 8 ஆகவும் y = -1/3 ஆகவும் இருப்பின் $x^y$ இனது பெறுமானம் யாது?

19) $\frac{9}{2\sqrt{3}}$ ஐ விகிதமுறும் பகுதி எண்ணாகத் தருக?

20) இணைகரம் ஒன்றிற்கும் சதுரம் ஒன்றிற்கும் இடையிலான வேறுபாடு இரண்டு தருக.

21) (3x-2) (2x-1) = 0 எனும் சமன்பாட்டின் தீர்வு யாது?

22) சுருக்குக $\frac{4 + 0.3}{9.7 - 5.4}$

23) $3^{4x-3} = 81^{y-2}$ எனத் தரப்படின் x-y இன் பெறுமதி யாது?

24) பல்கோணி ஒன்றின் அகக்கோணத்திற்கும், புறக்கோணத்திற்கும் இடையிலான விகிதம் 5:1 ஆகும்.
1. புறக்கோணம் ஒன்றின் பெறுமானம் யாது?
2. பல்கோணியின் பக்கங்களின் எண்ணிக்கை யாது?

25) முக்கோணம் PQR இல் $\hat{P} = 3\hat{Q}$, R=(Q-30) எனின் $\hat{R}$ ஐக் காண்க?

26) செவ்வக வடிவ காணி ஒன்றின் நீளத்திற்கும், அகலத்திற்கும் இடையிலான விகிதம் 7:4 ஆகும். இதன் சுற்றளவு 66 m எனின் இக் காணியின் பரப்பளவு யாது?

27) $\lg_5(\lg_3 243) = A$ எனின் A யின் பெறுமதி யாது?

2 8 ] f $4x^3$ -8xy$^2$

29) lg 9/16 = lg 40/80 = lgx - lg 18 என்பதில் x இன் பெறுமானத்தை மடக்கை அட்டவணையைப் பயன்படுத்தாது காண்க?

30) $\frac{2x^{-3} \times (9 \times 4)^{1/2}}{12 x^5}$ சுருக்கி விடையை நேர்ச்சுட்டியில் தருக.

## பகுதி II

**01)**

1) $A = \sqrt{27/192}, B = 512^{-1/3}$ எனின் (A+B) இன் பெறுமானம் யாது?

2) மடக்கை அட்டவணையைப் பயன்படுத்தாது சுருக்குக.
lg12 + 3lg (2/3) - lg (3 5/9)

3) மடக்கை அட்டவணையைப் பயன்படுத்திச் சுருக்குக.
$\sqrt{\frac{26.21 \times 0.592}{3.8233}}$

4) சுருக்குக. $\sqrt{\frac{9x-2}{4}} \times (2/x)^4 \times \sqrt{\frac{x}{3}}$

5) சுருக்குக :- $[32 / 162]\ 1/4 \times \frac{1}{9^{-1/2}}$ $4^{4x} \times 16^{x-3} = 64$ சுட்டிச் சமன்பாட்டைத் தருக.

**02)**

1) தீர்க்குக :- x/3 + y/4 = 2
x + 2y = 11

2) (-4, +5) என்பவற்றை மூலகங்களாகவுடைய இருபடிச் சமன்பாட்டைத் தருக.

3) காரணி காண்க a) $a^2 + 17a - 84$ b) $2x^2 - x - 36$

4) தீர்க்குக :- x + 3/5 = 8-y/4 = 3(x+y) /8

5) ஒரு செவ்வகத்தின் நீளம் அகலத்தை விட 3 m கூடவாகும். அதன் மூலவிட்டம் 15 m எனின் அகலம் எவ்வளவு?

**03)** y = x (2x + 1) - 5 எனும் சார்பின் வரைபை வரைய x,y ஆகியவற்றின் பெறுமானங்களைக் கொண்ட அட்டவணையொன்று தரப்பட்டுள்ளது.

| X | -3 | -2 | -1 | -1/2 | 0 | 1 | 2 |
|---|---|---|---|---|---|---|---|
| Y | 10 | 1 | 4 | | | -2 | 5 |

1) அட்டவணையில் உள்ள வெற்றிடங்களை நிரப்புக?

2) தரப்பட்டுள்ள வரைபுத்தாளில் x அச்சு வழியே ஒரு அலகைக் குறிப்பதற்கு 10 சிறு பிரிவுகளும் y அச்சு வழியே இரு அலகைக் குறிப்பதற்கு 10 சிறு பிரிவுகளும் பயன்படுத்தி வரைபு வரைக?

3) வரைபைப் பயன்படுத்தி
   a) சமச்சீர் அச்சின் சமன்பாடு யாது?
   b) இழிவுப் பெறுமானம் யாது?
   c) சார்பு மறையாகும் போதுள்ள x இன் பெறுமான வீச்சு யாது?
   d) $5 + x - 2x^2 = 0$ எனும் சமன்பாட்டின் மூலகங்களை வரைபைப் பயன்படுத்தி பெறுக.

**04)** நேர்விளிம்புள்ள கருவி, அளவுகோல், கவராயம் என்பவற்றைப் பயன்படுத்தி பின்வரும் அளவுகளையுடைய முக்கோணியின் பருமட்டான படம் வரைக?

1) PQ = 6.4 cm, PR = 5.3, QPR = $105^0$ உடைய முக்கோணம் PQR இனை வரைக
2) QR இன் நீளத்தைக் காண்க?
3) உண்மையான அளவுகளைக் கொண்டு முக்கோணம் PQR இனை வரைக
4) P யிலிருந்து QR இற்குச் செங்குத்து கோடொன்றை அமைக்குக. அதன் நீளத்தை அளந்து பரப்பளவைக் காண்க.
5) PQ வை Q தொடக்கூடியதாகவும் QR நாணாகக் கொண்டதுமான வட்டத்தை வரைந்து அதன் ஆரையையும் அளந்து எழுதுக?


**05)** பண்டிகைக் காலத்தில் தயாரிக்கப்படும் கேக்கானது மா, சீனி, பட்டர் என்பவற்றைக் கொண்டது மா, பட்டர் என்பன 5:3 எனும் விகிதத்திலும் பட்டர், சீனி என்பன 2:1 எனும் விகிதத்திலும் கலக்கப்பட்டது.

1) மா, சீனி, பட்டர் என்பவற்றின் விகிதம் யாது?
2) 500g கலவையைப் பயன்படுத்தி கேக் தயாரிக்கும்போது 25g வீணானது. பயன்பட்ட மாவின் அளவு யாது?
3) இக்கலவையில் மா 50% மேலுள்ளது என்பதை ஏற்றுக்கொள்வீரா?


# தரம் - 10 மாணவர்களுக்கான பயிற்சி வினாத்தாள்

பகுதி II


**01)**




a) தகரத்தில் பழரசம் ஒன்றை அடைப்பதற்கான மாதிரி ஒன்றை தரம் 10 மாணவர்கள் தமது கணிதபாட செயற்பாட்டின் போது சமர்ப்பித்தனர்.




1. பயன்படுத்திய செவ்வகத்தின் நீளம் யாது?
2. வட்ட அடியின் பரப்பைக் காண்க.
3. தயாரித்த உருளையின் வளை மேற்பரப்பிறகு ஒட்டுவதற்கு வர்ண லேபல் தேவைப்பட்டது. லேபலின் பரப்பளவு யாது?




4. உருளையின் மூடியுடன் சேர்ந்த மொத்த மேற் பரப்பளவைக் காண்க.

b) 1. r ஆரை H உயரம் உடைய உருளைவடிவத் திண்மத்தின் கனவளவு $V = \pi r^2 h$ இனால் குறிக்கப்படலாம். எனவே, மாணவர் தயாரிக்கும் மேற்படி பாத்திரத்தின் கொள்ளளவை ml இல் தருக.

2. இதேபோன்ற 9 பாத்திரங்களை a ஆரையும் 21 cm உயரமும் உடைய உருளை வடிவ பாத்திரத்தில் நிரம்பியுள்ள பானவகையால் சேதமின்றி நிரப்ப உத்தேசிக்கப்பட்டது. இத் தரவுகளின் அடிப்படையில் $a = \frac{7\sqrt{3}}{2}$ எனக் காட்டுக

3. 3 = 1.73 எனக் கொண்டு a இன் பெறுமானத்தை மடக்கை வாய்ப்பாட்டைப் பயன்படுத்தி முதலாம் தசமதானத்திற்கு காண்க.

**02)**

1) காரணிப்படுத்துக 2x -3y- 4ax + 6ay
2) கரணி அறிவைப் பிரயோகித்து சுருக்குக. 74 x 86

3) செவ்வக மைதானத்தின் நீளம் அகலத்திலும் 4 m கூடியது. மைதானத்தின் பரப்பு 525 $m^2$ எனின் மைதானத்தின் நீளம் யாது?

4) ஒருவர் 9 ரூபா பெறுமதியான குறித்த எண்ணிக்கையான கொப்பிகளையும், 5 ரூபா பெறுமதியான குறித்த எண்ணிக்கையான பேனாக்களையும் வாங்கினார். வாங்கிய பொருட்களின் எண்ணிக்கை 52 ஆகும். வாங்கக் கொடுத்த பணம் 300 ரூபா ஆகும். கொப்பியினதும், பேனாக்களினதும் எண்ணிக்கை யாது?

**03)**

a) ஒரு நிறுவனத்தில் வேலை செய்வோரில் 62% ஆனோர் பஸ்சில் பயணம் செய்கின்றனர். 50% ஆனோர் சொந்த வாகனத்தில் பயணம் செய்கின்றனர். 20% ஆனோர் நடந்து செல்பவர்கள். பஸ்சில் செல்பவர் A என்க. சொந்த வாகனத்தில் செல்பவர்கள் B என்க.
1) இத்தரவை வென் உருவில் காட்டுக.
2) (AnB`) பெறுமானத்தைக் காண்க.
3) (AnB) பெறுமானத்தை காண்க.

b) A,B,C மூவர் முறையே 12000 ரூபா, 15000 ரூபா, 18000 ரூபா முதலீடு செய்து வியாபாரம் ஒன்றை ஆரம்பித்து ஒருவருட முடிவில் 3000 ரூபா இலாபமாகப் பெறுகின்றனர்.

1) இலாப சதவீதம் காண்க.

2) இலாபத்தின் 60% ஐ முதலீட்டுடன் சேர்த்த பின்னர் முதலீடு எவ்வளவு?

3) பின்னர் உள்ள முதலீட்டிற்கு 15% வருட வட்டிப்படி பெறப்படும் இலாபம் எவ்வளவு?

4) பெற்ற இலாபத்தை மூவரின் முதலீட்டின் விகிதத்திற்கேற்ப பகிர்வதன் மூலம் B பெறும் தொகை எவ்வளவு?

**04)** நகரம் ஒன்றில் கடந்த ஆறு மாதத்தில் மோட்டார் சைக்கிள் விபத்தில் மரணமடைந்தவர்களின் வயது தொடர்பான தகவல்களை பின்வரும் அட்டவணை காட்டுகிறது.

| வயது வருடங்களில் | 16-20 | 21-25 | 26-30 | 31-35 | 36-40 | 41-45 | 46-50 | 51-55 |
|---|---|---|---|---|---|---|---|---|
| எண்ணிக்கை | 22 | 30 | 20 | 16 | 13 | 10 | 05 | 02 |

1) ஆகார வகுப்பு யாது?

2) வகுப்பாயிடை 31-35 இன் நடுப்பெறுமானத்தை எடுகொண்ட இடையாகக் கொண்டு மேற்குறித்த நகரத்தில் விபத்தில் மரணமடைந்தோர் இடை வயதைக் காண்க.

3) தரவின்படி 26 வயதிற்குட்பட்டோரில் மரணமானவரின் சத்வீதத்தைக் காண்க.

**05)** சார்பு $y = 3 - 2x^2$ இன் வரைபை வரையப் பொருத்தமான x இனதும் y இனதும் பெறுமானம் கொண்ட பூரணமற்ற அட்டவணை தரப்பட்டுள்ளது.

| X | -3 | -2 | -1 | 0 | 1 | 2 |
|---|---|---|---|---|---|---|
| Y | -15 | -5 | ........... | ........... | ........... | -5 |

1) அட்டவணையைப் பிரதி செய்து வெற்றிடம் நிரப்புக.

2) x அச்சுவழியே 10 சிறிய அலகு சதுரங்கள் 1 அலகும், y அச்சு வழியே 10 சிறிய சதுரங்கள் 2 அலகாகவும் வகை குறிக்குமாறு சார்பின் வரைபை வரைக.


3) வரைபின் திரும்பற் புள்ளியின் ஆள்கூறு யாது?

4) சார்பு -10 அகும் போது x இன் பெறுமானம் யாது?

5) $y = 3 - 2x^2$ எனும் வரைபு Y அச்சு வழியே 2 அலகுகள் நேர்த்திசையில் இடப்பெயர்ச்சியடைந்தால் வரைபின் சமன்பாட்டை எழுதுக.

6) $y = 2x^2 + 3$ ஆகும் பொது உச்சியின் ஆள்கூறு யாது?

**06)**





a) தரப்பட்ட உருவில் முக்கோணியின் பக்கம் AB யிலும், AC யிலும் சதுரங்கள் வரையப்பட்டுள்ளன.

$B\hat{A}C$ ஆனது x எனத் தரப்பட்டுள்ளது.

1) $E\hat{A}C$ யின் பெறுமானம் யாது?

2) $G\hat{A}C$ யின் பெறுமானம் யாது? காரணம் தருக.

3) GC = BE என நிறுவுக.




b) உரு ABCD ஒரு வட்ட நாற்பக்கல். AB வட்டத்தின் விட்டம் AC, BD என்பன X இல் வெட்டுகிறது. பின்வரும் வினாக்களுக்கு விடை தருக.

$B\hat{D}C = 40^0$, $A\hat{B}D = 30^0$

1) செங்கோண முக்கோணியை பெயரிடுக.

2) $B\hat{C}D$ இன் பெறுமானம் யாது?

3) $B\hat{A}D$ இன் பெறுமானம் யாது?

4) $D\hat{B}C$ இன் பெறுமானம் யாது?

5) $B\hat{X}C$ இன் பெறுமானம் யாது?

**07)** AB = 5cm, $A\hat{B}C$ $120^0$, BC=6.8cm, AB//CD ஆகுமாறு CD இன் நீளம் 8.5cm உடைய சரிவகம் ABCD ஐ அமைக்க.

1) AD இன் நீளத்தைக் காண்க.
2) சரிவகம் ABCD இன் பரப்பிற்கு சமமான பரப்புடைய முக்கோணி ADPஅமைப்பதற்கு நீட்டப்பட்ட AB இல், BP = 8.5 cm ஆக P ஐ குறிக்க.
3) ABCD பரப்பு = $\triangle ADP$ எனக் காட்டுக.
4) $\triangle BCP$ இன் உள்வட்டத்தை வரைக.
5) வட்டத்தின் ஆரையின் நீளத்தை அளந்து எழுதுக.

# மாநில அரசின் நிதியை மத்திய அரசு பறிக்கின்றது



மாநிலங்களின் நிதியை மத்திய அரசு அபிவிருத்தி என்ற பெயரில் பரித்துக்கொண்டு போகிறது என மேற்கு வங்காள முதல்வர் மம்தா பானர்ஜி தெரிவித்துள்ளார்.

நான் ரயில்வே மந்திரியாக இருந்த போது மேற் வங்களத்தில் 16 ஆலைகள் அமைக்க ஒப்புதல் அளித்தேன். அந்தக் காலகட்டத்தில் ரயில்களில் கரப்பான் பூச்சி, எலிப் பிரச்சினை உள்ளது என்று டி.வி.களில் தினமும் செய்திகள் வரும். இப்போது அந்தக் கரப்பான் பூச்சிகளும், எலிகளும் அமெரிக்காவுக்கா போய்விட்டன.

அடுத்த இரண்டு அல்லது 3 மாதங்களுக்கு பிறகு நாடாளுமன்ற தேர்தல் நடைபெறும்.




தேவைப்பட்டால் ரயில்வே துறை மீண்டும் திரிணமுல் காங்கிரசுக்கே திரும்பி வரும். பெட்ரோல், டீசல், சமையல் காஸ், உரம் ஆகியவற்றின் விலைகளை மத்திய அரசு தினமும் உயர்த்திக் கொண்டே போகிறது. யார் சொல்வதையும் கேட்பதில்லை.

அவர்களுக்கு தோன்றியதை செய்து கொண்டிருக்கிறார்கள். மாநிலங்களின் நிதியை மத்திய அரசு பறித்துக் கொண்டு போகிறது. மேற்கு வங்காளம் 21 ஆயிரம் கோடி ரூபா வருவாயை திரட்டுகிறது. ஆனால் நாம் வட்டியாக செலுத்த வேண்டிய தொகையோ 26 ஆயிரம் கோடி இருக்கின்றது என்றார்.

# இந்தியாவின் தீவிரவாதிகள் சிரிய யுத்தத்தில் பங்கேற்பு



சிரியாவில் ஜனாதிபதி அசாத்துக்கெதிராக நிகழும் சிவில் யுத்தத்தில் இந்தியாவைத் தாயகமாகக் கொண்ட (ஜிஹாதிகள்) தீவிரவாதிகள் சிலரும் போராடி வருவதாக தகவல் வெளியாகியுள்ளது.

இவ்விடயம் குறித்து சிரிய ஜனாதிபதி அசாத்தின் அரசியல் ஆலோசகர் பௌதாயினி ஷபான் கருத்துத் தெரிவிக்கையில், சிரிய அரசுக்கெதிராகப் போராடி வரும் புரட்சியாளர்களில் இந்தியாவைப் பூர்வீகமாகக் கொண்ட, தீவரவாதிகள் இருப்பதனால்தான் நாம் இவ்விடயத்தில் இந்தியா மிகவும் செயற்திறன் மிக்க பங்கினை ஆற்ற வேண்டும் என நினைப்பதாகக் கூறியுள்ளார்.

ஏனெனில் தற்போது பெரிதாகி வரும் இந்த யுத்தம் யாரையும் உயிரோடு மிஞ்ச வைக்கப் போவதில் என இவர் குறிப்பிட்டுள்ளார்.

மேலும் இவர் சிரியாவுக்கான ஐ.நா இராஜதூதர் லக்தர் ப்ராஹிமி தெரிவித்துள்ளதன் படி மொத்தம் 38 நாடுகளைப் பின்னணியாகக் கொண்ட போராளிகள் சிரிய யுத்தத்தில் பங்கெடுத்திருப்பதாகக் கூறிய கூற்றைச் சுட்டிக் காட்டினார். ஷபான், ஜனாதிபதி அசாத்தின் நிலைப்பாட்டை பிரதமர் மன்மோகன் சிங்கிற்குத் தெரியப் படுத்துவதற்காக சமீபத்தில் இந்தியாவுக்கு விஜயம் செய்திருந்தார்.

இதன் பின்னணியில் இன்னும் சில நாட்களில் டர்பனில் நடைபெறவுள்ள BRICS மாநாட்டில் சிரிய அரசுக்கு ஆதரவான போக்கைக் காட்டி வரும் ரஷ்யா மற்றும் சீனா ஆகிய நாடுகளுடன் இணைந்து செயற்பட வைக்கும் முயற்சி இருக்கலாம் எனக் கருதப்படுகின்றது.

# அரசியல்வாதிகளுக்கு பாதுகாப்பு அதிகரிப்பு



(புதுடில்லி)

வி.ஐ.பி.களுக்கு வழங்கப்படும் பாதுகாப்பு தொடர்பாக நீதிமன்றம் கேள்வி எழுப்பியுள்ள நிலையில், இன்னும் 6 அரசியல்வாதிகளுக்கு இசட் பிளஸ் பாதுகாப்பு வழங்க மத்திய அரசு முடிவு செய்துள்ளது.

மத்திய உள்துறை அமைச்சராக சிதம்பரம் இருந்த போது, பாதுகாப்பு பெறும் வி.ஐ.பி.களின் எண்ணிக்கையை குறைத்த நிலையில் தற்போது, இதனை அதிகரிக்க மத்திய அரசு இந்த முடிவு எடுத்துள்ளது.

தற்போது மத்திய அமைச்சர் பெனி பிரசாத் வர்மா மற்றும் பகுஜன் சமாஜ் கட்சி எம்.பி. பிரஜேஸ் பாதக் உள்ளிட்ட 6 பேருக்கு இசட் பிளஸ் பாதுகாப்பு வழங்கப்பட்டுள்ளது. மத்திய அமைச்சர் பெனி பிரசாத் வர்மாவுக்கு தொலைபேசி மூலம் மிரட்டல் வந்ததைத் தொடர்ந்து அவருக்கு இசட் பிளஸ் பாதுகாப்பு வழங்கப்பட்டுள்ளது. கடந்த சில ஆண்டுகளுக்கு முன்னர் இசட் பிளஸ் பாதுகாப்பு விலக்கிக் கொள்ளப்பட்ட பகுஜன் சமாஜ் கட்சியின் ராஜ்யசபா எம்.பி., பிரஜேஸ் பாதக்கிற்கு மீண்டும் இசட் பிளஸ் பாதுகாப்பு வழங்கப்பட்டுள்ளது. இந்தியாவில் மத்திய அரசு 380 வி.ஐ.பி.களுக்கு பாதுகாப்பு வழங்கி வருகிறது. ஒவ்வொரு வி.ஐ.பி.களுக்கும் குறைந்தது 3 பொலிஸார் பாதுகாப்பு வழங்கி வருகின்றனர். 35 வி.ஐ.பி.கள் இசட் பிளஸ் பாதுகாப்பில் உள்ளனர். அவர்களுக்கு 35 முதல் 80 பொலிஸார் பாதுகாப்பு அளிக்கின்றனர். இசட் பிரிவு பாதுகாப்பில் 50 வி.ஐ.பி.க்கள் உள்ளனர். ஒவ்வொரு வி.ஐ.பி.களுக்கும் 20 பொலிஸார் பாதுகாப்புப் பணியில் உள்ளதாக கூறப்படுகிறது.


# கவர்ச்சியை குறைத்தார் நயன்தாரா

நடிகை நயன்தாரா திடீரென்று கவர்ச்சியை குறைத்துக் கொண்டு உள்ளார். ஏற்கனவே அய்யா படத்தில் குடும்ப பாங்கான வேடத்தில் அறிமுகமானார். அதன் பிறகு கவர்ச்சிக்கு மாறினார். வல்லவன் படத்தில் சிம்புவை உதட்டோடு உதடு முத்தமிடுது போன்ற போஸ்டர்கள் சென்னையில் ஒட்டப்பட்டு பரபரப்பை ஏற்படுத்தின. தற்போது மீண்டும் குடும்ப பாங்கான வேடங்களுக்கு மாறியுள்ளார்.

சமீபத்தில் தெலுங்கில் வந்த ஸ்ரீராமராஜ்ஜியம் படத்தில் சீதையாக நடித்தார். அதில் இருந்து கவர்ச்சி வேடங்களில் நடிப்பதில்லை என்று முடிவு செய்துள்ளார். உதயநிதி ஜோடியாக தற்போது நடித்து வரும்



இது கதிர்வேலன் காதல் படத்திலும் கவர்ச்சி இல்லை. குடும்ப பாங்கான வேடத்தில் தோன்றுகிறார். பாடல் காட்சிகளிலும் கவர்ச்சி உடை அணியவில்லை என தகவல்கள் தெரிவிக்கின்றன.




## கிறிஸ்தவ நற்சிந்தனை

# மன்னிப்பு வேண்டும்

(யோசுவா 5 : 9, 10 - 12)
(லூக்கா 15 : 1 - 3, 11- 32)

மன்னிக்க முடியாமை இன்றைய உலகில் பெரும் பிரச்சினையாக உருவாகியுள்ளது. திருமண உறவுகள் விவாகரத்தில் முடிவடைவதற்கு முக்கிய காரணம், ஒருவரையொருவர் மன்னிக்க முடியாமை, கோபம், பகையுணர்வு, பழிவாங்கும் உணர்வு அடக்கிவைக்கும் கோபம், தம்மை மன்னிக்கமுடியாத குற்ற உணர்வு இதெல்லாம் மருந்தால் குணமாக்க முடியாத நோய்களுக்குக் காரணமாகின்றது என்பது வைத்தியத்துறை நிபுணர்களின் கணிப்பாகும்.

சித்தம் தெளிவது என்பது செய்த தவறை உணர்வது எமது அகங்காம் ஆணவத்தால்நாம் கடவுளுக்கும் பிறருக்கும் எதிராய் கலகம் புரிகின்றோம். உறவை முறித்துக்கொள்கின்றோம் தூரம் விலகிச் செல்கின்றோம்.

செய்பாவம் உணர்ந்தால் போதாது. எவருக்கெதிராய் பாவம் செய்தோமோ அவரிடம் நாம் மன்னிப்பு வேண்டி வரவேண்டும். எமது அகங்காரம், ஆணவம் இங்கு தாழ்மையாக மாறவேண்டும். நாம் இழந்த நிலைமையைப் பெற எந்த விதத்திலும் தகுதியற்றவர்கள் என்ற எண்ணம் எம்மில் உருவாகவேண்டும். மன்னிப்பு வேண்டுதல் என்பது ஒரு மனமாற்றம்.

பாவம் உணருதல் என்பது பாரிய மாற்றம். அதை ஒரு அற்புதம் என்றே வர்ணிக்க முடியும்.

மனம் திரும்பினால் மட்டுமே நாம் மன்னிப்பு வேண்டமுடியும். மனம் திரும்புதல் என்பது தந்தையின் அன்பு மனதை உணர்ந்தால் மட்டுமே நிகழமுடியும் இன்னொருவர் மனதை புண்படுத் திவிட்டோம் என்பது புனிதமான உணர்வு நான் மன்னிப்பு வேண்டும் மகனாக வாழ்கிறேனா? மன்னிப்பு வேண்டும் துணிவு, பணிவு என்னிடத்தில் உண்டா?

வி.பி.தனேந்திரா.

## முரசின் பிறந்த நாள் வாழ்த்துக்கள்



பெயர்: தா.சமீரா
ஊரெழு கிழக்கு,
ஊரெழு.

பல்லாண்டு காலம் வாழ்கவென வாழ்த்துகின்றோம்.

அகவை 01இல்

## வாழ்க வளமுடன்

சிறாரின் பெயர் : ........................................
முகவரி : ........................................
பிறந்த ஆண்டு : ........................................
கூப்பன்கள் ஐந்தும், புகைப்படமும்
........................................
பெற்றோர் கையொப்பம்

உங்களது பத்து வயதுக்குட்பட்ட சிறார்களின் பிறந்த நாள் கொண்டாட்டங்களில் "தினமுரசு" தினப்பதிப்பும் இணைகின்றது. உங்களது சிறாரின் புகைப்படத்துடன்' கீழ்வரும் கூப்பன்களில் ஐந்தினை நிரப்பி எமக்கு அனுப்பி வையுங்கள். தினமுரசு தினப்பதிப்பு உங்கள் அன்புச் செல்வத்தின் பிறந்த நாளன்று புகைப்படத்துடன் கூடிய பிறந்த நாள் செய்தியைப் பிரசுரிக்கும் என்பதை மனமகிழ்வுடன் தெரிவிக்கின்றோம்.

# பிரிட்டனில் குறைவடையும் புகைப்பிடிக்கும் பழக்கம்


கடந்த நாற்பதாண்டுகளில் பிரிட்டனில் புகைப்பழக்கம் பாதியாகக் குறைந்துவிட்டது என்றும், குடிப்பழக்கம் கணிசமாகக் குறைந துள்ளது எனவும் பொது வாழ்க்கை முறை பற்றிய ஆய்வு தெரிவித் துள்ளது. கடந்த 1947ஆம் ஆண் டுகளில் ஏறத்தாளபாதிப்பேர் சிகரெட் புகைத்துள்ளனர். ஆனால் கடந்த 2011ஆம் ஆண்டு ஐந்தில் ஒருவர் மட்டுமே புகைப்பழக் கத்திற்கு ஆளாகியுள்ளார்.

வாரத்துக்கு ஐந்து நாட்கள் மது அருந்தியவர், கடந்த 2005ஆம் ஆண்டு 22 சதவிகிதமாக இருந்த எண்ணிக்கை கடந்த 2011ஆம் ஆண்டு 16 சதவிகிதம் ஆகக் குறைந்துவிட்டது.

புகைப்பதால் நுரையீரல் புற்று நோயும், இதயநோயும் வர வாய்ப்பிருப்பதாகத் திரும்பத்திரும்ப விழிப்புணர்வுப் பிரசாரங்கள் நடத்தியதற்கு நல்ல பலன் கிடைத்துள்ளது. பணித்தலங்களில் புகைக்கக்கூடாது என்று பிரிட்டன் முழுக்க தடை விதிக்கப்பட்டதும், சிகரெட் விளம்பரத்துக்கு தடை விதித்ததும் புகைப்பழக்கத்தைக் குறைத துள்ளது.

இலண்டனில் உள்ள கிங்ஸ் கல்லூரியின் பொதுசுகாதாரப் பிரிவின் கௌரவப் பேராசிரியராக இருக்கும் ஆலன் மர்யோன் டேவிஸ் (Alan Maryon-Davis) கூறுகையில், புகைப் பழக்கமும்,மதுப்பழக்கமும் குறைந திருப்பது ஆறுதலாக இருந்தாலும் இன்னும் குறையவேண்டும் என்று கூறியுள்ளார்.

இதை தொடர்ந்து அவர் கூறுகையில், மதுவுக்கு விலை




யில் தள்ளுபடி தருவதை நிறுத்திவிடவேண்டும் ஏனென்றால் விலை குறையும்பொழுது குடிக்கும் அளவு அதிகமாகின்றது என்றும் மருத்துவமனைகளில் மதுதொடர்பான நோய்ப் பாதிப்பு உடையவர்களின் எண்ணிக்கை இன்னும் குறையவில்லை எனவும் தெரிவித்துள்ளார்.

மேலும் பிரிட்டிஷ் நுரையீரல் அறக்கட்டளையின் தலைமை நிர்வாகியான டாக்டர் பென்னி உட்ஸ் (Penny Woods) கூறுகையில், கடந்த நாற்பதாண்டுகளில் விதிக்கப்பட்ட கடுமையான சட்டங்களும், அரசின் விழிப்புணர்வுப் பிரசாரமும், புகைப்பழக்கத்தைக் குறைத்திருப்பதால் ஆபத்தான நோய்களும் அகால மரணமும் தடுக்கப்பட்டுள்ளன என்று குறிப்பிட்டுள்ளார்.



அமெரிக்காவில் உள்துறை அமைச்சகத்தில் ,பெண்களுக்கு எதிரான வன்முறை தடைச் சட்டத்தை கொண்டுவர, தீர்மானம் நிறைவேற்ற, நடவடிக்கை எடுக்க கையெழுத்திட்டார் அமெரிக்க அதிபர் ஒபாமா. அருகில் துணை அதிபர் ஜோய் பிடன் காணப் படுகின்றார்.

# புதிய போப்பாண்டவர் யார்?



புதிய போப் ஆண்டவரை தெரிவு செய்வதற்கான நடைமுறைகள் வரும் 12ம் திகதி தொடங்குகின்றன. நகரில் கடந்த ஆறு நாட்களாக ஆலோசனை செய்து வந்த கத்தோலிக்க மத கார்டினல்கள், தற்போது தெரிவுத் திகதியை அறிவித்துள்ளனர்.புதிய போப் ஆண்டவரை தேர்வு செய்யும் 115 கார்டினல்களும் வத்திக்கான் நகருக்கு போய்ச் சேர்ந் துள்ளனர். தெரிவுத் திகதி அறிவிக்கப்பட்டுள்ளதால், புதிய போப் ஆண்டவர் யார் என்ற எதிர்பார்ப்பு, கத்தோலிக்க கிறிஸ்தவர்களிடையே ஏற்பட்டுள்ளது.

# மரணத்தை நெருங்க விடாதீர்கள் ஜனாதிபதி சாவேஸின் இறுதிவார்த்தை



மரணமடைந்த வெனிசூலாவின் புரட்சி அதிபர் சாவேஸ், தன்னை எப்படியாவது காப்பாற்றும்படியும், இறக்க விட்டு விடாதீர்கள் என்று கெஞ்சியதாகவும் அவருக்கு நெருக்கமாக இருந்தவர்கள் தெரிவித்துள்ளதாக செய்திகள் வெளியாகியுள்ளன. வெனிசூலா அதிபரின் தலைமை மெய்க்காவலர் .இந்தத் தகவலை சர்வதேச செய்தி நிறுவனம் ஒன்றிடம் கூறியுள்ளார். அவரால் பேச முடியாவிட்டாலும் அவரது உதட்டசைவை நெருங்கி கேட்ட போது, நான் சாகவிரும்பவில்லை, என்னை மரணமடைய விட்டு விடாதீர்கள் என்று கூறியதாக அவர் தெரிவித்துள்ளார்.

அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் இரும்புப் பிடியில் சிக்கி வறுமையில் தத்தளித்த நாட்டை தனது 14 ஆண்டுகால நல்லெண்ண சாதனை ஆட்சி மூலம் மாற்றி அமைத்து உலகத் தலைவர்களுக்கு ஒருமுன்னோடியாகத் திகழ்ந்த சாவேஸ் மரணத்தைத் தொடர்ந்து வெனிசூலாவின் எதிர்காலம் தற்போது நிச்சயமின்மையை எட்டியுள்ளது.

சாவேஸின் மரணத்தில் சந்தேகம் இருப்பதாக துணை அதிபரும் இந்த செய்தியைக் கூறிய தலைமை மெய்க்காப்பாளரும் தெரிவித்துள்ளனர்.

# பதப்படுத்தப்பட்ட இறைச்சியால் அகால மரண ஆபத்து நேரும்


மிகவும் அதிகமாகப் பதப்படுத்தப்பட்ட இறைச்சியை உண்பது அகால மரணத்துக்கு இட்டுச்செல்லக் கூடும் என்பதைக் காட்டும்,கூடுதல் ஆதாரம் வெளி வந்துள்ளது. ஐரோப்பாவில் சுமார 5 இலட்சம் மக்களை வைத்து நடாத்தப்பட்ட ஆய்வொன்று,பதப படுத்தப்பட்ட இறைச்சி உண்பதால், 30 பேரில் ஒருவர் அகால மரணமடைய நேரிடுகிறது என்று கூறியது.



பி.எம்.சி மெடிசின் என்ற சஞ்சிகையில் வெளியாகியிருக்கும் ஒரு கட்டுரையில், ஆராய்ச்சியாளர்கள், தினசரி 20 கிராம்கள் இறைச்சி என்ற அளவுக்கு பதப் படுத்தப்பட்ட இறைச்சி, உண் பதைக் கட்டுப்படுத்துவது ( இது ஒரு துண்டு பன்றி இறைச்சிக்கு சமம்), ஓராண்டில் பல ஆயிரம் மரணங்களைத் தடுக்கக் கூடும் என்று கூறியிருக்கின்றனர்.

பதப்படுத்தப்பட்ட இறைச்சிகளை பாதுகாக்கப் பயன்படுத்தப்படும் உப்பு மற்றும் இரசாயணப் பொருட்கள் இருதயக்குழாய் நோய்கள் மற்றும் புற்றுநோய்கள் ஏற்படும் ஆபத்தை அதிகரிப்பதாக ஆராயச் சியாளர்கள் கூறுகிறார்கள்.

# கடவுளை நேரில் கண்ட நடிகர்



மலையுச்சியில் தனியாக இருந்த போது கடவுளை கண்டதாக பிரபல ஹொலிவுட் நடிகர் ஜிம் கேர்ரி கூறியுள்ளார். த மாஸ்க், ட்ருமேன் ஷோ போன்ற படங்களில் நடித்து பிரபலமான நடிகர் ஜிம் கேர்ரி(வயது 51), அமெரிக்காவில் உள்ள மலை உச்சியில் தனியாக இருந்த போது கடவுளைக்கண்டது குறித்து அவர் கூறுகையில், இயற்கை யின் வினோதங்கள் பற்றி அறிந்து கொள்வதற்காக அரி சோனா மாகாணத்தில் உள்ள மலையுச்சிக்கு சென்றேன்.

அங்கு லகோடா இன செவ்விந்தியர்கள் என்னிடம் ஒரு கத்தியையும், ஏழு அடி நீளமுள்ள போர்வையையும் தந்து தனியாக விட்டுச் சென்று விட்டனர்.

என்னிடம், இரண்டு நாட்களுக்கு தேவையான குடிநீர் மட்டும் இருந்தது. அந்தப் பகுதியில் மலை சிங்கங்கள், விஷப்பாம்புகள், தேள்கள் அதிகமாக இருப்பினும், அந்த மலையுச்சியில் நின்று ம்ற்ற மலைகளை இரசித்துக் கொண்டிருந்தேன்.

இரவு நேரம் வந்தபோது நான் சோர்வடைந்து விட்டதால் போர்வையை விரித்து படுத்துக் கொண்டேன். அப்போது விஷப் பாம்புகள் பற்றி எனக்கு பயம் ஏற்பட்டது. 'கடவுளே பயமாய் இருக்கிறது, எனக்கு துணையாக இரு' என சத்தமாக கூவினேன். அப்போது எனக்கு முன்னால் இருந்த மலைத்தொடர், ஒரு மனிதனை போல் உரு மாறியது. முதுகுப் பக்கமாக திரும்பி நின்ற அந்த உருவத்தை பார்த்ததும் என் பயம் அகன்று விட்டது. கடவுளை, நேரில் கண்டது எனக்கு மகிழ்ச்சி அளித்தது என்று தெரிவித்துள்ளார். ஜிம் கெர்ரி, bruce almighty (2003) என்ற படத்தில் கடவுளை சந்திப்பதும் பின்னர் அவரே கடவுளாக மாறி நடித்துள்ளார் என்பதும் குறிப் பிடத்தக்கது.

உலகச் செய்திகள்



வட கொரியா எல்லைப்பகுதியான ஜான்ஜயி இஸ்லெட்டிற்கு செல்லும் வழியில் தனது ராணுவ அதிகாரிகளுடன் படகுச்சவாரி செய்து வடகொரியா ஜனாதிபதி கிம் ஜாங் வுன் பார்வையிட்டார்.

# அமெரிக்காவில் அதிகரிப்பு




உலகெங்கும் நிலவி வரும் பொருளாதார பிரச்சினைகள் அமெரிக்காவிலும் எதிரொலித்துக் கொண்டிருக்கின்றன. இதிலிருந்து மீண்டுவர அந்நாட்டு அரசாங்கமும் தீவிர முயற்சிகளை மேற்கொண்டு வருகிறது. சமீபத்திய வரவு செலவுத்திட்ட கூட்டத் தொடரில், அர்சு சிக்கன நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது. வரிகள் விகிதமும் அதிகரிக்கப்பட்டுள்ளன. பொதுமக்களுக்கான சலுகைகள் குறைக் கப்பட்டுள்ள நிலையில் பெப்ரவரி மாதத்திற்கான வேலைவாய்ப்புப் புள்ளிவிபர முடிவுகளை அரசு வெளியிட்டுள்ளது. அது 2,36,000 வேலை வாய்ப்புகள் அதிகரித்து இருப்பதையும், இதன் மூலம் கடந்த 4 வருடங்களில் இல்லாத அளவிற்கு வேலையில்லாத் திண்டாட்டம் 7.7 சதவீதமாக குறைந்திருப்பதையும் காட்டுகிறது.

இது, அரசின் நடவடிக்கைகளையும் தாண்டி,பொருளாதாரம் பற்றிய மக்களின் நம்பிக்கையையும், வளர்ந்து வரும் தொழில் வாய்ப்புகளையும் காட்டுகிறது. சென்ற நவம்பர் மாதத்திலிருந்தே மாதந்தோறும் 2,00,000 வேலைவாய்ப்புகள் அதிகரித்துக் கொண்டிருக்கின்றன. ஊதிய உயர்வும் காணப்படுகிறது.

வேலைவாய்ப்புகளும், நீண்டகால அடிப்படைகளில் சிறந்த அமைப்புகளால் வழங்கப்படுகிறது. ஜனவரி முதல் ஓய்வூதிய சேமிப்பிற்கு வரிவிதிப்பு, எரிபொருள் விலையேற்றம் போன்ற வற்றையும் தாண்டி, வாகன விற்பனையும், கட்டுமானத்தொழிலில் வளர்ச்சியும் காணப்படுகிறது. உற்பத்தி பெருகத்தொடங்கியுள்ளது. இது அமெரிக்க நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கான பாதையை காட்டுகிறது.

# 'விசில்' அடித்ததாலேயே உண்ணாவிரதத்தில் குழப்பம்

## என்கிறார் பிரதிப் பொலிஸ் மா அதிபர்

(யாழ்ப்பாணம்)

தெல்லிப்பளையில் நடைபெற்ற உண்ணாவிரத்தின் போது விசில் அடித்ததாலேயே குழப்பம் ஏற்பட்டதாகவும் உண்ணாவிரதத்தினை குழப்பவில்லை என்றும் யாழ். மாவட்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் இந்து கருணாரட்ண தெரிவித்தார்.

யாழ். பொலிஸ் நிலையத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற வாராந்த பத்திரிகையாளர் சந்திப்பின் போது, தெல்லிப்பளை உண்ணாவிரதம் தொடர்பாக தெல்லிப்பளை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்யப்படவில்லை என காங்கேசன்துறை சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் எம்.மகிந்த ஏக்கநாயக்க தெரிவித்தார்.

இந்நிலையில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவன் தெல்லிப்பளை பொலிஸ் நிலையத்தில் கடந்த 19 ஆம் திகதி முறைப்பாடு பதிவு செய்துள்ளார் என போதிய ஆதாரங்கள் முன்வைத்ததுடன், ஊடகவியலாளரின் புகைப்படக்கருவி உடைக்கப்பட்ட நிலையில் வீதியில் இருந்த அக்கருவி பொலிஸார் ஒருவரினால் ஊடகவியலாளரிடம் ஒப்படைக்கப்பட்டது என ஊடகவியலாளர் மீண்டும் கேள்வி எழுப்பி, இதற்கான பதில் என்ன என்றும் கேட்டார்கள்.

அதற்குப் பதிலளிக்கும் வகையில் ஊடகவியலாளர் சந்திப்பில் பொலிஸ் தரப்பில் இருந்து கலந்துகொண்ட அதிகாரிகள் பலர் முன்னுக்கு பின் முரணான பல விடயங்களை தெரிவித்தனர்.

உண்ணாவிரத்தின் போது பொலிஸார், பொதுமக்களுக்கு முழு பாதுகாப்பும் வழங்கினார்கள். குழப்பநிலைகள் குறித்தும் தாக்கப்பட்ட சம்பவங்கள் குறித்தும் எவரும் முறைப்பாடு பதிவு செய்யவில்லை. பத்திரிகைகளில் வெளியிடப்பட்ட புகைப்படங்கள் மற்றும்' வீடியோ ஆதரங்கள் அனைத்தையும் பார்த்தோம். அவற்றின் அடிப்படையில் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றோம் என்று மகிந்த ஏக்கநாயக்க தெரிவித்தார்.

இதேவேளை, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினரினால் தெல்லிப்பளை பொலிஸ் நிலையத்தில் செய்யப்பட்ட முறைப்பாட்டின் பிரதிகளை பார்வையிட்ட பிரதிப் பொலிஸ் மா அதிபர், முறைப்பாட்டு பிரதியில் உள்ள விடயங்களை ஆராய்ந்த பின்னர் எதிர்வரும் காலங்களில் முழுமையான விசாரணைகள் மேற்கொள்வதுடன், புலனாய்வும் மேற்கொண்டு சரியான தகவல்களை ஊடகங்களுக்கு தெரிவிப்பதாக யாழ். மாவட்ட பிரதிப் பொலிஸ் மா அதிபர் இந்து கருணாரட்ண மேலும் கூறினார். (25)

### சடலம் மீட்பு

(யாழ்ப்பாணம்)

கிணற்றிலிருந்து பெண் ஒருவரது சடலம் மீட்கப்பட்டு கோப்பாய் பொலிஸாரால் நேற்று யாழ். போதனா வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

பருத்தித்துறை வீதி, கோப்பாய் தெற்கு, கட்டைப்பிராயைச் சேர்ந்த சுந்திரலிங்கம் விமலா (வயது - 59) என்ற பெண்ணின் சடலமே இவ்வாறு ஒப்படைக்கப்பட்டுள்ளது. (பா)

# யாழ். கல்வி வலயத்தின் குழு நிலை மதிப்பீட்டுப் பணி

(யாழ்ப்பாணம்)

யாழ். வலயப் பாடசாலைகளில் தரம் 11 மாணவர்களுக்கான முதலாம் தவணைப் பரீட்சை விடைத்தாள்கள் குழு நிலை மதிப்பீட்டுப் பணி எதிர் வரும் 22 ஆம் திகதி வெள்ளிக்கிழமை தொடக்கம் ஏப்ரல் 2 ஆம் திகதி வரை நடைபெறவுள்ளது.

யாழ். வலயக் கல்வி அலுவலக முகாமைத்துவ மண்டபத்தில் நடைபெறவுள்ள விடைத்தாள் மதிப்பீட்டுப் பணிகளுக்கு சம்பந்தப்பட்ட ஆசிரியர்கள் குறிப்பிட்ட திகதிகளில் சமுகமளிக்க வேண்டுமென யாழ். வலயக் கல்விப் பணிப்பாளர் அறிவித்துள்ளார்.

தமிழ், கணிதம், ஆங்கிலம், விஞ்ஞானம், வரலாறு, சமயம் ஆகிய பிரதான பாடங்களே வலய மட்டத்தில் மதிப்பீடுகள் மேற்கொள்ளப்படவுள்ளன. (10)

# 'யாழ். மக்கள் வங்கியாளன்' சஞ்சிகை வெளியீடு

(யாழ்ப்பாணம்)

யாழ். பிராந்திய மக்கள் வங்கியின் உத்தியோகபூர்வ ஏடாகிய 'யாழ். மக்கள் வங்கியாளன்' எனும் சஞ்சிகை அண்மையில் புதிதாக வெளியிடப்பட்டுள்ளது.

இதில் அண்மையில் சேவையிலிருந்து ஓய்வுபெற்ற பிராந்திய முகாமையாளர் எஸ்.பத்மநாதன், பிராந்திய முகாமையாளர் கே.சுசீந்திரன், உதவிப் பிராந்திய முகாமையாளர் என்.நாகேஸ்வரன் ஆகியோரின் ஆசிச் செய்திகளுடன் நினைவில் நிறுத்த வேண்டிய பதிவுகள் சில, மாண்புறும் உத்தியோகத்தர்களும் கௌரவத்துக்குரிய மூத்த வங்கியாளர்களும் ஒரு பார்வை, சுதந்திரத்தில் பிறப்பு, உங்களுக்குத் தெரியுமா? எங்களின் வழிகளும் வலிகளும், விருது வழங்கலின் அடிப்படைகள் போன்ற தலைப்புகளுடனான ஆக்கங்களுடன் மேலும் பல ஆக்கங்களும் வெளிவந்துள்ளன.

வங்கியின் செயற்பாடுகள், வரலாறுகள், சேவைகள் பற்றி அறிய விரும்புபவர்களுக்கும் வங்கி வாடிக்கையாளர்களுக்கும் பயன் தரும் வகையில் இச் சஞ்சிகை அமைந்துள்ளது. (54)

## பிரேரணையை...

தெரிவித்துள்ளார்.

ஏற்கனவே ஜெனிவா சென்றடைந்துள்ள பிரதி சொலிசிட்டர் ஜெனரல்களான புவனேக அலுவிஹார ஜனக் டி சில்வா மற்றும் சிரேஷ்ட சட்டத்தரணி நெரீன் புள்ளே ஆகியோர் இந்த அறிக்கையை தயாரிப்பதற்கான ஆலோசனைகளை வழங்கியிருப்பதாக சட்ட மாஅதிபர் பாலித பெர்னாண்டோ குறிப்பிட்டார்.

## அரச...

அரச செயலகங்களில் ஒவ்வொரு மாதமும் மேற்பார்வை செய்யும் நடவடிக்கை இடம்பெறுமெனவும், இதன் முதற்கட்டமாக கடந்த மாதம் பொலநறுவை மாவட்டத்தில் இந்நடவடிக்கை இடம்பெற்றதாகவும் அவர் தெரிவித்தார்.

## பிரேரணையின்...

நேற்று முன்தினம் ஜெனிவாவில் கூட்டமொன்றும் இடம்பெற்றது.

நேற்று முன்தினம் ஜெனிவா நேரப்படி பிற்பகல் 3 மணிக்கு ஆரம்பமான இக் கூட்டம் மாலை 5.10 மணிவரையில் நடைபெற்றது. இதில் இலங்கைக்கு எதிரான அமெரிக்காவின் பிரேரணையை ரஷ்யா, பாகிஸ்தான், சீனா, கியூபா, ஆகிய நாடுகளின் பிரதிநிதிகள் எதிர்த்துள்ளனர்.

இந்தப் பிரேரணையில் உள்ள சொற்பதங்களில் மாற்றங்கள் செயற்பட வேண்டுமென்று இந்த நாடுகளின் பிரதிநிதிகள் இந்தக் கூட்டத்தில் வலியுறுத்தியுள்ளனர்.

இதேபோல் சியராலியோன், அங்கோலா ஆகிய நாடுகளின் பிரதிநிதிகளும் அமெரிக்காவின் பிரேரணையில் 'குறிப்பிடப்பட்டுள்ள சொற்பதங்களில் மாற்றங்கள் கொண்டு வரப்பட வேண்டும் என்று வலியுறுத்தியுள்ளனர்.

எனினும் இந்தக் கூட்டத்தில் கலந்து கொண்ட கனடா மற்றும் ஐரோப்பிய நாடுகளின் பிரதிநிதிகள் இலங்கைக்கு எதிராக அமெரிக்காவினால் சமர்ப்பிக்கப்பட்டுள்ள பிரேரணை வலிதற்றது என்றும் இதனால் கடுமையான நிபந்தனைகளை உள்ளடக்கி இந்தப்பிரேரணை கொண்டுவரப்பட வேண்டும் என்றும் தெரிவித்துள்ளனர்.

## யாழ். ரயில்நிலைய...

திருடர்களால் இந்தக் கடை உடைக்கப்பட்டு திருடப்படுவதனை அவதானித்த அயலவர்கள் கையடக்கத் தொலைபேசியின் மூலமாக அந்தக் கடை உரிமையாளருக்கு தகவல் கொடுத்ததையடுத்து அதிகாலை 4.00 மணியளவில் கடைக்காரர் வந்து கடையைப் பார்த்தபோது கடையின் வெளிப்பூட்டுக்கள் உடைக்கப்பட்டு கடை திறந்து காணப்பட்டுள்ளது.

இதனையடுத்து இந்தச் சம்பவம் குறித்து யாழ். பொலிஸ் நிலையத்தில் கடை உரிமையாளரினால் முறையிடப்பட்டதையடுத்து யாழ். பொலிஸார் ஸ்தலத்திற்கு விரைந்து விசாரணையை மேற்கொண்டனர்.

இந்தக் கடையிலிருந்து ஒரு இலட்சத்து 10 ஆயிரம் ரூபா ரொக்கப்பணமும் 10 ஆயிரம் ரூபா பெறுமதியான கிற் காட்டுக்களும், 16 பெட்டி சிகரெட்களும் கொள்ளையிடப்பட்டுள்ளது.

இதேவேளை அந்தக் கடைக்கு சற்றுத் தொலையில் வைத்தியசாலை வீதியில் அமைந்துள்ள இலத்திரனியல் பொருட்கள் பழுது பார்க்கும் கடையையும் திருடர்கள் உடைத்துள்ள போதும் அங்கிருந்து பொருட்கள் எவையும் திருடப்படவில்லை.

மேலும் கடந்த ஒரு மாதத்திற்கு முன்னர் யாழ். ரயில் நிலையச் சந்தியிலிருந்த 2 பலசரக்குக் கடைகள் இவ்வாறு இரவு நேரத்தில் திருடர்களால் உடைக்கப்பட்டு பொருட்கள், பணம் என்பன திருடப்பட்டிருந்தமையும் குறிப்பிடத்தக்கது. (பா)

## இலங்கைத்...

ஜெனரல் சவீந்திர சில்வா தெரிவித்துள்ளார்.

விடுதலைப் புலிகளின் பிடியில் இருந்து தப்பித்து அமைதி மற்றும் உறுதித்தன்மையை அனுபவித்துக் கொண்டு அரசியல் நோக்கத்துடன் சில சக்திகள் இலங்கை அரசாங்கத்தின் மீது ஆதாரமற்ற குற்றச்சாட்டுகளை சுமத்துவதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

ஜெனிவா தீர்மானத்துக்கு ஆதரவளிக்கக் கோரி தமிழ்நாட்டில் மணி என்பவர் தீக்குளித்து தற்கொலை செய்து கொண்ட சூழ்நிலைகள் குறித்து விசாரிக்கப்பட வேண்டும் என்றும் குறிப்பிட்டுள்ளார்.

ஊடக முனையில் விடுதலைப் புலிகளின் ஆதரவாளர்கள் மிகுந்த செயற்திறனுடன் இயங்குவதாகவும், ஐ.நா. மனித உரிமைகள் பேரவையின் கூட்டத்தொடர், கொமன்வெல்த் மாநாடு ஆகியன நடக்கவுள்ள நேரத்தில் குற்றச்சாட்டுகளை முன்வைத்துள்ளதாகவும் அவர் மேலும் கூறியுள்ளார்.

எனினும், பெரும்பாலான தமிழ்மக்களிடம் இது எடுபடவில்லை என்றும், விடுதலைப் புலிகள் தோற்கடிக்கப்பட்டதில் இருந்து வடக்கில் எந்தவொரு எதிர்ப்புப் போராட்டமும் இடம்பெறவில்லை என்றும் அவர்கள் சுதந்திரமாக வாழவே விரும்புவதாகவும் மேஜர் ஜெனரல் சவீந்திர சில்வா தெரிவித்துள்ளார்.

## பேச்சின்....

காலி - பிலான மெத்செவன பௌத்த மத்திய நிலையத்தை நேற்றைய தினம் திறந்து வைத்து உரையாற்றிய போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

30 வருட யுத்தம் முடிவுக்கு வந்து நாடு தற்போது அபிவிருத்தியை நோக்கி சென்று கொண்டிருப்பதாக பாதுகாப்பு செயலாளர் இங்கு கூறினார்.

## ஊடகவியலாளர் மீதான...

வன்மையாகக் கண்டிக்கிறது என ஈ.பி.டி.பி.யின் யாழ். மாவட்ட அமைப்பாளர் கந்தசாமி கமலேந்திரன் (கமல்) தெரிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் யாழ். நகரப்பகுதியில் வலம்புரி பத்திரிகைச் செய்தியாளர் இனந்தெரியாதோரால் தாக்கப்பட்டதை கண்டித்து வெளியிட்டுள்ள கண்டன அறிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அவ் அறிக்கையில் மேலும் தெரிவித்துள்ளதாவது,

ஊடகவியலாளர்கள் மீதான தாக்குதல்கள் நீடிக்கின்ற போதும் பொலிஸார் குற்றவாளிகளை இனங்காணுவதில் காட்டிவருவரும் அசிரத்தையும், யாழ். குடாநாட்டில் புற்றீசல்களாக தலையெடுத்துள்ள கோ'டி மோதல்களினை தடுக்காது செயற்படுவதன் மறுவிளைவாகவும் இதனைக் கொள்ளமுடியும்.

இவ்வாறு தாக்குதல்கள் நீடிக்கின்ற போதும் வெறுமனே கண்டனங்கள் மட்டும் ஆரோக்கியமான விளைவுகளை தந்துவிடப்போவதில்லை. எனவே சம்மந்தப்பட்டவர்களை கைது செய்து சட்டத்தின் முன்னிறுத்த வெளிப்படையாக செயற்படுவதுடன், ஊடகவியலாளர்களின் பாதுகாப்பையும் உறுதிப்படுத்தல் வேண்டும்.

குடாநாட்டில் ஏனைய பத்திரிகை நிறுவனப் பணியாளர்கள் தாக்கப்பட்டதன் தொடர்ச்சியாக வலம்புரி பத்திரிகைச் செய்தியாளரும் இனந்தெரியாதோரால் கண்மூடித்தனமாகவும், காட்டுமிராண்டித்தனமாகவும் தாக்கப்பட்டமையை ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சி வன்மையாகக் கண்டிக்கிறது என மேலும் தெரிவித்துள்ளார்

## பிற நாடுகளின்...

விரும்புகிறது. எந்தக் காரணமும் இல்லாமல், நாம் ஏதாவது ஓர் அணியில் இணைந்து கொண்டு உரக்கக் குரல் கொடுக்க வேண்டிய அவசியமில்லை.

அதே நேரத்தில் மற்றொரு நாடு குறித்து தாக்கிப் பேச வேண்டிய தேவையும் இல்லை. அனைத்துலக அளவில் ஒரு நாடு அதிகாரம் செலுத்தும் வகையில் செயற்படுவதை இந்தியா எப்போதும் ஏற்றுக் கொண்டதில்லை.

ஒரே நேரத்தில் இரு எதிரி நாடுகளுடன் நம்பிக்கையுடன் பேச இந்தியாவால் முடியும். மென்மையாக நடந்து கொள்வதாக இந்தியா மீது அடிக்கடி குற்றம் சாட்டப்படுவதுண்டு.

உலக நாடுகள் அனைத்தும் செழிப்புடன் இருக்க வேண்டும் என்ற எண்ணம் இருந்தால், யாருடனும் கடுமையாக நடந்து கொள்ள வேண்டியதில்லை. அதனால் உலக காவல்காரன் கருத்துக்கு நாங்கள் ஆதரவு அளிப்பதில்லை.

சீனாவிடமிருந்து கூட சில விடயங்களை கற்று, ஆரோக்கியமான போட்டியைச் சந்திக்கவே இந்தியா விரும்புகிறது என்று அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

# சமூக சேவை திணைக்கள உதவிகள் மக்கள் அறிந்திருப்பது அவசியம்

### சமூகசேவைகள் அமைச்சின் செயலர் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

சமூக சேவைகள் திணைக்களத்தின் உதவித் திட்டங்கள் குறித்து பொதுமக்கள் அறிந்து கொள்வதில்லை எனவும் எனவே இந்த உதவித் திட்டங்கள் குறித்து பொதுமக்கள் அறிந்திருப்பது அவசியமென சமூக சேவைகள் அமைச்சின் செயலாளர் திருமதி இமெல்டா சுகுமார் தெரிவித்துள்ளார்.

அரியாலை உதயபுரம் பகுதியில் வசித்துவரும் யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட மாற்றுவலுவுள்ள பழனியாண்டி இராசையா என்பவரின் குடும்ப உறுப்பினர்கள் நால்வருக்குமான சமூகநல உதவித் திட்டத்தை நேற்றையதினம் வழங்கி வைத்து உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்,

சமூக சேவைகள் அமைச்சிற்கு அரசாங்கத்தினால் ஒதுக்கப்படும் நிதி திரும்பிச் சென்றுவிடாதவாறு அதனை மக்களுக்காக பயன்படுத்தி திணைக்களம் அர்ப்பணிப்புடன் சேவையாற்றி வருகிறது.

யாழ். மாவட்டத்தில் 100 மாற்றுத் திறனாளிகளுக்கு வீட்டுத் திட்டங்கள் வழங்கப்பட்டுள்ளது. இலங்கை பூராவும் 25 ஆயிரம் சிரேஷ்ட பிரஜைகளுக்கு 3000 ரூபா உதவிப்பணக் கொடுப்பனவும் வழங்கப்படுகிறது. அத்துடன் 23 ஆயிரம் பேருக்கு இந்தக் கொடுப்பனவு வழங்கப்படவுள்ளது.

அத்துடன் அந்தந்தப் பிரதேச செயலர்களின் ஊடாக சமூக சேவைகள் திணைக்களத்திற்கு விண்ணப்பிப்பதன் மூலம் ஊனமுற்றவர்களுக்கான சக்கர நாற்காலி வழங்கப்படுவதுடன் அவர்களின் மருத்துவச் செலவிற்காக 25 ஆயிரம் ரூபா கொடுப்பனவும் வழங்கப்படுகிறது. எனவே சமூக சேவைகள் அமைச்சின் உதவித்திட்டங்களை பொது மக்கள் அறிந்திருப்பது அவசியமென்றும் தெரிவித்துள்ளார். (பா)

# இந்தியக் குழுவிற்கு தலைவராக முலாயம்சிங்

(கொழும்பு)

ஜெனிவாவில் இடம்பெறுகின்ற மனித உரிமைகள் மாநாட்டில் சமர்ப்பிக்கப்பட்டுள்ள இலங்கைக்கு எதிரான பிரேரணையின் விவாதத்தில் கலந்து கொள்வதற்கான இந்தியக் குழு நியமிக்கப்பட்டுள்ளது.

இந்தக் குழுவிற்கு இந்திய சமாஜவாடி கட்சியின் தலைவர் முலாயம் சிங் யாதவ் தலைமை வகிக்கிறார்.



இந்திய வெளியுறவுத்துறை அமைச்சர் சல்மான் குர்ஷித் இதனைத் தெரிவித்துள்ளார்.

அமெரிக்காவினால் தயாரிக்கப்பட்ட இந்த பிரரேரணைக்கு ஆதரவளிக்க வேண்டும் என்று தமிழக கட்சிகளும், இந்திய எதிர்கட்சிகளும் இந்தியாவிற்கு அழுத்தம் கொடுக்கின்றன.

எனினும் நாம் தமிழர்களையோ, அல்லது இலங்கை அரசாங்கத்தையோ நேரடியாக பகைத்துக் கொள்ள விரும்பவில்லை என்று சல்மான் குர்ஷித் தெரிவித்துள்ளார்.

இந்த நிலையில் இந்த பிரேரணை மீதான வாக்கெடுப்பில், முலாயம் சிங் யாதவ் சிறந்த தீர்மானத்தை மேற்கொள்வார் என்ற நம்பிக்கை இந்திய மத்திய அரசாங்கத்துக்கு இருப்பதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

# அளவைகளுக்கு முத்திரையிடல்

(சாவகச்சேரி)

சாவகச்சேரி நகரசபை எல்லைக்குட்பட்ட வர்த்தகர்களுடைய நிறுத்தல் அளவைக் கருவிகளுக்கு முத்திரையிடும் நடவடிக்கைகள் சாவகச்சேரி நகராட்சி மன்ற வளாகத்தில் நாளை திங்கட்கிழமை மற்றும் 12, 14, 15 ஆம் திகதிகளில் நடைபெறவுள்ளது.

யாழ்.மாவட்ட செயலக அளவீட்டு அலகு நியமனங்கள் சேவைப் பகுதியினரால் அளவைக் கருவிகள் பரிசோதிக்கப்பட்டு முத்திரையிடும் பணிகள் மேற்கொள்ளப்படவுள்ளது.

எனவே வர்த்தகர்கள் குறித்த தினங்களில் காலை 9 மணிக்கும் பிற்பகல் 1 மணிக்கும் இடையில் வருகை தந்து தமது நிறுத்தல் கருவிகளுக்கு முத்திரையிடுமாறு நகரசபைத் தவிசாளர் அறிவித்துள்ளார். (11)

# மருந்துப் பொருட்களுக்கு விலைக் கட்டுப்பாடு

(கொழும்பு)

மருந்துப் பொருட்களுக்கு விரைவில் விலைக் கட்டுப்பாடு கொண்டுவர உள்ளதாக சுகாதார அமைச்சர் மைத்திரி பால சிறிசேன தெரிவித்துள்ளார்.

இதன் முதற்கட்டமாக சகல மருந்துப் பெட்டிகளிலும் மருந்தின் விலைகளை பொறிக்குமாறு பணித்துள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

ஒவ்வொரு நிறுவனமும் வெவ்வேறு விலைகளில் மருந்து வகைகளை விற்பனை செய்கின்றன. இந்த நிலையில் மருந்து விலைக் கட்டுப்பாடொன்றை கொண்டுவர திட்டமிட்டுள்ளோம். முதலில் அவற்றின் விலைகளை தெளிவாக அச்சிடுமாறு உத்தரவிட்டுள்ளோம்.

அடுத்த கட்டமாக சகல மருந்துகளுக்கும் விலைக்கட்டுப்பாடு கொண்டு வர உள்ளோம். இதனூடாக வர்த்தகர்கள் தமக்கு விரும் பிய விலைகளில் மருந்து விற்பது தடுக்கப்படும் எனத் தெரிவித்தார்.

# அரசியல் தலையீடுகளால் கல்வித்துறை சீரழிவு

### சஜித் எம்.பி குற்றச்சாட்டு



அரசியல் தலையீடுகள் ஒட்டுமொத்த கல்வித்துறையையும் சீரழித்துக்கொண்டிருப்பதாகவும் நாட்டில் 73 சதவீதமான மாணவர்களின் மதிய உணவினை இல்லாதொழித்திருப்பதாகவும் ஐக்கிய தேசியக் கட்சி எம்.பி. சஜித் பிரேமதாச சபையில் தெரிவித்தார்.

நாட்டில் இலவசக் கல்வி நடைமுறையில் இருக்கின்ற தற்காலத்தில் மாணவர்களிடமிருந்து பணம் அறவிடப்படுவது எதற்காக என்றும் அவர் கேள்வி யெழுப்பியுள்ளார்.

அம்பாந்தோட்டை ஜனாதிபதியினது மாவட்டமாகும். அங்கு இயங்கும் ஒரு பாடசாலையில் மாணவர்களிடமிருந்து 4000 ரூபா பாடசாலை நிர்வாகத்தினால் கோரப்பட்டுள்ளது. இந்த பணத்தை திரட்டிக்கொள்ள முடியாத நிலையில் தந்தையொருவர் தனது குடும்ப ஜீவனோபாயத்துக்கான படகினை விற்று பணத்தை செலுத்தியுள்ளார்.

எனவே இன்று ஒட்டுமொத்த கல்வித்துறையும் பாரிய சீரழிவினை எதிர்கொண்டிருக்கின்றது. அது மாத்திரமின்றி கல்வித்துறை முற்றுமுழுதாக அரசியல் மயப்படுத்தப்பட்டுள்ளது எனத் தெரிவித்தார்.

# பேருந்துக்காக காத்திருந்த பெண் மீது வல்லுறவு முயற்சி

(புங்குடுதீவு)

பேருந்துக்காக காத்திருந்த இளம் பெண் மீது பாலியல் வல்லுறவுக்கு முயற்சித்த குடும்பஸ்தர் ஒருவர் பொது மக்களால் நையப்புடைக்கப்பட்ட சம்பவம் ஒன்று நேற்று புங்குடுதீவு - மடத்துவெளியில் இடம்பெற்றுள்ளது.

சம்பவம் பற்றி மேலும் தெரியவருவதாவது,

நேற்றைய தினம் பிரஸ்தாப பெண் பேருந்துக்காக வீட்டிற்கு அருகில் காத்திருந்துள்ளார். அவ்வேளை மரண வீடு ஒன்றிற்காக வந்திருந்த கிளிநொச்சியைச் சேர்ந்த 52 வயது மதிக்கத்தக்க குடும்பஸ்தர் ஒருவர் மதுபோதையில் அப்பெண்ணை பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்த முயற்சித்துள்ளார். அவ்வேளை குறித்த பெண் கூச்சலிடவே அயலவர்கள் அவ்விடத்திற்கு விரைந்து வந்து வல்லுறவுக்கு முயற்சித்தவரை நயப்புடைத்ததோடு சம்பவம் பற்றி பொலிஸாருக்கு தகவல் வழங்கப்பட்டது. ஸ்தலத்திற்கு விரைந்த ஊர்காவற்றுறைப் பொலிஸார் சந்தேக நபரைக் கைது செய்து விசாரணைகளை மேற்கொண்டுள்ளார்.

# சுதந்திரக் கட்சி சிரேஷ்ட உறுப்பினர்களை விரைவில் சந்திக்கிறார் சந்திரிகா

(கொழும்பு)

சிறி லங்கா சுதந்திரக் கட்சியின் சிரேஷ்ட உறுப்பினர்களுடன் முன்னாள் ஜனாதிபதி சந்திரிக்கா குமாரதுங்க பேச்சுவார்த்தை நடாத்தத் திட்டமிட்டுள்ளதாகத் தெரிவிக்கப் படுகிறது.

ஒவ்வொரு தேர்தல் தொகுதி வாரியாக இந்தப் பேச்சு வார்த்தைகள் நடத்தப்படவுள்ளதாகக் குறிப்பிடப்படுகிறது.

தேசிய அரசாங்கமொன்றை அமைக்கும் நோக்கிலேயே பேச்சுவார்த்தைகள் நடத்தப்படவுள்ளதாகத் தெரிகின்றது.

முதல் கட்டப் பேச்சுவார்த்தை இம்மாத இறுதியில் குருணாகலில் நடத்தப்படவுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் சிரேஸ்ட உறுப்பினர் ஒருவரே இந்தக் கூட்டங்களை ஒழுங்கு செய்து வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.


## வெளிநாட்டு பட்டக்கல்வி & தொழில்வாய்ப்பு

**பிரித்தானியா, அவுஸ்திரேலியா, கனடா, அமெரிக்கா, மலேசியா**

- பல்கலைக்கழக பட்டக்கல்வி வாய்ப்புக்கள்
- 50,000/= வருமானத்துடனான தொழிற்கல்வி
- 100,000/=உடனான தொழில்வாய்ப்புக்கள்

| பட்டக்கல்வி வாய்ப்புக்கள் | தொழிற்பயிற்சி & தொழில்வாய்ப்பு |
|---|---|
| மார்ச் 14 வியாழன் 10 மணி<br>யாழ்.ஞானம்ஸ் ஹொட்டேல்<br>(A/L 3C யுடன் 3 வருடத்தில் பட்டக்கல்வி<br>O/L 5Cயுடன் 4 வருடத்தில் பட்டக்கல்வி) | மார்ச் 16 சனி 10 மணி<br>வவுனியா நெல்லி ஸ்ரார் ஹொட்டேல்<br>மார்ச் 17 ஞாயிறு 10 மணி<br>யாழ்.ஞானம்ஸ் ஹொட்டேல்<br>(O/L தேர்ச்சி இல்லாதவர்களும் இணையலாம்) |

பல்கலைக்கழக பிரதிநிதிகள் Kumara Raj மற்றும் Ryan Kok
ஆகியோரை நேரில் சந்தித்து அனுமதி பெற வாருங்கள்

**முற்பதிவுகளுக்கு : 077 36 16 798**

பல்கலைக்கழக அனுமதி முதல் பட்டம், தொழில் பெறும் வரையில்
கூடவே இருந்து வழிகாட்டும் ஒரே நிறுவனம்

சிகரம் SIKARAM
MEDIA & EDUCATION
கல்வி - தொழில் வழிகாட்டி

இல.221, பலாலி வீதி, கந்தர்மடம்,
யாழ்ப்பாணம். தொ.பே.: 021 300 80 60,
நேரடி: 0773 616 798
Email: edusikaram@gmail.com
www.sikaram.lk


# புகலிடக் கோரிக்கையாளரை சுவிஸ். திருப்பி அனுப்பக் கூடாது

## ஜெனிவாவில் இன்று ஆர்ப்பாட்டம்

(கொழும்பு)

புகலிடக் கோரிக்கையாளர்களை சுவிட்சர்லாந்து திருப்பி அனுப்பக் கூடாதென ஜெனிவா ஐக்கிய நாடுகள் அமைப்பு காரியாலயத்திற்கு எதிராக ஆர்ப்பாட்டம் நடத்தப்படவுள்ளது.

இன்றைய தினம் இந்தப் போராட்டம் நடத்தப்பட உள்ளதாகக் குறிப்பிடப்படுகிறது. புகலிடம் மறுக்கப்பட்ட இளைஞர்களினால் இந்தப் போராட்டம் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இந்த போராட்டத்தின் பின்னர் புகலிடக் கோரிக்கையாளர்களை அசௌகரியங்கள் தொடர்பில் ஐக்கிய நாடுகள் மனித உரிமைப் பேரவையின் ஆணையாளர் நவநீதம்பிள்ளையிடம் மகஜர் ஒன்று ஒப்படைக்கப்படவுள்ளது.

யுத்த நிறைவின் பின்னர் புகலிடக் கோரிக்கைகள் நிராகரிக்கப்பட்டு வருவதாகக் குற்றம் சுமத்தப்பட்டுள்ளது. மெய்யான புகலிடக் கோரிக்கைகளை சுவிட்சர்லாந்து அரசாங்கம் உதாசீனம் செய்து வருவதாக போராட்டக்காரர்கள் குற்றம் சுமத்தியுள்ளனர்

இப்பத்திரிகை இல.373 பிரதான வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் அமைந்துள்ள அற்புதன் அச்சகத்தில் 2013 மார்ச் 10 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.